கோகுலம்

GOKULAM

மே '90 விலை ரூ. 3/–





ஓடி விளையாடும் போது,
பாடி மகிழும் போது...

மகிழ்ச்சி மேலும் பெருகவே
ஃபன்பைட் கையில் இருக்குதே.



காம்ப்கோ வழங்கும்
ஃபன் பைட்.

க்ரீம் நிறைந்த, அருமையான சாக்கலேட். இதன் உள்ளே மொறுமொறுவென வேஃபர். அதைச் சுற்றிலும் சுவையான சாக்கலேட்.

குதூகலமும் கொண்டாட்டமும் மேலும் சிறக்க.


இந்தியாவின் மிகப் பெரிய, அதிநவீன ஆலை அளிப்பது

காம்ப்கோ லிமிடெட், மங்களூர்

Other Campco chocolates: Milk · White · Treat · TURBO · Eclairs · mega bite · Playtime · RUBIES · TOFFEE

Campco beverages: WINNER · COCOA

R K SWAMY/CL/7804



கோகுலம்

1990 மே மாத இதழ்
மலர் : 8 ○○ இதழ் : 4



அன்புத் தம்பி, தங்கைகளே!


என்றென்றும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.
தேர்வுகள் முடிந்தாயிற்று. இனி உங்களை அடுத்த வகுப்பில்தான்
சந்திக்க வேண்டும். இடையில் விடுமுறை நாட்களில் என்ன செய்ய,
இருக்கிறீர்கள்? அதை வீணாக்கி விடாதீர்கள் என்பதற்காகத்தான் இந்த
மே தினம் ஒரு முரசு கொட்டிக் கொண்டு வருகிறது.
அந்த முரசறையும் ஓசை கேட்கிறதா உங்களுக்கு? உழைப்பு,
உழைப்பு, உழைப்பு! ஆம், உழைப்பாளர் தினமல்லவா?
இந்தத் தினம் ஏன் வந்தது என்று அரசியல் காரணமாய் ஏதேதோ
கதைகள் உண்டு. அதெல்லாம் நமக்கு வேண்டாம். மே தினம் அழுத்த
மாய்க் குத்தும் முத்திரை என்ன? உழைப்பு, உழைப்பு, உழைப்பு!
விழி, எழு, உழை! உலகம் உய்ய சுவாமி விவேகானந்தர் முழக்கிய
தாரக மந்திரம்.
இயந்திரங்கள் முடுக்கிவிட்டால் ஓடும்; விலங்குகள் ஏவி விட்டால்
செய்யும். தானாக உழைக்கத் தெரிந்தவன் மனிதன். அந்த உழைப்பி
னால் உயரக் கற்றவன் மனிதன். அறிவின் பயனை அனுபவிக்க உழைப்
பினால்தான் பாலம் போட முடியும் என்று பகுத்தறிந்து கண்டவன்
மனிதன்.
அகில உலகும் மெச்ச அதிசயங்கள் காட்டுகிற நாட்டிலே அதிகப்படி
யாய் என்ன இருக்கிறது? உழைப்பு!
அறிவைத் துருவி வைத்து விஞ்ஞான சாதனைகள் புரிகிறவர்களிடம்
அதிகப்படியாய் என்ன இருக்கிறது? உழைப்பு.
அந்த உழைப்பு, பொதி சுமக்கும் மாட்டின் உழைப்பு அல்ல;
பூவும் மணமும் போல் புத்திக்கூர்மையுடன் பிணைந்த உழைப்பு.
உழைப்பு என்பது உடல் வலுவை மட்டும் மூலதனமாய் வைத்துச்
செய்யக் கூடியதல்ல. அதனால்தான் 'புத்திமான் பலவான் ஆவான்'
என்று தொன்று தொட்டு ஒரு வாக்கு நின்று நிலைபெற்றிருக்கிறது.
உழைப்பின் தீவிர எதிரி கடந்த கால இழப்புக்களை எண்ணிப்
பொருமுவதன் மூலம் எழுப்பிக் கொள்ளும் சோர்வு. 'சென்றதினி
மீளாது மூடரே!' என்றார் பாரதியார்.
கடந்த கால இழப்பில் நமக்குக் கிடைத்த படிப்பினை என்ன?
அதுதான் நமது எதிர்கால உழைப்புக்கு வழிகாட்டி. அந்த அளவோடு
வைத்துக் கொண்டு நடந்ததை மறந்துவிட்டு நடக்க வேண்டியதைக் கவ
னிக்கிறவன் மேலே மேலே மேலே போய்க் கொண்டே இருக்கிறான்.
நீங்கள் மனிதராய் — உழைக்கும் மனிதராய் வாழ என் உளம்
கனிந்த ஆசிகள்.

அன்பு அண்ணன்,


தேசபந்து

(கௌரவ ஆசிரியர்)





இந்த இதழில்



அது ஓர் அமைதியான குன்று. 'ஜபல்-உ-ஆ-நூர்' என்று பெயர். ஒளிக்குன்று என்பார்கள். அதில் ஒரு குகை. கர்-இ-ஹிரா என்று அழைப்பார்கள். அதனுள், ஒருவர் ஏகாந்தமாக அமர்ந்து, கண்மூடி இறைவனை மனத்தில் எண்ணித் தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அப்போது திடீரென்று, ஒரு குரல்! — "வாசி... வாசி..." என்றது. அதாவது, 'படி... படி....' என்று கேட்டுக் கொண்டது.

அவர் திடுக்கிட்டுக் கண் விழித்தார். எதிரில் சூரிய கோடிப் பிரகாசமான ஒளி! அதனோடே ஒரு தேவதை. அவர் நிமிர்ந்து பார்த்தார். தேவதை மீண்டும், "வாசி..." என்றது.

அவருக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. ஏனெனில் அவர் படிப்பறிவு இல்லாதவர். எப்படிப் படிப்பது என்று கலங்கினார். தேவதையோ, மீண்டும் மீண்டும், "வாசி... வாசி," என்று கூறிக் கொண்டே இருந்தது. கடைசியில், அவர் துணிந்து தன் இயலாமையைக் கூறிவிட்டார்.

"எப்படி 'வாசிப்பேன்? எனக்குப் படிக்கத் தெரியாதே...:."

அதற்கு அந்தத் தேவதை பதில் ஏதும் கூறாமல், மீண்டும் ஒரு தடவை 'வாசி' என்று கூறிவிட்டு மறைந்து விட்டது.

அடுத்த ஆண்டும் அதே மாதத்தில், அந்த தேவதை அவரிடம் வந்து தோன்றி, "வாசி... வாசி..." என்றது. அவரும், "எனக்குப் படிக்கத் தெரி

புனித ரம்ஜானின் புண்ணிய வரலாறு



யாதே...'' என்று பதில் கூறினார்.

இவ்வாறு ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து அதே மாதத்தில் தேவதை வந்து தோன்றி, ''வாசி.... வாசி...'' என்றது. அவரிடம் அதே பதில் தான்.

இறுதியாகத் தேவதை தோன்றிய போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

வழக்கம் போல் அவர், ''எனக்கு வாசிக்கத் தெரியாதே..'' என்றார்.

உடனே தேவதை பேசத் தொடங்கி விட்டது. ''இந்த உலகத்தையும் மனிதர்களையும் படைத்தவன் தான் இறைவன். அவன் பெயரால் சொல்கிறேன், வாசி...'' என்றது.

எனினும் அவரிடம் தயக்கம். தேவதை தொடர்ந்து, ''தான் படைத்த மனிதனுக்குத் தெரியாததை அவர் கற்றுத் தருவார். உனக்குப் படிக்கத் தெரியாது என்கிறாய். அவர் உனக்குப் படிக்கக் கற்றுத் தருவார். வாசி,'' என்றது.

அவ்வளவுதான். அவருக்கு இறைவன் மீது நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தன்னால் வாசிக்க முடியும் என்ற உறுதி அவர் மனத்தில் ஏற்பட்டு விட்டது. அதே சமயம், அவர் காதில் சில செய்திகள் ஒலிக்கத் தொடங்கி விட்டன. என்ன செய்தி தெரியுமா?

''இன்று நான் உன்னுடைய மனத்தைச் செம்மைப் படுத்தியுள்ளேன். எனது கருணை முழுவதையும் உனக்குத் தாரை வார்த்து விட்டேன். உனக்கு ஒரு மதத்தைத் தேர்ந்தெடுத்து அளித்து விட்டேன்,'' என்பதுதான் அந்தச் செய்தி.

இச் செய்தியைத் துவக்க வாக்கியங்களாகக் கொண்டு, அதன் பிறகு, அவர் காதில் இறை வசனங்கள் ஒவ்வோர் ஆண்டும், அதே மாதத்தில் பகுதி பகுதியாக ஒலித்துக் கொண்டே இருந்தன. முதல் வசனம் கி. பி. 610'ல் ஒலித்தது. அதன் பிறகு தொடர்ந்து 23 ஆண்டுகள் இறை மொழிகள் வெளிப்பட்டன.

இப்படி மொழிந்தவர் யார்? அவர் தான் அல்லா என்ற இறைவன். அவர் தேர்ந்தெடுத்து அளித்த மதம்தான் இஸ்லாம் சமயம். யாருடைய காதில் அல்லா தனது இறை வசனங்களை ஓதினார் தெரியுமா? அவர் தான் முகம்மது நபி. மெக்கா நகருக்கு அருகில் உள்ள குன்றின் கர்-இ-ஹிரா அதாவது சுருக்கமாக 'ஹிரா' குகையில் ரம்ஜான் மாதத்தில் அவர் தியானத்தில் ஈடுபட்டிருந்த போது தான், அந்த அதிசயம் நிகழ்ந்தது. அவ்வாறு வெளிப்பட்ட வசனங்களின் தொகுப்புத்தான் இஸ்லாமியரின் புனித நூலாகிய திருக்குர்ஆன் என்பது. அது தோன்றிய மாதம்

ஜானகி மணாளன்

தான் ரம்ஜான். எனவே அம்மாதத்துக்கு ஒரு சிறப்பு. அதன் பிறகு, ஒவ்வொரு ரம்ஜான் மாதத்திலும் கேபிரியல் என்ற அந்த தேவதை அவர் முன் தோன்றியது. அப்போது முகம்மது அதுவரையில் வெளிப்பட்ட குர்ஆன் பகுதிகளை ஒன்றாகச் சேர்த்து ஓதுவார். அவரது இறுதி ஆண்டு ரம்ஜான் மாதத்தில் முழுக் குர்ஆனையும் இருமுறை ஓதுமாறு கேபிரியல் ஆணையிட்டது. நபி அவ்வாறே செயதார்.

திருக்குர்ஆன் தோன்றிய மாதம் என்பதால் மட்டும் ரம்ஜான் மாதத்துக்கு அத்தனை சிறப்பு என்பதில்லை. இன்னும் பல சிறப்புக்களும் அம் மாதத்துக்கு உண்டு. குர்ஆன் மனிதனுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதை உணர்த்துகிறது. எனவேதான் அந் நூல் தோன்றிய மாதத்தில், தம்மிடம் உள்ள கெட்டதுகளைப் போக்குவதற்காக இஸ்லாமியர் நோன்பு இருக்கிறார்கள். அந் நோன்பின் மூலம், மனிதனின் பாவங்கள் சுட்டெரிக்கப்படுகின்றன. எனவே 'ரம்ஜான்' என்ற சொல்லுக்கு 'சுடும்கல்' என்றும் பொருள் கூறுகிறார்கள். அது மட்டுமல்ல. மழைக்கால மழைக்கு 'ரம்த்' என்று பெயர். இந்த 'ரம்த்' என்ற சொல்லிலிருந்து தான் ரம்ஜான் என்ற பெயர் வந்தது என்று சொல்கிறார்கள். அதற்கும் தனிப் பொருள் உண்டு. மழை நீர் இந்தப் புவித் தரையைக் கழுவிச் சுத்தம் செய்கிறது. அதே போல், இந்த மாதம், மனிதனின் உடல் மற்றும் மனத்தின் மாசுகளை — அதாவது பாவங்களைக் கழுவிச் சுத்தம் செய்கிறது என்ற பொருளில், 'ரம்த்' என்பதை ரம்ஜான் என இந்த மாதத்தை அழைக்கிறோம். மேலும் இறைவனின் பல பெயர்களில் 'ரம்ஜான்' என்பதும் ஒன்று.

முகம்மதுவுக்கு முன்பும் பல தீர்க்கதரிசிகள் இப்பூவுலகில் இறை தூதுவர்களாக வந்துள்ளனர். அவர்களில் ஆப்பிரகாம், மோசஸ், இயேசு போன்றோர் சிலர். அவர்களும் பல நற்செய்திகளை உலகுக்கு அளித்துள்ளனர். அவ்வரிசையில் கடைசியாக வந்தவர்தான் முகம்மது நபி. மேற்கூறியவர்களின் புனிதப் படைப்புக்களை, இஸ்லாம் உண்மை என்று நம்புகிறது. அவை எல்லாமும் இந்த ரம்ஜான் மாதத்திலேயே வெளிப்பட்டதாகக் கூறுகிறார்கள். அதனாலும் இந்த ரம்ஜான் மாதம் உயர்வு பெறுகிறது.

இஸ்லாமியரின் மாதங்கள் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றன. ரம்ஜான் மாதம் ஒவ்வோர் ஆண்டும், ஆண்டு முடிவதற்கு 11 நாட்கள் முன்பு வருகிறது. எனவே இம் மாதம் குறிப்பிட்ட பருவத்தில் என்று நிரந்தரமாக வருவதில்லை. உலகம் முழுவதும்



எல்லாப் பருவங்களிலுமாகக் கிரமப் படி மாறி வருகிறது. எனவே, குளிர், வெயில், பனி, மழை என்று எந்தக் காலமாக இருந்தாலும், ரம்ஜான் மாதம் மாறி மாறி வருவதால், எல்லாப் பருவங்களிலும் நோன்பு இருக்க அவர்கள் பழக்கப்படுகின்ற னர். ரம்ஜான் நோன்பு என்பது ஓர் உடல், மனம் மற்றும் தெய்வீகக் கட்டுப்பாடு. அதன் குறிக்கோள் நற்கதி அடைதல் என்பதுதான்.

அந்த நோன்பு சமயத்தில், உணவு, மற்றும் பானங்களை அருந்துவதில் ஓர் ஒழுங்கு முறையை அவர்கள் பின் பற்றுகிறார்கள். அத்துடன் மனக் கட்டுப்பாட்டுடன் இறைவழிபாட்டி லும் ஈடுபடுவதால், அவர்களால் ஆழ்ந்த தொழுகையிலும் ஈடுபட முடி கிறது. மனிதனின் நடத்தைக் குறை பாடுகளைப் போக்கிக் கொள்ளா மல், உணவு, பானங்கள் போன்றவற் றில் மட்டும் ஒழுங்கைக் கடைப் பிடித்து நோன்பு இருப்பதால் அத னால், எந்தப் பயனும் இல்லை என் கிறார் நபிநாயகம்.



ரம்ஜான் மாதத்தில், சுவர்க்கத்தின் கதவுகள் திறந்தே உள்ளன. எனவே, அம் மாதத்தில் செய்யப்படும் எந்த ஒரு சிறிய நற்செயலும், பல மடங்கு நற்பயன்களை தருகின்றது. அத்த கைய நற்செயல்களில் முக்கிய இடம் பெறுவது பகலில் உண்ணா நோன்பு. என்றாலும் மேலும் பல நற்செயல் களையும் அவர்கள் செய்கிறார்கள். தொடக்கம் முதல் இறுதி வரையி லான முழுத் திருக்குர்ஆனையும் திரும்பத் திரும்ப ரம்ஜான் மாதத்தில் ஓதுகிறார்கள். அதற்கு 'சலாத்' என்று பெயர். ஏழை எளியவர்களுக்கு இயன்ற வரையில் பலவித உதவி களைச் செய்கிறார்கள். தான தருமங் களைச் செய்கிறார்கள். அதற்கு 'ஜகாத்' என்று பெயர். இஸ்லாமியர் தினசரி ஐந்து வேளை இறைவனை வணங்குவார்கள். அதற்குத் 'தொழுகை' எனப் பெயர். ரம்ஜான் மாதத்தில் ஆறாவதாக ஒரு தடவை தொழுகிறார்கள். அது ஒரு பிரத்தி யேகத் தொழுகை. அதற்கு 'தாராவி' என்று பெயர்.

ரம்ஜான் மாதத்தின் சிறப்புக்கு இன்னொரு காரணமும் உண்டு. அது முகம்மது நபியின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி. அதுவும் பெரும் போர். அதில் முகம்மது வெற்றி பெற்றார். அந்தப் போருக்கு 'பாத்ர்' என்று பெயர். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு வந்த ரம்ஜான் மாதத்தின் 17 — ஆம் நாள் அப்போர் நடந்தது. ஒரு பக்கம் முகம்மது நபி. அவருடன் மத நம் பிக்கை கொண்ட மெதினாவின் 313 புதிய முஸ்லிம் வீரர்கள். அவர்க ளிடம் எந்தவித ஆயுதமும் இல்லை. அவர்களது ஆயுதமெல்லாம் திருக் குர்ஆனின் மீது அவர்கள் கொண் டிருந்த நம்பிக்கைதான். அத்துடன்

அடுத்த இதழில்

உங்களுக்காகப் புத்தகப் பேழைகள் காத்திருக்கின்றன!

கூட, இறைவன் நம்மைக் காப்பான் என்ற மன உறுதியும் அவர்களிடம் இருந்தது.

ஆனால் எதிரிகளோ மிகுந்த பலம் பொருந்தியவர்கள். அங்கு ஆயிரக் கணக்கானோர் இருந்தனர். அனைவரிடமும் பல்வேறு ஆயுதங்கள். அத்துடன் நல்ல போர்ப் பயிற்சியும் பெற்றவர்கள். என்றாலும் அவர்கள் மெதினா படையிடம் தோற்றனர். அவர்கள் தெய்வ நம்பிக்கை அற்றவர்களாக இருந்ததும் அதற்கு முக்கிய காரணம். முகம்மது நபியால் எவ்வாறு வெற்றி பெற முடிந்தது?

நபியும் அவரது வீரர்களும் 'பாத்ர்' என்ற இடத்தில் ஒரு கிணற்றுக்கு அருகில் வந்து நிலை கொண்டனர். அது ஒரு மணற்பாங்கான பிரதேசம். எனவே அங்குமிங்கும் நடமாடுவதற்குக் கடினமான இடம். படையில் இருந்த சிலர், ''மணலில் நம்மால் விரைவில் நடக்க முடியாது; இங்கு தங்கினால் எதிரியிடம் தோற்றுத்தான் போவோம்,'' என்றனர்.

ஆனால் நபி சொன்ன பதில் நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. ''நமது வீரர்கள் களைத்துப் போகும் போது, அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும்; அது இங்கு இந்தக் கிணற்றிலிருந்து கிடைக்கும். ஆகவே, இதுவே சரியான இடம்,'' என்றார்.

மெக்கா படையினர், அவர்களுக்கு எதிரில் சற்றுத் தொலைவில் தங்கினர். அது களிமண் பிரதேசம். கெட்டிப் பட்ட தரை. அதைப் பற்றி முகம்மது கவலைப்படவில்லை. மெல்ல மெல்ல இரவு வந்தது. ரம்ஜான் மாத இரவு. முகம்மது தமது பெரும்பகுதி நேரத்தைத் தியானத்திலும் பிரார்த்தனையிலும் கழித்தார். அவரது பிரார்த்தனை பலித்தது. எப்படித் தெரியுமா?

மெல்ல மெல்லப் பொழுது விடியவும், மழை கொட்டத் தொடங்கவும் சரியாக இருந்தது. கொட்டும் மழையில் அவர்கள் தங்கியிருந்த மணல் தரை, மழை நீரை உறிஞ்சிக் கெட்டிப்பட்டது. அவர்களால் எளிதில் நடமாட முடிந்தது. அதற்கு மாறாக, எதிரிகளின் களிமண் தரை, மழை நீரின் காரணமாக நனைந்து, ஒரே சேறாகிவிட்டது. அவர்களால் நடக்க முடியவில்லை. வழுக்கி விழத் தொடங்கி விட்டனர். அந்த 'பாத்ர்' போர் தொடங்கியதும், இஸ்லாம் படையினர் துணிவுடன் போரிட்டனர். மெக்கா படையினர் பலமிழந்து தோற்றுப் போயினர். எதிரிகளின் தளபதியும் அபுஜால் என்பவரும் படுகாயமுற்றனர். பலமற்றிருந்த முகம்மதுவின் வெற்றிக்கு என்ன காரணம்? இரவு முழுவதும் அவர் இறைவனை எண்ணிப் பிரார்த்தித்ததுதான் அல்லவா? முஸ்லீம்களின் இறை நம்பிக்கை அந்த இரவில் வலுப்பெற்றது.

இன்றும் கூட முஸ்லிம்கள் அந்த இரவைச் 'சக்தியூட்டும் இரவு' என்கிறார்கள். அதாவது 'லய்யத் — உல் — காதிர்' எனப்படுகிறது. ஆனால் ஒன்று. அந்தச் சக்தியூட்டும் இரவு பற்றிக் குர் ஆனில் கூறப்படுகிறதே தவிர, ரம்ஜானின் எத்தனையாவது இரவு என்று கூறப்படவில்லை. ஆயினும், 23, 25 அல்லது 27 — ஆம் இரவு என்று முஸ்லீம்கள் நம்புகிறார்கள். பெரும்பாலானோர் 27 வது இரவு என்கிறார்கள். எப்படி ஆயினும் ரம்ஜானின் கடைசிப் பத்து தினங்களுக்குள் அந்த இரவு வந்தாக வேண்டும், இல்லையா?

எனவே ரம்ஜானின் கடைசிப் பத்து நாட்கள்தான் மிகவும் முக்கியமானவை. அவர்கள் கொண்டிருக்கும் இறை பக்தியுணர்வின் உச்சக் கட்டம் அதுதான். பகலில் அவர்கள் எந்த உணவையும் உட்கொள்ள மாட்டார்கள். தண்ணீர் கூடக் குடிக்க மாட்டார்கள். மிகவும் தீவிர நோன்பு

இருப்பவர்கள், வாயில் ஊறும் உமிழ்நீரைக் கூட உள்ளே விழுங்க மாட்டார்கள். சில முஸ்லீம்கள், வேறு எந்தவிதச் செயல்களிலும் ஈடுபடாமல், மசூதியிலேயே தங்கி, திரும்பத் திரும்பத்திருக்குர்ஆனை ஓதுவதிலும், இறை சிந்தனையிலும் தொழுகையிலுமே தம்மை ஈடுபடுத்திக் கொள்வார்கள். 'லய்யத் — உல் — காதிர்' எனப்படுவது இதைத்தான் குறிக்கும். இதன் மூலம், தம்மிடம் உள்ள குற்றம் குறைகளைப் போக்கிக் கொள்ளும் முஸ்லீம்கள், வரும் மாதங்களில் பல நல்ல செயல்களைச் செய்வதற்குத் தமக்கு இறைவனின் அருள் கிடைத்துத்தமக்குத்தாமேஒருபுதியசக்தியைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு முஸ்லீமும் இந்த ரம்ஜான் நோன்பை அவசியம் காக்க வேண்டும் என்பது விதி. என்றாலும், குழந்தைகள், நோயாளிகள், வயோதிகர்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோருக்கு நோன்பு காப்பதிலிருந்து விலக்கு உண்டு. நோன்பு காப்பதை அவர்கள் 'நோன்பு பிடித்தல்' என்றும் கூறுவார்கள்.

சந்திரப் பிறையைப் பார்த்துவிட்டு அவர்களின் மதத் தலைவர்கள் ரம்ஜானில் கடைசி இரவு பற்றி அறிவிப்புச் செய்வார். உடனே அனைத்து இஸ்லாமியரும் 'அந்தக் கண்டசி இரவோடு நோன்பை நிறைவு செய்து கொள்வார்கள். அந்த இரவு முடிந்ததும் பொழுது விடிய, ரம்ஜான் மாதத்துக்கு அடுத்த மாதமான ஷவ்வால் மாதம் பிறக்கும். அன்றுதான் அவர்கள் 'ரம்ஜான் பண்டிகையை உல்லாசமாகக் கொண்டாடுவார்கள். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நல்வாழ்த்துக் கூறுவார்கள். இனிப்புக்களையும் பரிசுகளையும் வழங்குவார்கள்.

உங்களுக்கெல்லாம் சில இஸ்லாமிய நண்பர்கள் இருப்பார்களே! அன்றைய தினம் நீங்கள் அவர்களுக்கு வாழ்த்துக் கூறுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் நம்மிடையே ஜாதி, மத இன பேதங்கள் தோன்றாமல், 'நாம் அனைவரும் இந்தியர்' என்ற ஒற்றுமை உணர்வை நாம் பெற முடியும்!

இந்த விடுமுறைக்கு

கோடை விடுமுறை வந்துவிட்டாலே, எந்த ஊருக்குப் போகலாம்; என்ன பார்க்கலாம் என்று யோசிப்பீர்கள் இல்லையா? அதோடு, அடுத்த வகுப்புக்குப் போன பிறகு, 'விடுமுறையில் எங்கே போனீர்கள்?' என்ற கேள்விக்குக் கட்டுரை எழுதவும் தயாராக இருப்பீர்கள். இங்கே சில மாணவர்கள் தங்கள் விடுமுறை அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆர். மதுப்ரியா:

நான் ஊட்டிக்குப் போயிருந்தேன். சிம்ஸ் பார்க் அழகான பூங்கா. அங்கே, அடடா, எவ்வளவு விதவிதமான பூக்கள்! ஆயிரம் வகை இருக்குமா? அதிகமாகக் கூட இருக்கும். எல்லாப் பூவையும் பறிச்சு அப்படியே தலையிலே வெச்சுக்கணும்னு ஆசையா இருந்தது. ஆனால் பூவைப் பறிக்கக் கூடாதுன்னு எழுதி வைச்சிருந்தாங்க. எவ்வளவு அழகான இயற்கைக் காட்சிகள்! ஏரியிலே படகுகள் மிதக்கும் காட்சி இன்னிக்கும் என் மனசிலே இருக்கு! அங்கே செடிகளில் உலகத்து வகைகள் எல்லாம் இருக்கும் போல இருந்தது. பொடானிகல் கார்டனில் அந்தச் செடிகளைப் பல மிருகங்களின் வடிவில் அழகாக வெட்டி விட்டிருந்தார்கள். அந்த ஊரின் குளிரும் இதமாக, ரொம்பவும் ரசிக்கத் தகுந்ததாக இருந்தது. அந்த இயற்கைக் காட்சிகளைப் பார்க்கிறதுக்காகவே மறுபடி அங்கே போகணும் போல இருக்கு. டிராயிங் போர்டு, பேப்பர், கலர், பிரஷ் எல்லாம் எடுத்துக்கிட்டுப் போய் அந்த இயற்கைக் காட்சிகளை அப்படியே தத்ரூபமாக வரையணும்.

ஜி. சுப்பிரமணியன்:

ஏற்காடுக்குப்போயிருந்தேன். இது மலைப் பகுதியானதால் பசுமையான பள்ளத்தாக்குகளும் மலைகளும், அப்பப்பா! ரொம்ப அழகு. இங்கே இன்னும் பழைய பழக்கங்களிலிருந்துவிடுபடாதமலைச்சாதியினரைப் பார்த்தேன். இவர்களிலே சிலர் மலையை விட்டுக் கீழ் இறங்கி ஊரையே பார்த்ததில்லேன்னு தெரிஞ்ச போது, ரொம்ப ஆச்சரியப்பட்டேன்.. இந்தக் காலத்து நாகரிகங்கள்ளாம் அவங்களுக்குத் தெரிஞ்சிருக்குமான்னு சந்தேகமா இருக்கு. கம்பளி மாதிரி துணி போர்த்திக்கிட்டு முண்டாசு கட்டிக்கிட்டு கையிலே கொம்போட அவங்களைப் பார்த்தா, பாவமாகவே இருந்தது. அடுத்த முறை ஏற்காடுக்குப் போய், அவங்கக்கிட்டே பேசணும், புது சமாசாரங்களையெல்லாம் அவங்களுக்குத் தெரியப்படுத்தணும்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன்.

ரூபா:

பம்பாய். எவ்வளவு சுறுசுறுப்பான நகரம்! பஸ், கார், லாரி மாதிரி இயந்திர வேகத்திலே மனுஷங்களும் அரக்கப் பரக்க ஓடறதைப் பார்த்தால், அவங்க பாதங்களுக்குப் பதிலாச் சக்கரங்களை மாட்டிக்கிட்டிருப்பாங்களோன்னு சந்தேகம் வரும். அவங்களைப் பார்த்தாலே நம்ப சோம்பலெல்லாம் ஓடி ஒளிஞ்சிடும்.


'கேட்வே ஆஃப் இந்தியா' அழகான இடம். அங்கேயிருந்து எல்லோரா குகைகளுக்கு மோட்டார் படகிலே போகலாம். அழகா இருக்கேன்னு பார்த்தால்... ஐயே! அந்த வாட்டர் பூரா டர்ட்டி,பேட் ஸ்மெல்...

நேருபிளானடோரியம் அற்புதமானஇடம். வான சாஸ்திரங்களைப் பத்தித் தினமும் டைம்–டேபிள் போட்டு அழகாகக் காட்சி விளக்கம் சொல்றாங்க. சூப்பர்ப். அப்படியே வானத்திலே நாமே 'ஜிவ்'னு பறக்கிற மாதிரி ஒரு ஃபீலிங். ரொம்ப த்ரில்லிங்கா இருந்தது. பாம்பே போறவங்க யாரும் இந்த

ஆர். மதுப்ரியா



ஜி. சுப்பிரமணியன்



ரூபா





வி. எஸ். என். அனுஜ்



ஜி. கணேஷ்



தீபா

நேரு பிளானடோரியத்தைப் பார்க்காம வரக் கூடாது.

வி. எஸ். என். அனுஜ்:

டில்லி, ஆக்ரா ரெண்டு இடமும் ஒர்த் லிவிங். டில்லியிலே ஷூவும் செருப்பும் எவ்வளவு மலிவு தெரியுமோ? வெறும் அம்பது ரூபாய்க்கு ஒரு ஜோடி ஷூ வாங்கலாம். விதவிதமான ஷூக்கள் எல்லாத்தையும் அப்படியே அள்ளி மூட்டை கட்டிக்கிட்டு வர ஆசைதான். ஆனால் அப்பாகிட்ட எப்படிப் பணம் கேட்கிறது?

ஆக்ரான்னதுமே உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே, பார்க்க வேண்டிய இடம் தாஜ்மகால்தான்னு! ஆமாம். அதோட அழகான பளிங்கு வேலைப்பாடு பார்த்துக்கிட்டே இருக்கச் சொல்லும். நான் அந்தப் பளிங்குச் சுவத்துகிட்டப் போய் கீழேயிருந்து மேல் நோக்கிப் பார்த்தேன். அந்தச் சுவர் பூராவும் என்னவோ எழுதினாற்போல இருந்தது. 'அது என்னப்பா எழுதியிருக்காங்கன்'னு? என் அப்பாவைக் கேட்டேன். 'அது திருக்குர் ஆன் — உருது பாஷையிலே, இந்தப் பளிங்குக் கல்லிலே செதுக்கியிருக்காங்க.' என்றார் அப்பா.

'கீழேயிருந்து பார்த்தால் கூட மேலே, இருபதடி உசரத்திலே இருக்கிற எழுத்தைப் படிக்க முடியும் போலிருக்கே?' அப்படின்னு கேட்டேன்.

''ஆமாம். கீழே சின்ன எழுத்தாகவும் மேலே போகப் போக இங்கிருந்தபடியே படிக்கிறதுக்கு வசதியா, பெரிய எழுத்தாகவும் செதுக்கியிருக்காங்க!'' என்று விளக்கம் சொன்னார் அப்பா.

அப்படியே அசந்துட்டேன். எத்தனையோ நூறு வருஷங்களுக்கு முன்னாலேயே இவ்வளவு அற்புதமாகப் பிளான் பண்ணிச் செதுக்கியிருக்காங்க! யாராச்சும் புதுசா டில்லி பக்கம் போறாங்கன்னு தெரிஞ்சா, நான் அவங்களுக்கு உடனே சொல்ற யோசனை — ஆக்ரா தாஜ்மகாலை கட்டாயம் போய்ப் பாருங்க. அதிலே இந்த எழுத்து வேலைப்பாட்டை அவசியம் கூர்ந்து கவனியுங்க.

ஜி. கணேஷ்:

குற்றாலம்! அப்பா! இப்போ நினைச்சாலும் உடம்பு சிலிர்க்கிறது, குளிர்றது. அந்த அருவிகள்தான் எவ்வளவு அழகு! எல்லாரும் அருவியிலே குளிச்ச போது எனக்கு ரொம்பப் பய'மா இருந்தது. 'பயப்படாதே. முதல்லே குளிரும்; அப்புறம் ஒண்ணுமே தெரியாது,'ன்னாங்க.

அருவியிலேருந்து சிதறின தண்ணீர்த்துளிகள் உடம்பிலே பட்டுக் குளிர் எடுத்தது. கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக்கிட்டு வெடவெடன்னு நடுங்கிக்கிட்டிருந்தேன். அப்புறம் மற்றவங்களைப் பார்த்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியம் வந்து அருவிக்குள்ளே தலையை நீட்டினேன். பளார் பளார் என்று தலையிலே அறையற மாதிரி தண்ணீர் தலைமேலே விழுந்தது. பயந்துட்டேன், தலை, உடம்பிலேருந்து கழன்று ஓடிடுமோன்னு! வெளியே வந்தப்புறம் மறுபடி மறுபடி அருவியிலே போய்க் குளிக்கணும்னு ஆசையா இருந்தது. உடம்பு நடுங்கினாலும் பரவாயில்லேன்னு நினைச்சேன். குற்றால அருவியிலே குளிக்கிறது விசேஷமாம். மலைக்கு மேலே இருக்கிற மூலிகைச் செடிகளிலே பட்டு, தண்ணீர் கீழே விழுறதினால் நம்ம உடம்புக்கு அந்த மூலிகைத் தண்ணீர் ரொம்ப நல்லதாம். பெரியவங்க சொன்னாங்க. அதோட அங்கே நிறைய குரங்கு! கூட வந்தவங்கள்லாம் குளிச்சிட்டு வர்ற வரைக்கும் அதுங்களை வேடிக்கை பார்க்கலாம். ஆனால் குரங்குகளை நெருங்காமல் தூரத்திலிருந்தே பார்க்கணும்னு அ'பா, அம்மா சொன்னாங்க.

எந்த ஊர் போகலாம்?

ஐந்தருவி, பழைய அருவி எல்லாம் பார்த்தோம். ஐந்தருவிக்குமேலேபுலியருவி, தேனருவின்னு ரொம்ப உசரத்திலே அருவிங்க இருக்காம். அடுத்த தரம் போகும் போது அந்த அருவிகளையெல்லாம் போய்ப் பார்க்கலாம்னு அப்பாகிட்டச் சொன்னேன். 'அங்கெல்லாம் போகக் கூடாது. ரொம்ப ஆபத்து. புலி மாதிரி மிருகங்கள் எல்லாம் இருக்கும்னு சொல்வாங்க. தகுந்த பாதுகாப்போட நல்ல வழிகாட்டி கெடைச்சார்னா அவர் உதவியால போய்ப் பார்த்துட்டு வரலாம்னு அப்பா சொல்லியிருக்கார்.

அந்த வாய்ப்புக்காகக் காத்துக்கிட்டிருக்கேன்.

தீபா:

மைசூர். ஒண்டர்ஃபுல் ப்ளேஸ். அங்கே மைசூர் மகாராஜா அரண்மனை, கிருஷ்ண ராஜசாகர் அணைக்கட்டு, பிருந்தாவனம் என்று எவ்வளவோ அழகழகான காட்சிகள் இருந்தாலும் எனக்குப் பிடித்ததென்னவோ ஆர்ட் காலரிதான். அடேயப்பா! எவ்வளவு அற்புதமான ஓவியங்கள்! ராஜா ரவிவர்மாவின் ஓவியங்கள். நாள் பூராவும் அங்கேயே இருந்துவிடலாம் போல் இருக்கும். ஓர் ஓவியத்தைக் குறிப்பாகச் சொல்லணும். ஓர் இளம் பெண், ஏற்றப்பட்ட குத்து விளக்கை வலது கையில் பிடிச்சுக்கிட்டிருக்கா. அதனோட ஜ்வாலைகாற்றில் அணையாம இருக்கிறதுக்காக இடது கையால் அதை மறைத்தபடி வெச்சுக்கிட்டிருக்கா. அப்போ இடது கை விரல்களுக்கு நடுவே சிவப்பா தெரியுமே அதே மாதிரி தெரியுது. அதோட அவ முகத்திலே தீப ஒளி! அவளுக்கு எதிரே நின்னுக்கிட்டுப் பார்த்தால் அப்படியே நிஜமா ஏற்றப்பட்ட அகல் விளக்கை ஒரு பெண் கொண்டு வர்றது போல அவ்வளவு தத்ரூபமா இருக்கும்! இத்தனைக்கும் எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால வரையப்பட்ட ஓவியம் அது. இன்னிக்கும் அதன் அழகு குலையாதபடி அற்புதமா, பராமரிச்சு வெச்சிருக்காங்க.

அந்த ஓவியம் மட்டுமில்லே. அந்த ஆர்ட் காலரியிலே இருக்கிற எல்லா ஓவியங்களுமே அவ்வளவு தத்ரூபமா இருக்கு. ஒவ்வோர் ஓவியத்துக்கு முன்னாலேயும் அஞ்சு நிமிஷமாவது இருந்து அணு அணுவா அதன் அழகை ரசிச்சுட்டுத்தான் அடுத்த ஓவியத்துக்குப் போகணும் போல அவ்வளவு தூரம் நம்மை அந்த ஓவியங்கள் ஈர்த்துடும். மறுபடியும் அந்த ஆர்ட் காலரியைப் பார்க்கவாவது நான் அங்கே போக ஆசைப்படறேன்.

படங்கள், பேட்டி: பிரபுசங்கர்.

---

16 ஆவது தேசிய சப்-ஜூனியர் கேரம் விளையாட்டுப் போட்டி அண்மையில் சென்னைப் பல்கலைக் கழக யூனியன் உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. நான்கு நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் சிறுவர்களுக்கான இரட்டையர் பிரிவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சக்திவேல், டோமினிக்ராஜ் அணி மகாராஷ்டிர அணியை 23—25, 25—10, 25—24 என்ற ஸ்கோர் கணக்கில் வென்று தமிழ்நாட்டின் புகழைக் காப்பாற்றிப் பெருமை கொண்டது. சக்திவேலும் டோமினிக்ராஜும் ஸ்ரீகாந்திடமிருந்து பரிசு பெற்றனர்.





நெஞ்சம் நெகிழ்ந்த நினைவு விழா

குழந்தை இலக்கிய வளர்ச்சியே தமது உயிர் மூச்செனை வாழ்ந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் முதலாண்டு நினைவு நாளை ஒட்டி, மார்ச் 16 — ஆம் நாள் குழந்தை எழுத்தாளர் சங்கம் சென்னை முத்தியால்பேட்டை மேநிலைப் பள்ளியில் கூட்டம் ஒன்றை நடத்தியது.

வள்ளியப்பாவின் தனித்த செயலாற்றும் சிறப்பை விரிவாக வெளியிட்டு வந்திருந்தோரை வரவேற்றார் சங்கத் தலைவர் நெ. சி. தெய்வசிகாமணி.

தலைமை வகித்த எஸ். டி. ராஜன், புதிய துறைகளிலும் கூட வள்ளியப்பாவால் சாதனை படைக்க முடிந்ததற்குக் காரணம் உரிய துறை வல்லுனர்களின் கருத்தை ஏற்று, தவறானவற்றைத் தயங்காது திருத்திச் செம்மைப்படுத்தி வெளியிட்ட தன்மையே என்பதைப் பல உதாரணங்களுடன் கூறினார்.

பெரும் புலவர்களாலும் எட்ட முடியாத 'எளிமைச் சிறப்பை' வள்ளியப்பாவின் பாடல்கள் எட்டி, குழந்தைகளின் நாவில் நிரந்தரமாக இடம்பெற்ற வியப்பைச் சிலம்பொலி செல்லப்பன் சுவையாக மெய்ப்பித்துக் காட்டினார்.

தான் உயரவும், தனது படைப்புக்கள் பண்படவும் குழந்தைக் கவிஞர் உறுதுணை நின்று வழிகாட்டிய சிறப்பைப் பூவண்ணன் நினைவு கூர்ந்தார்.

'கல்கண்டின்' உதவி ஆசிரியராக எழுத்துலகத்தில் அடிவைத்துச் சிறுவர்களுக்காக எழுதிய போது, அதில் குழந்தைக் கவிஞரின் சாகா வரம் பெற்ற பல பாடல்களைப் பதிப்பித்த அனுபவத்தையும், பின்னாளில் தன்னை மீண்டும் குழந்தைகளுக்காக எழுதும்படி அவர் தூண்டியதையும் தேசபந்து விளக்கினார்.

நிறைந்த வருவாய் வரும் வாய்ப்புக்களையும்கூட ஒதுக்கிவிட்டு, குழந்தை இலக்கியப் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டதையும், புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்க எடுத்த முயற்சிகளையும் குழந்தைக் கவிஞரின் திருமகள் தேவி நாச்சியப்பன் நினைவு கூர்ந்தார்.

குழந்தைக் கவிஞருக்குப் பெரிதும் உற்சாகமூட்டி ஆதரவு காட்டி வந்த அமரர் நீதிபதி பி. எஸ். கைலாசம் அவர்களது நினைவாகத் திருமதி சௌந்தரா கைலாசம் ஏற்படுத்திய பரிசுத் திட்டத்தின்படி, வள்ளியப்பாவின் பாடல்களைச் சிறப்பாகப் பாடிய மாணவர் மன்றப் பள்ளியின் மாணவியர் டி. குமுதா, எஸ். வேதவல்லி, எஸ். சாமுண்டீஸ்வரி ஆகியோர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

பரிசுபெற்ற குழந்தைகளும், சென்னை வானம்பாடி வானொலிச் சிறுவர் சங்கக்



குழந்தைகளும், குழந்தைக் கவிஞரின் பேரக் குழந்தைகளும் வள்ளியப்பாவின் பாடல் களை ஆடிப்பாடி மகிழ்வித்தனர். ஒலி நாடாவில் பதிவு செய்திருந்த கவிஞரது கதை கூறும் குரலையும் கேட்க வைத்தனர்.

குழந்தை இலக்கியப் பணிக்காக இந் தியக் கல்விக் கழகத்தின் விருதையும், ரூ. 25,000/- ரொக்கப் பரிசையும் பெற்ற டாக்டர் பூவண்ணனைப் பாராட்ட இதே சங்கம் 17.3.90 அன்று ஒரு விழாவை நடத்தியது. இதற்கு மாணவர் மன்றத் தலை வர் புலவர் தணிகை உலகநாதன் தலைமை தாங்கி, 'குழந்தை இலக்கிய மாமணி' என்ற பட்டத்தைப் பூவண்ணனுக்கு வழங்கினார். பூவண்ணனின் வெற்றிக்கு வழிவகுத்த பல் துறை ஆற்றல், அயராத உழைப்பு, திட்ட மிட்ட செயலாக்கம், தனித்தன்மை போன்ற இயல்புகளை வெ. நல்லதம்பி, டாக்டர். செ. மெய்யப்பன், முத்துக்குமாரசாமி, திருப் பூர் கிருஷ்ணன் ஆகியோர் சுவையாக எடுத் துக்காட்டினர். தமது உயர்வுக்குக் காரண மாக இருந்தவர்களை, தமது உயர்வுக்குப் பின்னணியைப் பூவண்ணன் நினைவு கூர்ந் தார். தொடக்கத்தில் சங்கத் தலைவர் நெ. சி. தெய்வசிகாமணி வரவேற்புரை நிகழ்த்த, இரு நிகழ்ச்சிகளுக்கும் இறுதியில் மாயன் நன்றி கூறினார்.





நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!



ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

"சிப்-சாப்" நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் "சிப்-சாப்"!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது * எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது * ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு "பேட்டென்டுடன்" கூடிய விசை * கையாள எளிது.

பரிசோதனைகள்: * மியூஸிகல் ஆர்கன் * ஷூட்டிங் விளையாட்டு * ஃபயர் அலாரம் * ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர் * லைட் ஆபரேடட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 350/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

"எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்"

எஜுடெக்.

187, முதல் மாடி, வீரபிள்ளை தெரு,
பெங்களூர் — 560 001. இந்தியா.
போன்: 578801.

எனக்குத் தேவை "சிப்-சாப்", கிட் ஒன்றுக்கு ரூ. 400/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./ போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/8901

நீயாக இருந்தால்

— போட்டி முடிவு

814 பேர் கலந்து கொண்டு திக்குமுக்காட வைத்து விட்டீர்கள்! முடிவு செய்வது எளிதாக இல்லை.

முதல் பரிசு ரூ. 25/- பெறுபவர்:



சே. பிரேமா,
மே/பா. திரு. துரை,
28-2, கோரிமேட்டுத் தெரு,
திருவண்ணாமலை — 606 601.

2 வது பரிசு ரூ. 10/- பெறுவோர்:



1. திரு. பூ. மானக்ஷா,
த/பெ. திரு. பூமாரி,
ஊத்துக்காடு (கி & அ),
வாலாஜாபாத் (வழி),
காஞ்சி வட்டம் — 631 605.



2. டி. ஆர். ராஜசேகரன்,
19. திருவள்ளுவர் தெரு,
புது பெருங்களத்தூர்,
சென்னை — 600 063.

ஆறுதல் பரிசு ரூ. 5/- பெறுவோர்:

1. மீ., மதுஸ்ரீ,
எல். 106, அண்ணா குடியிருப்பு,
எஸ். வி. மில் அஞ்சல்,
உடுமலைப்பேட்டை.

2. ஆர். தேவராஜன்,
த. பெ./திரு. டி. எஸ். ராமசாமி,
2/36, சன்னதி தெரு,
தேவூர் அஞ்சல்,
திருவாரூர் வட்டம்.

3. பா. இராமசாமி,
த/பெ. திரு. கோ. பாலகிருஷ்ணன்,
டி-15/மாணிக்க வாசகர் சாலை,
வட்டம் — 2,
நெய்வேலி — 1. (607 801)

4. அர. சில. சாரதா,
8-ஏ, சாரதாலயம்,
கண்ணன் காட்டேஜ் (மாடி),
ஸ்ரீநிவாசராவ் வீதி,
ஸ்ரீநிவாச நகர்,
கவுண்டம்பாளையம்காலனிஅஞ்சல்,
கோவை — 641 030.

5. எம். அப்துல் ஹாதி,
9 — ஆம் நிலை 'அ',
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
ஏம்பல் — 622 204.
புதுவை மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர்கள் சார்பில் பாராட்டுக்கள்.

முதல் பரிசு பெற்ற முடிவு:

மனிதாபிமானமும், நல்ல அறிவும், அன்பும், இரக்கமும் உள்ளவர்கள் கிழவருக்குத்தான் முதலிடம் அளிப்பார்கள். நானும் அளிப்பேன். எந்த ஒரு நல்ல ஆசிரியரும் அதையேதான் விரும்புவார்.

கே. பிரேமா, திருவண்ணாமலை.

இரண்டாவது பரிசு பெற்ற முடிவு:

வயதானவருக்கே இடம் கொடுப்பேன். தன் மாணவன், சமுதாயத்தில் நல்ல பண்புள்ளவனாக இருக்கிறான் என்பதை அறிந்து ஆசிரியர் பெருமையும் பூரிப்பும் அடைவாரே தவிரக் கோபப்பட மாட்டார்.

— டி. ஆர். ராஜசேகரன், சென்னை — 63.

இடத்தைப் பெரியவருக்கே விடுவேன். ஆசிரியர் ஆத்திரப்பட மாட்டார். வகுப்பில் சுட்டிக்காட்டிப் பாராட்டுவார். ஏனென்றால் அவர் முதன் முதலில் சொல்லிக் கொடுத்த பாடமே பெரியவர்களை மதித்து நடக்க வேண்டும் என்பதே.

— பூ. மனக்ஷா, ஊத்துக்காடு.

ஆறுதல் பரிசு பெற்ற முடிவுகள்:

1. கருணை உள்ளத்தை எனக்களித்த என் குரு என்னைப் புரிந்து கொள்வார் என்ற நம்பிக்கையில் முதியவருக்கே இடமளிப்பேன்.

— மீ. மதுஸ்ரீ, உடுமலைப்பேட்டை.

2. கிழவரைத்தான் உட்கார வைப்பேன். இதுதான் மனிதாபிமானம்.

— ஆர். தேவராஜன், திருவாரூர்.

3. பெரியவருக்கு இருக்கையைத் தராவிடில் யான் பெற்ற கல்வி பொருளற்றதாகிவிடும்.


— பா. இராமசாமி, நெய்வேலி — 1

4. ஆசிரியரை அமரும்படி கோரினாலும் அவரும் பெரியவரையே அமரச் செய்வார்.

— அர. இல. சாரதா, கோவை — 30.

5. வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை தரவேண்டும் எனப் போதித்தவரே ஆசிரியர்தான். அதனால் பெரியவருக்கே இடம் அளிப்பேன்.

எம். அப்துல் ஹாதி, புதுகை.



விடுமுறை அறிவியல் போட்டி

மாட்டு வண்டிக்காரன் ஒருவன் பொதி ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். சாலையில் ஒரு பாலம் எதிர்ப்பட்டது. பாலத்திற்கு வண்டியின் எடை 'கரெக்டாக' இருந்தது. அப்படியே ஓட்டினால் வண்டி பாலத்தைக் கடந்துவிடும். அதற்கு மேல் ஒரு சிறு கடுகைப் போட்டாலும் கூட அவ்வளவுதான்! பளு தாங்காமல் பாலம் உடைந்துவிடும்.

வண்டிக்காரன் வண்டியை ஓட்டுகிறான். எதிர்பாராமல் வண்டி மாடு சிறுநீர் கழித்து, சாணம் போடுகிறது. பாலம் என்னவாகும்? நன்றாகச் சிந்தித்து உங்கள் பதிலுக்குரிய காரணத்தை விளக்கி (15 வரிகளுக்கு மேற்படாமல்) கீழே தந்துள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து ஆசிரியர், கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். சரியான விடைக்கு, தக்க பரிசுகள் உண்டு. பரிசு பெற்றோர் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும். பதிலும் கூப்பனும் கிடைக்க வேண்டிய கடைசி நாள் 20.5.1990.

பெயர் :...................................

முகவரி: ....

....

....

பின்கோட்: ....

மனம் போல் வாழ்வு



ஒருவருடைய வாழ்வு அவருடைய மனத்தின் நினைவு நலத்திற்குத் தக்கவாறுதான் அமையும்.

மனம் ஒரு கத்தியைப் போன்றது. கத்தி மாம்பழம் நறுக்கவும் உதவும். பிறருடைய தலையை அறுக்கவும் உதவும். அதுபோல் மனம் நன்மை நினைக்கவும் ஆகும்; தீமை நினைக்கவும் ஆகும். நலம், தீங்கு இரண்டுக்கும் நமது மனமே பரம காரணம் என்றுணர்க.

நாம் நமது மனத்தால் பிறரை நன்கு மதித்து அன்பு செய்தால் அவர்களும் நம்மை மதித்து அன்பு செய்வார்கள். நாம் அவர்களை மதியாதிருப்பின், அவர்களும் நம்மை மதியாது புறக்கணிப்பர்.

''யத்பாவம் தத்பவதி,'' என்று வடமொழியில் கூறுவர். எப்படி நினைக்கின்றோமோ அப்படி விளையும்.

ஒரு நகரில் சந்தனக்கட்டை விற்கும் வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் பெருந்தனவந்தன். அந்நகரையாளும் மன்னவர் மாலை நேரத்தில் தமது மணித் தேரின் மீது கடைவீதி வழியே சென்று, நகர வெளியில் போய் உலவிவிட்டு மறுபடியும் தேரேறி அரண்மனை சேருவார். அங்ஙனம் செல்லும் போது சந்தனக் கட்டை வியாபாரி கடையை விட்டிறங்கி நின்று மன்னரைக் கரங்கூப்பித் தொழுவார். மன்னவரும் கைகுவித்துக் கும்பிடுவார். இப்படி நாள் தோறும் நிகழும்.

ஒரு நாள் மன்னர் வழக்கம் போல் சென்றார். சந்தனக்கட்டை வியாபாரி எழுந்து நின்று வணங்கினார். மன்னவருக்கு அன்று என்னவோ அவர் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டது; பதிலுக்குக் கும்பிடவில்லை. காரணம் தெரியாத வெறுப்புணர்ச்சி. மனத்தில் அவரைப் பற்றி அருவருப்பு. சந்தனக்கட்டை வியாபாரியையே நினைத்துக் கொண்டு சென்றார்.

மன்னரிடம் மறுநாள் ஒரு மகான் வந்தார். அவர் திரிகால ஞானி. மனத்தில் இருப்பதனை அறியும் மகிமை வாய்ந்தவர். அவரை அரசர் பெருமான் அஞ்சலி செய்து, ஆசனத்தில் அமரச் செய்து, பாலும், தேனும் தந்து உபசரித்தார்.

''சுவாமி, ஒரு சிறு சந்தேகம். கடைவீதியில் ஒரு பிரபல சந்தனக்கட்டை வியாபாரி உள்ளார். அடியேன் அவ்வழியே போகும் பொழுது தினந்தோறும் அந்த வியாபாரி எழுந்து என்னைக் கைகூப்பித் தொழுவார். நானும் அவரை வணங்குவேன். நேற்று நான் போகும் போது அவர் என்னைத் தொழுதார். எனக்கு என்னவோ அவரிடம் காரணமில்லாமல் வெறுப்பு ஏற்பட்டது. பதிலுக்குத் தொழ, கை மறுத்து விட்டது. குருநாதா, இதன் காரணம் அறியாது மனம் தத்தளிக்கிறது. எல்லாம் தெரிந்த தாங்கள்தான் இதனை விளக்க வேண்டும்,'' என்றார்.

சாது மகான், ''வேந்தே! இந்த வினாவுக்கு விடை மூன்று நாட்களுக்குப் பின்னர் கூறுகிறேன். இன்று நீர் போகும் போது உமது மனம் நினைக்கும் நிலைமையை நாளை என்னிடம் கூறும்,'' என்றார்.

மறுநாள் காலை மறுபடியும் சாது

மகான் அரசனிடம் வந்தார். அரசன் தொழுதான்: ''அரசே! நேற்றுக் கடை வீதியில் சந்தனக்கட்டை வியாபாரியைக் கண்டீரா? உம் மனநிலை எப்படியிருந்தது?'' என்று சாது கேட்டார்.

''சுவாமி! அந்த ஆள் மீது நேற்றும் எனக்கு ஒரே வெறுப்புத்தான் ஏற்பட்டது. அவனைச் சுடவேண்டும் போல் தோன்றியது.'' என்றான் மன்னன்.

''நல்லது.'' என்று கூறிவிட்டுச் சாது போய் விட்டார்.


மூன்றாவது நாள் வந்தார். ''மன்னரே! இன்று மாலை உமக்கு அவனிடம் என்ன மாதிரி மனநிலை அமைகிறது என்று பார்த்துக் கூறும்; நான் நாளை வருவேன்.'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அன்று மாலை அரசன் கடைவீதி வழியே போகும் பொழுது சந்தனக்கட்டை வியாபாரி எழுந்து வழக்கம் போல் கைகுவித்துக் கும்பிட்டார். அன்று அந்த வியாபாரி மீது ஒன்றும் வெறுப்பு ஏற்படவில்லை. மன்னருக்கு ஆச்சரியம். மனநிலை இப்படி மாறியதற்கு என்ன காரணம் என்று விளங்கவில்லை.

அடுத்த நாள் காலை அம்மகான் வந்தார். அரசனைக் கண்டு சிரித்தார். ''இறைவனே! நேற்று உன் மனம் மாறியிருக்குமே! நீ கும்பிட்டிருக்க வேண்டுமே?'' என்று கேட்டார்.

''ஆம், சுவாமி! இப்படி மனநிலை மாறிய காரணத்தைத் தேவரீர் கருணை செய்து கூற வேண்டும்,'' என்றான் அரசன்.

''வேந்தே! அதற்குரிய காரணத்தை நான் கூறுகிறேன் கேள். அந்தச் சந்தனக்கட்டை வியாபாரியிடம் நிரம்பச் சந்தனக்கட்டைகள் இருந்தன. அவனுக்கு மூன்று நாட்களுக்கு முன் ஒரு புதிய நினைவு வந்தது. 'நம்மிடம் சந்தனக்கட்டை ஏராளமாக இருக்கின்றதே. மன்னருடைய அரண்





மனையில் யாராவது இறந்து விட்டால் நம்மிடமுள்ள சந்தனக்கட்டை முழுவதும் தீர்ந்துவிடுமே? (அரசர்கள் இறந்தால் அவர்களுடைய சரீரத்தைச் சந்தனக்கட்டையால் தகனம் புரிவது வழக்கம்.) ஆகவே, நமது மன்னரோ, மன்னருடைய தாயாரோ, மன்னருடைய மனைவியாரோ மாண்டால் நமக்கு நலம் விளையும்,' என்ற எண்ணம் அவனுக்கு வந்தது. இந்த நினைவு கொண்டபடியால் அவனிடம் உனக்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது.


''நான் நேற்றுக் காலை அவனிடம் உள்ள சந்தனக்கட்டை முழுவதையும் விலை கொடுத்து வாங்கி விட்டேன். உடனே அவனுக்கு அந்தத் தீய எண்ணம் அகன்றது. அதனால் இன்று உனக்கு அவனிடம் ஏற்பட்ட அருவருப்பு அகன்றது,'' என்று சாது மகான் கூறினார்.

ஆதலால் நாம் நினைக்கின்ற தூய நினைவு, தீய நினைவு அலைகள் சென்று மீளவும் நம்பால் வந்து ஒடுங்குகின்றன.

மக்கள் யாவரும் இதனை நன்குணர்ந்து உலகமெல்லாம் வாழட்டும்; ஊரெல்லாம் வாழட்டும்; உயிர்களெல்லாம் வாழட்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.

மனம் போல் வாழ்வு.



கப்பலில் போன காண்டாமிருகம்

தெருவில் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று அந்த விலங்கைப் பற்றியே பேசினர்.

''அதன் உருவம் எப்படி இருக்கிறதாம்?''

''பலகாரத்திற்குப் பிசைந்த மாவை, அப்படியே அமுக்கிப் பிடித்தது போல இருக்கிறதாம்!''

''முகம் பன்றியைப் போல் இருக்கிறதாம்!''

''அதன் முகத்தில் ஒரு கொம்பு கூட இருக்கிறதாமே?''

''ஹெர்குலிசின் மறுபிறவி என்று கூறுகிறார்களே? உண்மையாக இருக்குமோ?''

''அது தெரியாது. ஆனால், அந்த அதிசய மிருகம் ஒரு பனை மரத்தை அப்படியே தன் கொம்பால் முட்டி முட்டியே சாய்த்து விட்டதாம்!''

''அது மட்டுமா? சிங்கம் இதைப் பார்த்ததும் பயந்து போய் அப்படியே பின்னால் ஓடி விட்டதாம்!''

— இவ்வளவு பேச்சும் இந்தியாவிலிருந்து வந்திருந்த அந்தக் காண்டாமிருகத்தைப் பற்றித்தான். ஐரோப்பிய மக்கள் பல நூற்றாண்டுகளாகக் காண்டாமிருகத்தைப் பார்த்தது கிடையாது. அதனால், அந்த அதிசய மிருகத்தைப் பற்றி மனம் போனபடியெல்லாம் கற்பனைக் கதைகள் கூறி மகிழ்ந்தனர்.

அந்த இந்தியக் காண்டாமிருகம் இந்தியாவின் மேற்குப் பகுதியிலிருந்த காம்பே நாட்டை ஆண்ட முஜாபரால், ஸ்பெயின் மன்னர் மேன்யுவலுக்கு அன்பளிப்பாக அனுப்பப்பட்டிருந்தது. காண்டாமிருகத்தின் வரவு அந்த நாட்டையே பரபரப்பில் ஆழ்த்தியது. மக்கள் அந்த அதிசய மிருகத்தைப் புராதன காலத்து மிருகமாகவே எண்ணினர். அவ்வளவு பலசாலியான அந்த விலங்கு சைவ உணவை மட்டுமே உண்டது மக்களைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது.

மக்களெல்லோரும் அந்த மிருகத்தைப் பார்க்க விரும்பியதால் அதற்குத் தனியாக ஒரு கூண்டைச் செய்து, பெரிய இராணுவ மரியாதையோடு தெருத் தெருவாக ஊர்வலம் கொண்டு போக மன்னர் உத்தரவிட்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்த 1515 — 16 — ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய மக்கள் மிகுந்த மதப் பற்று உள்ளவர்களாக இருந்தார்கள். கிறித்துவ மக்களுக்கெல்லாம் மதத் தலைவராக போப்பாண்டவர் திகழ்ந்தார். அவருக்குக் காணிக்கை அனுப்பி அவரது ஆசியைப் பெறுவதைத் தம் வாழ்நாளின் மிகப் பெரிய பாக்கியமாக மக்கள் எண்ணினர்.. அதனால் மன்னர் மேன்யுவல் அந்த அதிசயக் காண்டாமிருகத்தைத்தான் போற்றி வணங்கும் போப்பாண்டவருக்குத் தமது காணிக்கையாக அனுப்பி வைக்க முடிவு செய்தார்.

அரண்மனைத் தையற்காரரும் பொற்கொல்லரும் வரவழைக்கப்பட்டனர். காண்டாமிருகத்தின் கழுத்தில் அணிவிக்கத் தங்கத்தாலான கழுத்துப் பட்டை ஒன்று செய்யப்பட்டது. அந்தப் பட்டையில் இடையிடையே வைரம் பதித்த தங்க

ஹரிசிங்

ரோஜா மலர்கள் பொருத்தப்பட்டன. பொன் முலாம் பூசப்பட்ட இரும்புச் சங்கிலி தயாரானது. காண்டாமிருகத்திற்குப் போர்த்த வெல்வெட்டால் ஆன அழகிய அங்கி ஒன்று தைக்கப் பட்டது. அதன் நான்குபுறமும் பொற் குஞ்சங்கள் தொங்கவிடப்பட்டன. அங்கியின் ஓரத்தில் நான்கு புறமும் பூவேலை செய்யப்பட்ட அழகான 'பார்டர்.' அதன் இடையே அழகிய பூ வேலைப்பாடுகள். இவ்வளவு அலங்காரங்களோடு அந்தக் காண்டா மிருகம் போப்பாண்டவர் வசித்த ரோமாபுரிக்குப் புறப்பட்டது. மார் செய்ல்ஸ் நகருக்கு வந்து கப்பலேற வேண்டும். நகருக்கு வந்ததும் இளவரசர் முதலாவது பிரான்சிஸ் அந்த அதிசய மிருகத்தை நகர மக்களுக்குப் பார்வையிட வசதி செய்து தருமாறு கப்பலின் மாலுமியைக் கேட்டுக் கொண்டார். மாலுமி மறுத்தார். அவரைத் தனியே அழைத்த மன்னர், ஐந்தாயிரம்தங்கநாணயங்களை மாலுமிக்கு அன்பளிப்பாக (லஞ்சமாக)



அளித்தார். அதற்குப் பிறகுதான் மாலுமி கப்பலில் ஏற்றப்பட்ட காண்டாமிருகத்தை மீண்டும் கீழே இறக்க இசைந்தார். எல்லாம் ஐந்தாயிரம் தங்க நாணயங்கள் செய்த வேலை!

மறுபடி மதிப்புக்குரிய அந்தக் காண்டாமிருகம் ரோமாபுரிக்குச் செல்வதற்காகக் கப்பலேறியது. ஆனால் ஜெனீவா நகருக்கு அருகே கப்பல் கடுமையான புயலில் சிக்கிக் கொண்டது. கப்பலில் இருந்தவர்களில் ஒருவர் கூட உயிர் தப்பவில்லை. — காண்டாமிருகத்தையும் சேர்த்துத்தான். கடலில் இறந்த காண்டாமிருகத்தின் உடல் கரையோரம் ஒதுங்கியது. போப்பாண்டவருக்குக் காணிக்கையாக்கப்பட்ட பரிசுப் பொருள் என்பதால் அது கவனமாகப் பாடம் செய்யப்பட்டு; பஞ்சடைக்கப்பட்டுப் போப்பாண்டவர் பத்தாவது லியோவுக்கு அனுப்பப்பட்டது.

இந்தமகிமைமிக்ககாண்டாமிருகம் லிஸ்பனுக்கு விஜயம் செய்த போது ஓவியன் ஒருவன் அதைச் சித்திரமாக வரைந்தான். இந்த ஓவியத்தைப் பார்த்த ஆக்ஸ்பர்க் நகரத்துக் கலைஞன் அல்பெர்க்ட் டியூரர், காண்டாமிருகத்தை மரக்கட்டையில் அப்படியே புடைப்புச் சிற்பமாகச் செதுக்கி



னான். அதை அவன் புராதன காலத்து மிருகம் என்றே நம்பினான். அதனால் அதன் முதுகில் ஒரு கொம்பையும் போட்டு வைத்தான். அல்பெர்க்ட் டியூரர் உருவாக்கிய இந்த மரக்கட்டைச் சிற்பம்தான் அடுத்த இருநூறு ஆண்டுகள் வரை பல நகல்கள் எடுக்கப்பட்டு, ஐரோப்பா முழுவதும் மக்களால் வியப்போடு இரசிக்கப் பட்டது.

*1740*ல் டெனமென்ட் வான்டீர் என்ற டச்சுக்காரர் வணிக நோக்கோடு இந்தக் காண்டாமிருகத்தை இந்தியக் காடுகளிலிருந்து பிடித்துக் கப்பலில் ஏற்றிக் கொண்டு வந்தார். ஐரோப்பாவின் மிக முக்கிய நகரங்களில் இந்தக் காண்டாமிருகம் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு அதற்குக் கட்டணமும் வசூலிக்கப் பட்டது. காண்டாமிருகம் அவருக்கு ஏராளமாகச் சம்பாதித்துக் கொடுத்தது. அந்த நன்றி உணர்வில் சுத்த சைவமான அந்த விலங்குக்கு அவர் அன்போடு மதுபானங்களையும் மீனையும் கொடுத்துப் பழக்கப்படுத்தினார்.

வியன்னா நகருக்கு வருகை தந்த இந்தக் காண்டாமிருகத்திற்கு அரச வரவேற்பு அளிக்கப்பட்டது. இருபக்கமும் இராணுவ வீரர்கள் அணிவகுத்து நிற்க அது அணிவகுப்பு மரியாதையைக் கம்பீரமாக ஏற்றுக் கொண்டது. இந்த அதிசய மிருகத்தைக் கண்டு சொக்கிப் போன கவிஞர் கிறிஸ்டியன் கெல்லர்ட், மக்கள் வாய்விட்டுப் பாடும் அளவுக்கு அழகானதொரு கவிதையை இயற்றினார். ஓட்ரி என்ற கைவினைக் கலைஞர் தமது குறிப்புக்களில் இதன் வருகைக்குத் தனித் தலைப்பு எழுதிப் பெருமையளித்தார்.

இந்தக் கொடுத்து வைத்த காண்டா மிருகம் வெர்செய்ல்ஸ் நகருக்கு வருகை தந்தபோது எட்டுக் குதிரைகள் பூட்டிய அழகான கூண்டில் நகரெங்கும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு அரண்மனை முற்றத்தில் தங்க வைக்கப்பட்டது. இதைப் பார்வையிட வந்த மன்னர் பதினைந்தாவது லூயி பிரமித்துப் போய் நின்றார். அவரது மனைவி மேடம் பம்பெடார் இதை எப்படியாவது விலைக்கு வாங்கும்படி மன்னரைக் கேட்டாள். டெனமென்ட்வான்டீர் அந்தஅதிசயக் காண்டாமிருகத்திற்கு 1,00,000 ஈகஸ் (பிரெஞ்சு நாணயம்) கேட்டார். அந்தத் தொகை மன்னருக்கு மிகவும் அதிகமானதாகத் தோன்றியதால் காண்டாமிருகத்தை விலைக்கு வாங்கும் எண்ணத்தை அவர் கைவிட்டார். ஆனாலும் அந்தக் காண்டா மிருகம் பிரெஞ்சு நாட்டை விட்டுக் கிளம்பும் வரை அரசியாரின் சார்பில் அதற்கு அருமையான ஆரஞ்சுப் பழம் ஒன்று தினமும் அளிக்கப் பட்டது!

கோடைச் சிரிப்பு!!!







முல்லா கதைகள்

(பேராசிரியர் எ. சோதி — பக். 76 — ரூ. 7)

முல்லா கதைகளில் ஏதாவது ஒன்று கூடத் தெரியாத பத்திரிகை வாசகர்கள் இருக்க முடியுமா? அந்த ஒன்றை வைத்தே முல்லா கதைகள் அத்தனையும் கிடைக்குமா என்ற ஆர்வம் நிச்சயம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். உங்கள் ஆர்வப் பசிக்கு அருமையான விருந்து இந்தத் தொகுப்பு நூல். தெளிவான நடை மாதிரிக்கு —

தன் வீட்டிற்குள் திருடன் நுழைவதைக் கண்ட முல்லா அங்கிருந்த பீரோ பின்னால் பதுங்கிக் கொண்டார். வீடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடியும் திருடனுக்கு ஒரு பொருளும் கிடைக்கவில்லை.

கடைசியில், ஒளிந்து கொண்டிருந்த முல்லாவைக் கண்டு விட்ட திருடன், "பீரோவுக்குப் பின்னால் என்ன செய்கிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு முல்லா, "நீ என் வீட்டிலிருந்து திருடிக் கொண்டு போவதற்கு ஒரு பொருளும் இல்லை. அதற்காக உன்னைப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு இங்கே மறைந்து கொண்டேன்," என்றார்.

— இது போன்று முல்லாவின் தில்லுமுல்லுகளைச் சொல்லுவதாகவே மொத்தம் 72 கதைகள். அவற்றில் உங்களுக்குத் தெரிந்ததும் இருக்கலாம். பரவாயில்லை.

கஞ்சி மறதி ஜோக்ஸ்

(பேராசிரியர் எ. சோதி — பக். 64 — ரூ. 5.50 இரண்டு புத்தகங்களும்: நன்மொழிப் பதிப்பகம், 53, அரவிந்தர் வீதி, புதுச்சேரி— 605 001)

'இந் நூலில் உள்ள துணுக்குகள் அனைத்தும் பிறரின் கற்பனையில் உருவானவை. நான் செய்ததெல்லாம் அவற்றைத் திரட்டியதும் தலைப்பிற்கேற்பப் பிரித்ததும் என் சொந்த நடையில் எழுதியதும்தான்.'

பெருந்தன்மை மிக்க பேராசிரியர் எ. சோதி தமது முன்னுரையில் இப்படிக் குறிப்பிடுகிறார்:

அதனால்தானோ என்னவோ அத்தனை ஜோக்குகளிலும் (91) ஏதோ ஒரு புதுமை தெரிவது போல் தோன்றுகிறது.

தலைப்பில் சொல்லாமல் மறைத்து விட்ட அந்தக் கடைசித் தொகுப்பை (குடிகாரன் ஜோக்ஸ்) நீங்களும் மறைத்து விடலாம்.

விழாக்காலப் பூக்கள்

(மு. சிவம் — பக். 106 — ரூ. 15 — அருணா நூலகம், 18, பண்ணையார் தெரு, இராஜபாளையம் — 626 117)

ஆயிற்று. பள்ளி விழாக்கள் வரப்போகின்றன; ஆண்டு விழாவுக்கு ஏற்பாடாகியிருக்கிறது; குடியரசு தின விழாவில் ஒரு நாடகம் போட வேண்டும். இப்படி எத்தனை சந்தர்ப்பங்கள் கூடி வருகின்றன. அந்த நேரத்தில் ஒரு நல்ல சிறுவர் நாடகம் போட வேண்டும் என்று பள்ளியில் சுலபமாய்ச் சொல்லி விட்டுப் போய் விடுவார்கள். சீன் செட்டிங், ராஜா டிரெஸ், மனப்பாடம் பண்ண வேண்டிய நெருடலான வசனம் — என்றெல்லாம் மெனக்கெட முடியாது; கருத்தாழமுள்ள எளிமையான வசனமும் படிப்பினையும் ஊட்டுகிற நாடகம் வேண்டுமா? அதற்காகவே நவரத்தினங்களைப் போல் 9 சிறுவர் நாடகங்களைச் சொந்தமாய் எழுதித் தொகுத்துத் தந்திருக்கிறார் மு. சிவம். இவர் அமரர் குழந்தைக் கவிஞரின் வழிகாட்டலில் எழுதுபவர் என்று முகவுரையில் குன்றக்குடி பெரிய பெருமாள் அறிமுகம் செய்கிறார். அதற்கு மேல் சிறுவர் இலக்கியத் தரம் பற்றிச் சிபாரிசு செய்ய எதுவுமில்லை.

போதிசத்துவர் கதைகள்

(நெ. சி. தெய்வசிகாமணி — பக். 120 — ரூ. 12 — பைலட் பப்ளிகேஷன்ஸ், 309, லிங்கி செட்டித் தெரு, சென்னை — 600 001)

ராமன் கதை தெரிந்தாலும் ராமாயணத்தில் எத்தனை எத்தனை விதங்களில் படித்து, பார்த்து ரசிக்கிறோம்! அதுபோல்தான் போதி சத்துவர் கதைகளும். கதைகள் என்பதால் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தனித் தனிக் கதைகள் என்று கருதி விட வேண்டாம். இந்தப் புத்தகத்தில் இருபது தலைப்புக்களில் இடம் பெற்றுள்ள கதைகள் அனைத்தும் ஒரு நீண்ட வரலாற்றின் அத்தியாயங்கள் போன்றவையே! ஆமாம், போதி சத்துவர் புத்தமகானின் வரலாற்றை முழுமையாகத் தந்திருக்கிறார் ஆசிரியர். புத்தருக்குச் சீட கோடிகள் வந்து சேரும் நிகழ்ச்சிகளும், அவருக்கு ஏற்படும் சோதனைகளும், சூரியனைக் கண்டு விலகும் பனி போல் அவை மறையும் அற்புதங்களும் சுவையானவை. நெ. சி. தெய்வசிகாமணியின் தெளிந்த நடை பயிலாத சிறுவர் சிறுமியர் இருக்க முடியாது. படித்துச் சுவைத்துப் பயன் பெறலாம்.


— பெரிய பையன்.



கடைசியில் சசிவர்ணமும் பத்மாவதியும் சம்மதித்து குழந்தை சின்னராஜுவுடன் புறப்பட்டனர். ஒகேநக்கலில் அதே பயணிகள் விடுதி-
எட்டுக்கு எட்டு
12
கதை: தேசபந்து
படம்: ஜெ...
ஹலோ ரஞ்சித்!... நீங்க முன்னாடியே வந்தாச்சா இன்ஸ்-பெக்டர்?
ஷ்ஷ்... நான் போலீஸ்னு வாட்ச் மேனுக்குக்கூடத் தெரியாது. எதிர் டீம் டூரிஸ்ட் நான். புரியுதா?
உள்ள வாங்க.
நோ. நான் ரெண்டு முறை காலிங் பெல் அழுத்தி சிக்னல் கொடுப்பேன். அப்ப நீங்க என் ரூமுக்கு வந்திடுங்க.


ரஞ்சித் தன் அறையில்--- ஜன்னல் வழியாக, வேலு வருவது தெரிந்தது –
இந்த வேலு நம்மைப் பற்றி யாரிடமும் சொல்லாமல் இருக்க வேண்டுமே!
உள்ளே வா வேலு!
உன்னை யாரும் பார்க்கலியே?
இல்லே சார்!
இந்தா, பிஸ்கட் சாப்பிடு..
சரி, சின்னானும், அங்கே சாமியும்...?
எங்க சித்தப்பாவும், அப்பாவும்தானே, இப்பத்தான் வீட்டுக்கு வந்தாங்க..
சரி. போய்...
யாரோ ஜமீன்தாராம், இங்கே இருக்காங்கன்னு அவங்க கிட்ட சொல்லு.


வேறு நான் ஏதாவது சொல்ல ணுமா, சார்?
அவுங்க ரெண்டு பேருக்கும் தெரியாம அவங்களைக் கவனிச்சிட்டிரு. ஏதாவது ஆபத்தான காரியம் நடந்தா ஓடி வந்து சொல்லிடு.
சார்!
ரஞ்சித் சிக்னல் கொடுக்க- சசிவர்ணம் உள்ளே வந்து அமர்ந்தார்
நான் இங்கே தனியா வந்திருப்பதாக நினைக்க வேண்டாம்...


அங்காங்கே நம்ம ஆட்களை மப்டியிலே நிறுத்தி வச்சிருக்கேன். எல்லாம் ஒரு வேட்டைக்கான செட்டப்தான்
பொறி வச்சுப் புடிக்கப் போறீங்களா?
புரிஞ்சிக்கிட்டீங்க! அந்தப் பொறி உங்க புள்ளை சின்ன ராஜூதான்!
நோ! என் மனைவி இதுக்கு சம்மதிக்கவே மாட்டாள்...
தெரியும்!... பட் நம்ம எழு குழந்தைகளையும் மீட்கறதுக்கு எதையும் செய்யத் தயார்னு நீங்க தானே சொன்னீங்க?!
ஆமா!... இதோ நான் சின்ன ராஜூவைக் கொண்டுவருகிறேன்!
தொடரும்.

பிருந்தாவனக் கதையரங்கம்

என்ன காரணம்?

அழகாபுரியை ஆண்டு வந்த அழகப்பன் என்ற அரசன் ஒருநாள் தன்னுடைய விதூஷகனிடம், ''உனக்கு எல்லாம் தெரியும் என்று பீற்றிக் கொள்கிறாயே! இதற்குப் பதில் சொல். என்னுடைய உள்ளங்கையில் ஏன் முடி முளைக்கவில்லை?'' என்று கேட்டான்.



அதற்கு விதூஷகன், ''நீங்கள் வாரி, வாரி வழங்குவதால்தான் உங்களுடைய உள்ளங்கையில் முடி வளராமல் போய் விட்டது!'' என்றான்.

உடனே அரசன், ''சரி, குடிமக்களின் கைகளிலும் முடி இல்லையே, என்ன காரணம்?'' என்று கேட்டான்.

''அதுவா! நீங்கள் வாரி வழங்குவதைத் தங்கள் இரு கைகளினாலும் வாங்கி, வாங்கி அவர்கள் கையிலும் முடி வளராமல் போய் விட்டது.'' என்றான் விதூஷகன்.

''அது சரி, அடுத்த நாட்டு அரசன் மகா கஞ்சன். கொஞ்சம் கூடத் தரும சிந்தனையே இல்லாதவன். அவன் கைகளில் கூட முடி இல்லை. அதன் காரணம் என்னவென்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டான் அரசன்.

சட்டென்று விதூஷகன் கூறினான். ''நீங்கள் வாரி வாரி வழங்குவதை அடுத்த நாட்டு அரசன் கண்டு, மக்கள் உங்களைப் புகழ்வதைக் கண்டு வயிற்றெரிச்சலில் தன்னுடைய இரண்டு கைகளையும் பிசைந்து கொண்டே இருக்கிறான். அதனால்தான் அவன் கைகளில் முடி வளராமல் போய் விட்டது!'' என்றான்.

விதூஷகனின் புத்திக்கூர்மையைப் பாராட்டி, தன்னுடைய கழுத்திலிருந்த ரத்தின மாலையை அவனுக்குப் பரிசளித்தான் மன்னன்.

— வி. என். சுப்பிரமணியன்,
நரோம்பேட்டை.



இரும்படியும்!

முன்னொரு காலத்தில், சிவனடியார்கள் தங்கும் மடம் ஒன்றை நம்பூதிரியடிகளார் என்பவர் நடத்தி வந்தார். அவர் எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசும் பழக்கமுடைய

வர். புலவர்களுக்குப் பரிசு கொடுத்து ஆதரிப்பவர்.

ஒருநாள் புலவர் ஒருவர் அடிகளாரிடம் பரிசு பெற வந்தார். அவரை மட்டம் தட்ட வேண்டும் என்று எண்ணிய அடிகளார், அவரை, ''வாரும்! இரும்படியும்!'' என்று கூறினார்.

அது கேட்ட புலவர், முதலில் திகைத்தாலும், உடனே, ''ஆகட்டும் மடத்தடிகளே!'' என்று பதிலளித்தார்.

புலவர் கூறியதைக் கேட்ட அடிகளார் மிகவும் மகிழ்வுற்று அவருக்குச் சற்று அதிகமாகவே பரிசு கொடுத்து அனுப்பினார்.

முன்னர் அடிகளார் கூறிய ''இரும்படியும்'' என்பதற்கு ''இரும், படியும்!'' என்று பொருள். பின்னர் புலவர் கூறிய ''மடத்தடிகள்'' என்பதற்கு ''மடத்தினுடைய அடிகள் என்று பொருள்.

— எச். இராமகிருஷ்ணன், சிதம்பரம்.



பெரியவரின் புத்திசாலித்தனம்!

இரவு நேரம்!

திருடன் ஒருவன் திடீரென மதிலைத் தாண்டிக் குதித்து வீட்டினுள்ளே புகுந்து விட்டான். அப்போது அவ் வீட்டில் வயதான கணவன் மனைவியைத் தவிர வேறு யாரும் இல்லை. வேறு யாரும் இல்லை என்பதைத் தெரிந்துதான் திருடனும் வந்திருந்தான்.

கள்வன் வீட்டுத் தலைவனை மிரட்டி அங்குள்ள நகைகளை எடுத்து வரக் கூறினான். பயத்தால் ஒன்றும் புரியாத வீட்டுத் தலைவன் நகைகளைக் கொண்டு வந்து கொடுத்தான். பிறகு அங்கே இருந்த அரிசி, பருப்பு, காய்கறிகளையும் திருடன் அள்ளிக் கொண்டான். ஏராளமான பொருள்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு போகிறோம் என்று திருடனுக்கு ஒரே மகிழ்ச்சி.

திருடும் பொருளின் மதிப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அற்ப ஆசை அந்தத் திருடனின் மனத்தில் தோன்றியது.

பெரியவரே! அந்தப் பதக்கம் எவ்வளவு பவுன் பெறும்? என்று கேட்டான் திருடன்.

பத்துப் பவுன் என்று தெரிந்திருந்தும் பெரியவர், ''ஐந்து பவுன்'' என்று சொன்னார்.

''அரிசி எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டான் திருடன்.

ஐம்பது கிலோ அரிசி என்று தெரிந்திருந்தும், ''இருபத்தைந்து கிலோ,'' என்று குறைத்துச் சொன்னார் பெரியவர்.

''காய்கறிகள் எவ்வளவு இருக்கும்?'' என்றான் திருடன்.

இருபது கிலோ என்று தெரிந்திருந்தும், ''பத்துக் கிலோ,'' என்று சொன்னார் பெரியவர்.

திருடன் அனைத்தையும் மூட்டை கட்டிக் கொண்டு கம்பி நீட்டினான்.

பெரியவரின் மனைவி பெரியவரைப் பார்த்து, ''இப்படி எல்லாப் பொருள்களையும் அவனிடத்தில் கொடுத்ததோடு அதன் அளவையும் பொய்யாகச் சொல்லியனுப்பினீர்களே, ஏன்?'' என்றாள்.

''எல்லாம் ஒரு காரணமாகத்தான்,'' என்றார் பெரியவர்.

''குறைத்துச் சொன்னாதாலே நமக்கு என்ன லாபம்? இப்ப எல்லாத்தையும் அல்லவா அள்ளிக்கிட்டுப் போயிட்டான். என்னமோ பெரிசா சாதிச்சிட்டாராம்!'' என்று சலித்துக் கொண்டாள் அந்த அம்மாள்.

பெரியவரின் சாதனை பிறகு தெரிந்தது.

திருடிய நகைகளை விற்க முயன்ற கள்வன் அவற்றின் எடையைக் குறைத்துச் சொன்ன போது, வியாபாரி நகைகளுக்கு உரியவன் அவனல்ல என்பதை உணர்ந்து போலீஸில் பிடித்துக் கொடுத்து விட்டான்.

பாவம்! திருடன் கம்பி எண்ணினான்.

திருட்டுப் போன பொருள்கள் வீட்டுத் தலைவரின் புத்திசாலித்தனத்தால் மீண்டும் கிடைத்தன!

— க. செந்தமிழ் சுப்ரமணியன், கோவிலூர்.



படிப்பு மட்டும் போதுமா?

பொன்னம்மாள் இட்லி, வடை சுட்டுப் பிழைப்பு நடத்தி வந்தாள். அவள் மகன் சோ . ஆறாம் வகுப்புப் படித்து வந்தான். பள்ளியில் அவன்தான் முதல் மாணவன்.

சோமு, அம்மாவுக்கு உதவியாகக் காலை நேரத்தில் எல்லாம் செய்வான். கல்லாவில் அமர்ந்து, இட்லி, வடை கேட்பவர்களுக்குப் பார்சல் கட்டிக் கொடுப்பான்.

சோமு கடைக்கு வந்து தனக்கு உதவி செய்வது, வியாபாரத்தைக் கவனிப்பது எல்லாமே பொன்னம்மாவுக்குப் பிடிக்கவில்லை.

''டேய் சோமு, நீ இங்கே வராதேடா, நான் கடையைக் கவனிச்சுக்கிறேன். நீ ஒழுங்காய் பள்ளிக்கூடம் போ,'' என்று விரட்டுவாள்.

ஆனால் சோமு அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டான். காலையில் எழுந்ததும் படித்து விட்டு, பிறகு அம்மாவுக்குச் சிறிது நேரம் உதவி செய்து விட்டுப் பிறகுதான் பள்ளிக்குச் செல்வான்.

அன்று பொன்னம்மா கடுமையான காய்ச்சலால் படுத்த படுக்கையாகி விட்டாள். சோமுவுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

அம்மாவின் சுருக்குப் பையைத் திறந்து பார்த்தான். அதில் இருபது ரூபாய் இருந்தது.

சோமு விரைந்து சென்று, ஒரு ரிக்ஷாவை அழைத்து வந்து, அம்மாவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான்.

பொன்னம்மாவைப் பரிசோதித்த டாக்டர், ''இது விஷ ஜுரம்,'' என்று ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்.

பொன்னம்மாள் பத்து நாட்கள் மருத்துவமனையில் இருந்தாள். பூரண குணமானது.

அன்று மருத்துவமனைக்குச் சென்ற சோமுவைப் பார்த்துக் கண்ணீர் விட்டாள். ''சோமு... நான் மருத்துவமனைக்கு வந்து பத்து நாட்கள் ஆகி விட்டன. இவ்வளவு நாட்களாகச் சாப்பாட்டுக்கு என்ன செய்தாய்?'' என்று கேட்டாள்.

''நான் பட்டினி கிடக்கவில்லை அம்மா... நன்றாகச் சாப்பிடுகிறேன். ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகிறேன். அதோடு கடையையும் நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன்,'' என்றான்.

பொன்னம்மாவின் மனத்தில் புதிய தெம்பு பிறந்தது.

''சோமு, எனக்கு வெளியில் மருந்து வாங்கினதுக்காக டாக்டர் நூறு ரூபாய் பணம் கேட்டார். அதை எப்படிக் கொடுப்பது என்றுதான் தெரியலே,'' என்று கவலையுடன் கூறினாள்.

''அதைப் பற்றி நீங்க கவலைப்படாதீங்க அம்மா. தினமும் பள்ளிக்கூடம் போவதற்கு முன், கடையில் இட்லி, வடை சுட்டு, வியாபாரம் செய்து அதில் கிடைத்த இலாபத்தைச் சேமித்து நூற்று ஐம்பது ரூபாய் வைத்திருக்கிறேன். அதில் நூறு ரூபாயை டாக்டருக்குக் கொடுத்து விடலாம்,'' என்ற சோமு ''அம்மா, நான் மட்டும் புத்தகப் புழுவாக இருந்திருந்தால் இப்போ நம்முடைய நிலை என்னவாகியிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்,'' என்றான்.

''எனக்குப் புத்தி வந்தது மகனே. படிப்பு மட்டும் போதாது என்பதை உணர்ந்து கொண்டேன் என்று சோமுவைக் கட்டி அணைத்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள் பொன்னம்மா.

— த. சரவணன், திருச்சி – 17.



முள்ளம்பன்றியும் முயலும்



இந்தக் கதை உண்மையில் நடந்திருக்குமா என்று நீங்கள் சந்தேகிக்கலாம். 'உணமையில் நடக்காததாய் இருந்தால் நம் முன்னோர்கள் சொல்ல மாட்டார்கள்,' என்று இந்தக் கதை சொன்ன என் தாத்தா சொன்னாரே!

பாக்ஸ்ஹாடர் ஈத் என்றொரு ஊரில் நடந்த அந்தக் கதை போகும் போக்கு இப்படித்தான்:

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. சூரியன் கொஞ்சம், கொஞ்சமாக மேலே ஏறிக் கொண்டிருந்தான். ஒரு புறம் வெப்பமும் மறுபுறம் சுகமான தென்றல் காற்றும் வீசிக் கொண்டிருந்தது. அறுவடைக் காலம். வானத்தில் அழகாக வானம்பாடிப் பறவைகள் பறந்து கொண்டிருந்தன. கரு வண்டுகள் கோதுமை தோட்டத்தில் ரீங்காரமிட்டுச் சுற்றின. ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாமல் சர்ச்சுக்குப் போகும் மக்கள் கையில் பைபிளோடு கூட்டம் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். சின்னக் குழந்தைகள் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தனர். சுருக்கமாகச் சொன்னால் சின்னப் பூச்சிகளிலிருந்து பெரிய பெரிய மனிதர்கள் வரை அனைவரும் அவரவர் வேலைகளைச் சந்தோஷமாகச் செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த ஊரின் முள்ளம் பன்றியும் அந்த ஞாயிற்றுக் கிழமையின் இனிய காலைப் பொழுதில் அதன் வீட்டு வாசலில் ஆனந்தமாகப் பாட்டு ஒன்றை முணுமுணுத்துக் கொண்டு சந்தோஷமாக நின்று கொண்டிருந்தது. தனக்கு ராகபாவத்தோடு தோன்றிய பாட்டு மற்றவர்களுக்குக் கர்ணகடூரமாய் இருப்பது அதற்குத் தெரியாது.

இப்படித் தன்னை மறந்து பாடிக் கொண்டு நின்ற முள்ளம் பன்றியின் மண்டையில் திடீரென்று ஓர் எண்ணம்: 'நம்முடைய முள்ளங்கித் தோட்டத்தைப் போய்ச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தால் என்ன? நம் மனைவியோ குழந்தைகளைக் குளிப்பாட்டிக் கொண்டு அவள் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். நாம் இங்கே என்ன செய்வது வெட்டு வெட்டென்று!'

தன்னுடைய முள்ளங்கித் தோட்டம் என்று பன்றி சொந்தம் கொண்டாடுவது உண்மையில் அவர்கள் வீட்டுப் பக்கத்தில் வசிக்கும் விவசாயியினுடையது! முள்ளம்பன்றி குடும்பம் தினமும் அந்த வீட்டுத் தோட்டத்து முள்ளங்கியைத் திருடித் தின்னும் பழக்க தோஷத்தால், மாற்றான் தோட்டம் நாளடைவில் சொந்தத் தோட்டம் என்று சொல்லுகிற உரிமையை எடுத்துக் கொண்டது.

சிந்தனையைச் செயலாக்க முள்ளம் பன்றி, முள்ளங்கித் தோட்டத்தை நோட்டம் விடப் போனது. போன இடத்தில் அங்கிருந்த ஒரு பெரிய புதரின் மறைவிலிருந்து வெளிவந்த முயல் ஒன்றைச் சந்தித்தது. இரண்டும் ஒன்றுக்கொன்று பரிச்சயம்

மூலம்: கிரிம் சகோதரர்கள் ☆ தமிழில்: எஸ். சித்ரா

செய்து கொண்டன.

முயலுக்குத் தான்தான் உயர்ந்தவன், ரொம்ப அழகு என்று மனதுக்குள் கர்வம். ஆகையால் அது முள்ளம் பன்றியைக் கொஞ்சம் அலட்சியமாகப் பார்த்து, "நான் என்னுடைய (அதாவது முள்ளம் பன்றி பாஷையில் மற்றவர்களுடையதைத் தன்னுடைய சொந்தம் என்பது போல்) கோஸ் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். ஆமாம், நீ எதற்கு இங்கு வந்தாய்?" என்று கேட்டது.

முள்ளம் பன்றி மிகவும் அடக்கமாகவும் பணிவாகவும் முயலின் முன் குனிந்து தலைவணங்கி, "முயலாரே! நான் எனனுடைய முள்ளங்கித் தோட்டத்தில் கொஞ்ச நேரம் உலா வரலாம் என்று அப்படியே வந்தேன்," என்றது.

இதைக் கேட்டதும் முயல் ஏளனமாகச் சிரித்தது, "என்னது, உலா வந்தாயா? ஓஹோ... உன்னுடைய இந்தக் குட்டைக் கோணல் கால்களை வைத்துக் கொண்டு உலா வந்தாயா, உலா!" என்று மேலும் சிரித்தது.

இந்த வார்த்தைகள் முள்ளம் பன்றியின் நெஞ்சை முள்ளாய்த் தைத்தது. அதற்கு ஏற்கெனவே அதன் கால்களைக் குறித்து வருத்தம். முயல் மேலும் அதைக் குத்திக் காட்டிப் பேசிய பேச்சு முள்ளம் பன்றிக்குச் சொல்ல முடியாத அளவு வருத்தத்தைக் கொடுத்தது.

குனிந்து தன்னுடைய குட்டையான, கோணலான கால்களைப் பார்த்துக் கொண்டது. பிறகு தொண்டை அடைக்க முயலைப் பார்த்து, "என்ன, உனக்குத்தான் என்னை விட அழகான கால்கள் என்று கர்வப்படுகிறாயா?" என்று அழுத குரலில் கேட்டது.

"ஆமாம். அதிலென்ன சந்தேகம் உனக்கு?" என்று முயல் தலை நிமிர்ந்து மென்மையான குரலில் சொன்னது.

"உன்னுடைய கர்வத்தை அடக்க என்னால் முடியும். பார்க்கிறாயா? ஒரு போட்டி வைப்போம். ஓட்டப் பந்தயப் போட்டி. யார் அதில் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள் தான் 'சிறந்த கால்கள் உடையவர்கள்' என்று முடிவு செய்வோம். என்ன, நீ தயாரா?" முள்ளம் பன்றி முன் வந்து கேட்டது.

போட்டியைப் பற்றிக் கேட்டதும் முயல் வாய் விட்டுச் சிரித்தது. "என்ன, விளையாடுகிறாயா? நீயாகவே தோற்றுப் போக முன்வரும் போது எனக்கென்ன கவலையப்பா? நான் தயார் போட்டிக்கு இப்பொழுதே. ஆமாம், ஜெயிப்பவர்களுக்கு என்ன பரிசு?"

"தோற்றவர்கள் ஒரு தங்கக் காசும் ஒரு பாட்டில் தேனும் கொண்டு வந்து ஜெயித்தவர்கள் கையில் தர வேண்டும். அதுதான் பரிசு," என்று பரிசை அறிவித்தது முள்ளம் பன்றி.

"நான் தயார் போட்டிக்கு. என்ன? நேர்கோட்டில் நின்று ஓடத் தயாராகலாமா பன்றியே!" என்று ஓடத் தயாராகக் கேட்டது முயல்.

"அவசரப்படாதே. நான் இதோ வீடு வரைக்கும் போய் என் காலை உணவை முடித்துக் கொண்டு வருகிறேன். காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் பசியாக இருக்கிறது. அரைமணி நேரத்தில் போய் விட்டுத் திரும்பிவிடுகிறேன். நீ ஓடிப் போய்ப்


[redacted]

"இருந்தாலும் எங்க தாத்தாவுக்கு ரொம்பத்தான் குறும்பு ஜாஸ்தி!"

"ஏன், என்ன பண்ணினார்?"

"பல்வலின்னு சொல்லி டாக்டர்கிட்டே தன் பொக்கை வாயைத் திறந்து காண்பிச்சிருக்கார்."

— சா. இரா. மணி.





பரிசுப் பொருளைக் கொண்டுவா. அதுதான் ஒரு பொன் காசும் புட்டித் தேனும்! ஜெயிக்கப் போவது நான் தானே? இதே இடத்தில் இன்னும் அரை மணியில் சந்திப்போம். வருகிறேன்,'' என்று விடைபெற்றுக் கிளம்பியது முள்ளம் பன்றி.

''சீக்கிரமாய்ப் போய் விட்டுத் திரும்பி வா. எத்தனை முறை ஓடினாலும் ஜெயிக்கப் போவது நான் தானே?'' என்று பதிலுக்குச் சவால் விட்டு விட்டுக் காத்துக் கொண்டிருந்தது முயல்.

முள்ளம் பன்றி போகும் வழியெல்லாம், 'எப்படியாவது நாம் போட்டியில் ஜெயிக்க வேண்டும். நமக்கிருப்பதோ குட்டைக் கால்கள் தான். ஆனால் நம்முடைய அறிவு ஒன்றும் குட்டையானதில்லையே! அதைப் பயன் படுத்தி நாம் ஜெயித்தே தீர வேண்டும். என்ன பண்ணலாம்? ஏதாவது ஒரு வழி நிச்சயம் கிடைக்கும்.' இப்படி யோசித்துக் கொண்டே போனது.

வீட்டை அடைந்ததும் முள்ளம் பன்றி அதன் மனைவியைப் பார்த்து, ''கண்ணே, சீக்கிரம் உன்னைத் தயார் படுத்திக் கொள். உன்னுடைய உதவி எனக்கு இப்பொழுது அவசியம் தேவைப்படுகிறது. என்ன? என்னுடைய உடைகளை எடுதது மாட்டிக் கொள். சீக்கிரம் கிளம்பு நம் முள்ளங்கித் தோட்டத்துக்கு,'' என்று கூறியது.

முள்ளம்பன்றி மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. 'உலாவப் போன கணவர் இப்படி வந்து உளறுகிறாரே, என்ன விஷயம்?' என்று ஆச்சரியத்துடன் பார்த்து, ''என்ன ஆயிற்று அத்தான்? எங்கே போகணும்? எதற்காக?'' என்று கேள்விகளை அடுக்கியது.


''ஒன்றும் விபரீதம் இல்லை. நான் முயலுடன் ஓட்டப் பந்தயப் போட்டியில் ஜெயிப்பதாகச் சவால் விட்டிருக்கிறேன் — நம் முள்ளங்கித் தோட்டத்தில். அதற்கு நீயும் என்னுடன் களத்தில் இறங்க வேண்டியது ரொம்ப முக்கியம். அதனால்தான் உன்னை அழைக்கிறேன். உம், கிளம்பு!''

''என்ன விபரீதம்? ஓட்டப் பந்தயத்தில் முயலை நீங்கள் ஜெயிப்பதாவது! என்ன முட்டாள்தனமான சவால் இது?'' முள்ளம்பன்றி மனைவி விரிட்டது.

''நீ வாயை மூடடி. கணவன் பேச்சுக்கு எதிர்ப்பேச்சுப் பேசுவது ஒரு மனைவிக்கு அழகில்லை. நீ பேசாமல் உன் திருவாயை மூடிக் கொண்டு என்னோடு வந்தால் போதும். மற்றதை நான் பார்த்துக் கொள்வேன். பேசாமல் கிளம்பு,'' என்று மனைவியை அதட்டி உடன் அழைத்துச் சென்றது.

பாவம், அந்தப் பெண் முள்ளம் பன்றி கணவனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டுப் பேசாமல் அதன் பின்னால் சென்றது.


இரண்டு முள்ளம் பன்றிகளும் காட்டுப் பாதை வழியில் முள்ளங்கித் தோட்டத்திற்கு நடந்து போய்க் கொண்டே இருந்தன. வழியில் ஆண் பன்றி திரும்பி அதன் மனைவியைப் பார்த்து, ''பெண்ணே, நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நானும் முயலும் அதோ அந்தப் பெரிய தோட்டத்தின் பாதையில்தான் பந்தயத்திற்காக ஓடப் போகிறோம். கவனித்துக் கொள். ஆழமாக உள்ள அந்த உழவுக் களத்தையும் பார்த்து வைத்துக் கொள்,'' என்று சுட்டிக் காட்டியது.



''எல்லாம் சரிதான், எனக்கு இதையெல்லாம் ஏன் காட்டுகிறீர்கள்?''

''அதோ, அந்த உழவுப் பாதையில் தான் நாங்கள் ஓடுவோம். அப்படி நாங்கள் ஓடுவதற்காக ஒரு மூலையி

லிருந்து ஆரம்பிக்கும் போது நீ மறு முனையில்—அதாவது முடிவுக் கட்டத்தில் போய் ஒளிந்து கொண்டு இருக்க வேண்டும். நான் இங்கேயிருந்து ஓடத் தயாராகி ஓடிக் கொண்டிருக்கும் போது, நீ அந்த முடிவுப் பகுதியிலிருந்து மெல்ல வெளி வந்து, முயலின் முன் எழுந்து நின்று, 'இதோ, நான் பந்தயத்தில் ஓடி முன்பே, வந்துவிட்டேன்!' என்று கூவ வேண்டும். முயலும் நான்தான் பந்தயத்தில் ஓடி முன்னால் வந்துவிட்டேன் என்று நினைத்து ஏமாந்து விடும். நாம் இருவரும் உருவ ஒற்றுமையில் ஒரே அச்சில் வார்த்தது போல் இருக்கிறோம், அல்லவா? அதனால் முயலுக்குச் சந்தேகம் வராது. நான் 'தந்திரமாகப் பாதியிலேயே பள்ளத்தில் ஒளிந்து கொள்வேன். எப்படி என் சாமர்த்



தியம்? ஹாஹா...'' என்று கொக்கரித்தது.

— இப்படியாகத் திட்டம் தீட்டி விட்டு, முள்ளம்பன்றி போட்டிக்குத் தயாரானது.

போட்டியின் ஆரம்பத்திலிருந்து முயல் படுவேகமாகக் கால்கள் பிடரியில் பட ஓடியது. சுற்றுமுற்றும் எதையும் கவனிக்கவில்லை. தந்திரமாகப் பன்றி பாதியிலேயே பள்ளத்தில் ஒளிந்து கொண்டதையும் அது கவனிக்கவில்லை.

வெற்றி எல்லையில் ஒளிந்திருந்த பன்றியின் மனைவி முன்வந்து, ''இதோ, நான் ஜெயித்து விட்டேன் முயலாரே!'' என்று கொக்கரித்ததே பார்க்க வேண்டும்!

முயலுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'என்ன அதிசயம்! காற்றைவிட வேகமாக ஓடியும் நம்மை இந்தக் குட்டைக்கால் பன்றி ஜெயிப்பதாவது!' என்று திகைத்து நின்றது.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு தன் தோல்வியை எண்ணி வருந்திக் கொண்டே வந்த முயலின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு அந்தப் பெண் முள்ளம்பன்றி நடுவழியில் நைஸாகத் திரும்பி, பழைய இடத்திலேயே போய்ப் பதுங்கிக் கொண்டது. நடுவில் பதுங்கியிருந்த ஆண் பன்றி வெளி வந்து தான்தான் ஜெயித்த மாதிரி அதன் கூடத் திரும்ப வந்து சேர்ந்து கொண்டது.

திரும்பி முள்ளம்பன்றியைப் பார்த்த முயல், ''இந்த முதல் போட்டி எனக்கென்னவோ திருப்தியாக இல்லை. வேண்டுமானால் இன்னொரு முறை ஓடுவோமா? நான் தயார், நீ தயாரா?'' என்றது.


''எத்தனை முறை வேண்டுமானாலும் ஓட நான் தயார். ஏனென்றால் எப்படியும் ஜெயிக்கப் போவது நான்தானே?'' என்று ஓடத் தயாராக நின்றது பன்றி.


மறுபடியும் அதேபோலத் தந்திரம் செய்து, பன்றி முதலில் வந்தது போல் காட்டிக் கொண்டது.

முயலுக்குத் திருப்தியில்லை. தன் தோல்வியை ஒப்புக் கொள்ள மனம் வராமல் முயல் எழுபத்து மூன்று முறை ஓடி, ஒவ்வொரு முறையும் பன்றியே ஜெயிப்பதைப் பார்த்து அசந்து விட்டது.

ஓடி ஓடி ஓய்ந்து போன முயல், பன்றியைப் பார்த்து, ''எழுபத்து மூன்று முறை ஓடியும் என்னால் ஜெயிக்க முடியவில்லையே! வெற்றி உனக்குத்தான் பன்றியாரே!'' என்று அதற்குரிய பரிசையும் அதனிடம் கொடுத்தது.

வெற்றிக் களிப்பில் பரிசுடன் வந்த பன்றி, அதன் மனைவியிடம் போய், ''இனிமேல் நாம் வீட்டுக்குப் போகலாம், வா வெளியே,'' என்று அதனை அழைத்துக் கொண்டு சந்தோஷமாக வீடு வந்து சேர்ந்தது பரிசுப் பொருட்களோடு.


உல்லாச ஊஞ்சல்!
தந்தை மாலா 1
ஒரு காட்டில் ஆந்தைகுருவி, ஒருதவளை, ஒருஎலி ஆகிய இந்த நான்கு பிராணிகளும் மிக்க ஒற்றுமையுடன் நண்பர்களாக வாழ்ந்து வந்தன!
காட்டில் இருந்த மரங்களை எல்லாம் நாகரிகமக்கள் தங்கள் தேவைக்காக வெட்டிக் கொண்டு போய் விடவே இந்த நான்கு உயிரினங்களும் இரை கிடைக்காமலும் தின்னத் தீனி இல்லாமலும் தவித்தன!
2
ஆற்றுக்கு அக்கரையில் அமைதியாக நிறைய மரங்கள் இருந்தபடியால் நான்குமே அக்கரை போய்ச் சேர முடிவாகத் தீர்மானித்தன!
நான்கும் ஆற்றின் கரையை அடைந்தன! குருவியும் வண்ணத்துப் பூச்சியும் பறந்துசென்று அக் கரை அடையலாம். தவளை நீரில் நீந்தி அக்கரை போய்ச் சேரலாம். நண்டு எலியை எப்படி அழைத்துச் செல்வது? நான்கும் யோசித்து ஒரு முடிவெடுத்தன!


3
சிட்டுக்குருவி பறந்துபோய் ஒரு கொட்டாங்கச்சியைக் கொண்டு வந்தது! வண்டு ஒன்று கொஞ்சம் நூல் சேகரித்து வந்தது. இவைகள் கொட்டாங்கச்சியைப் பிடித்துக் கொள்ள, எலி அதன் நான்கு பக்கங்களிலும் நான்கு துவாரங்கள் செய்தது! எல்லாமாகச் சேர்ந்து அழகான ஓர் ஊஞ்சல் தயாரித்தன.
4
கரைப் பகுதியில் நாலும் அக்கரையை அடைந்தன. மிகுந்த மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் தங்கள் தங்கள் இருப்பிடங்களை அமைத்துக்கொண்டு அழகாக வாழ்ந்து வந்தன.
ஊஞ்சலில் எலி ஒய்யாரமாய் அமர்ந்துகொள்ள குருவி ஊஞ்சல் நூலைப் பற்றித் தன் மூக்கில் கவ்விக்கொண்டு பறந்தது! வண்டும் கூடப் பறந்தது! தவளை நீந்திப் போயிற்று!!
இவைகளின் விடாமுயற்சியும் ஒற்றுமையும் நண்பனை நீந்தக்கூடாமல் அழைத்து வந்ததையும் பார்த்தீர்களா குழந்தைகளே! நீங்களும் இதுபோல் கூடி வாழ்ந்தால் எவ்வளவு அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கலாம்.
வணக்கம்
டா டா
பை பை
போய்வா

அப்பா தந்த

வெளி கேட்டுக்கு அருகில் சற்றுக் கந்தலான வேட்டியும், சட்டையும், தோளில் துண்டுமாக ஒருவர் காவல்காரனிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

"என்னங்க, இங்கே சின்னு எந்த ரூம்ல இருக்கான்?"

"இப்படி மொட்டையா கேட்டா எப்படி ஐயா? எந்தச் சின்னு? எந்தக் கிளாசு?"

"இந்த டிகிரி படிப்பு படிக்குதுங்களே. எம் பையன் சின்னு. அவன் தானுங்க."

"நேரா போய் வலது பக்கமாத் திரும்பு. வார்டன் இருப்பாரு. அவருகிட்டே கேளு..."

"உள்ளே சென்றார் சின்னுவின் தந்தை அழகப்பன். சின்னு என்பது அவர் பையனை அழைக்கும் செல்லப் பெயர். சின்னுவின் உண்மைப் பெயர் நந்து. கஷ்டப்பட்டுக்கழனியில்வேலை செய்து மகனைப் படிக்க வைத்திருக்கிறார் அழகப்பன். மகனிடமிருந்து ஒரு மாதமாய் ஏதும் தகவல் இல்லையே என்று கவலைப்பட்ட அம்மா, நேரில் பார்த்து வரும்படி அவரை அனுப்பி வைத்திருந்தாள்.

வார்டனிடம் விசாரிக்க, அவர் அறையைக் காண்பித்தார்.

"சின்னு! சின்னு!" என்று அழைத்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தார், அழகப்பன்.

அறையில் மாணவர்கள் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். நந்துவும் இருந்தான்.

"தந்தையைப் பார்த்ததும், இருங்கடா வர்றேன்!" என்று எழுந்து ஓடி வந்த வந்த நந்து, அவரை வராந்தாவுக்கு அழைத்து வந்தான். "என்னப்பா, திடீரென்று?" என்று அதட்டியவன் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தான்.

"என்னப்பா நந்து, எப்படியிருக்கே? நல்லா இருக்கியா? எப்படிப் படிக்கிறே? ஏன் வீட்டுக்குக் கடிதமே போடறதில்லே?"

"நான் நல்லாத்தான் இருக்கேன். சரி சரி... நீ கிளம்பு..." அவசரப் படுத்தினான்.

"என்னப்பா இது! வந்ததும், வராததுமா உடனே கிளம்பச் சொல்றே?"

"இல்லப்பா, நான் படிச்சுக்கிட்டு இருக்கேன், சார் வந்தா இப்படி நின்னுக்கிட்டுஇருக்கிறதைப்பார்த்தா சத்தம் போடுவாரு. நீ கிளம்பு. இப்போ எதுக்கு வந்தே?"

"ஆமாம் நந்து. நல்லாப் படிக்கணும்... படிக்கிற போது தொந்தரவு செய்யக் கூடாது. சரி... நான் போயிட்டு வர்றேன். நீ மட்டும்



அதிர்ச்சி

தவறாம கடிதாசி போடு. போதும்.''

''எல்லாம் போடறேன். நீ சீக்கிரம் கிளம்பு.'' தகப்பனைத் துரத்தினான் நந்து.

அவரும் வெளியே நடந்தார்.

உள்ளே வந்த நந்துவை மற்றச் சகாக்கள் துளைத்தனர். ''யாருடா அந்த அழுக்கு வேட்டி?''

''யாரைச் சொல்றீங்க?''

''அதுதாண்டா நீ வெளில தள்ளிட்டுப் போனியே. அந்தச் சொட்டைத் தலை? நாங்க கவனிக்கலேன்னு நினைச்சியா?''

''ஓ, அவரா? அவரு... எங்க வயல்லே வேலை செய்யறவரு. அப்பா அனுப்பி வைச்சிருக்காரு. பணம் குடுத்திட்டுப் போக வந்திருக்காரு.''

''கையில் செலவுக்குப் பணம் கொடுத்துவிட்டுப் போகலாமே என்று மீண்டும் அறைக்குத் திரும்பிய போது மகன் கூறியதைக் கேட்ட அழகப்பன் மனம் நொந்தார். பணம் கொடுக்காமலேயே திரும்பி விட்டார்.

நாட்கள் பல கடந்தன.

நந்துவிடமிருந்து கடிதம் வந்தது.

'வருகிற 25 — ஆம் தேதி எனக்குத் தேர்வு ஆரம்பமாகிறது. 10 — ஆம் தேதிக்குள் பணம் கட்டியாக வேண்டும். இதற்குள் வந்திருக்க வேண்டிய உங்கள் பணம் இன்னும் ஏன் வரவில்லை? பணம் கட்டவில்லை. என்றால் தேர்வு எழுத முடியாது. உடனடியாக அனுப்பி வைக்கவும். — நந்து.

அழகப்பன் கண் கலங்கி மனைவியிடம் பொருமினார்.

''மகன் எழுதியிருக்கிறதைப் பார்த்தியா? அன்புள்ள அப்பாவுன்னு எழுதிக் கடிதத்தை ஆரம்பிச்சிருந்தா அவன் கௌரவம் குறைஞ்சு போயிடும் போலிருக்கு! மொட்டையா எழுதியிருக்கான். நீங்க நலமான்னு கூடக் கேட்கலே!''

''என்னங்க செய்யறது எல்லாம் நம்ம தலையெழுத்து..''

மூன்று நாள் கழித்து நந்துவுக்குக் கடிதம் வந்தது!

அன்பை மறந்த சின்ன ஐயா அவர்களுக்கு, வயலில் வேலை செய்யற வேலைக்காரன் எழுதிக் கொண்டது... வயலில் வேலை பார்க்கும் சாதாரண வேலைக்காரனான என்னைப் பணம் அனுப்பச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கீங்களே, இது நியாயமா? உங்கப்பாவுக்கு எழுதிக் கேளுங்க!


— இப்படிக்கு, வேலைக்காரன்.

நந்துவுக்கு ஷாக் அடித்தது போலிருந்தது. அதிர்ச்சி வைத்தியம் நல்ல விளைவைக் கொடுத்தது.

ஸ்ரீசசிதரன் —



எல்லோருமே கொண்டாடிய தினம்



மே மாதம் முதல் தேதி உலகிலுள்ள தொழிலாளர்களின் நல உரிமையை நினைவு படுத்தும் தினமாக இன்று எங்கும் கொண்டாடப்படுகிறது. இது இப்படித் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுவது 1889 முதல்தான்.

ஆனால் மே தினத்தை மேலை நாடுகளில் பல நூற்றாண்டுகளாகவே கொண்டாடி வருகிறார்கள். எப்படி?

புராதன ரோமானியர்கள் காலத்தில் மே தினத்தன்று, கனிகளுக்கும் மலர்களுக்கும் தேவையான 'ப்ளோரா'வைக் கௌரவிப்பதற்காக, இளைஞர்களும் யுவதிகளும் வயல்வெளிகளை நோக்கி ஆடிப் பாடிக் கொண்டு போவார்கள். மத்திய காலத்தில் மக்கள் மே தினத்துக்கு முதல் நாள் மாலையே கானகத்துக்குச் சென்று விருந்தும் கேளிக்கையுமாக இரவை அங்கேயே கழிப்பார்கள்.

அழகை அதிகரிக்கச் செய்யும் அரு மருந்தாக மே தினத்தன்று அதிகாலை வேளையில் புல், இலைகளின் மீது படிந்துள்ள பனித்துளி நம்பப்பட்டது. ஆகவே, பெண்கள் அதிகாலையில் எழுந்து தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் போய்ப் பனித் துளிகளைச் சேகரித்து முகத்திலும் உடலிலும் பூசி மகிழ்வார்கள்.

கடந்த நூற்றாண்டில் மே தினம் எப்படிக் கொண்டாடப்பட்டது?

இலை, தழை, மலர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கோபுரம் போன்ற கூண்டுக்குள் ஒரு மனிதன் புகுந்து கொண்டு வீதிகளில் பவனி வருவான்.


இந்த நடமாடும் தழைக் கோபுரத்தோடு ஒரு பெண் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் வருவாள். கூட்டம், கும்மாளம் குதூகலம்தான்!

'மே' என்ற பெயரே 'மேயா' தேவதையைக் குறிப்பதுதான். உலகத்தைச் சுமக்கும் 'அட்லஸ்' என்ற தேவனின் மகள் இவள். இவள்தான் மே தின ராணி. இங்கிலாந்து மக்கள் இடைக் காலத்தில் மே தினம் கொண்டாடியிருக்கிறார்கள். எப்படி?

பிரிட்டனில் பல பாகங்களில் 'மே தின ராணி' தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். குறிப்பாக லண்டனில் மே தின ராணிக்கு மகுடம் சூட்டுவார்கள். இது மிகவும் பிரபலமானது.

— ஆர். ஜெயலட்சுமி,
திருநெல்வேலி – 6.








கசியப முனிவருக்கு இரு மனைவியர். ஒருத்தி கத்ரு...
சுவாமி! எனக்கு ஆயிரம் பிள்ளைகள் வேண்டும்! வரம் கொடுங்கள்!
முனிவர் ஆயிரம் முட்டைகளைத் தோற்றுவித்தார்...
கத்ரு! இவற்றை அன்புடன் பாதுகாத்து வா!
கருடன்
கதை: ஆனந்தி
படம்: விஜி
மற்றொரு மனைவி விநதை கோரிய வரம்...
சுவாமி! எனக்கு இரு புதல்வர்கள் போதும். ஆனால் அவர்கள் ஆற்றலிலும் வலிமையிலும், சிறந்து விளங்க வேண்டும்.
கசியப முனிவர் இரண்டு முட்டைகளைத் தோற்றுவித்தார்...
அப்படியே ஆகட்டும்... சூரியனுக்கு நிகரான பிள்ளைகள் உனக்குக் கிடைப்பார்கள்....
ஐந்நூறு ஆண்டுகள் சென்றன... கத்ரு விட்டில் முட்டைகள் வெடித்து...
ஆயிரம் நாகர்கள் எனக்குப் புதல்வர்களாகக் கிடைத்திருக் கிறார்களே!




விநதை வருத்த மடைந்தாள்...
கத்ருவின் பிள்ளைகள் விளையாடத் தொடங்கி விட்டார்கள். நான் எத்தனை காலம் காத்திருப்பது....?
அன்றிரவு பொறுமை இழந்த விநதை ஒரு முட்டையை உடைத்துப் பார்க்க...
அம்மா! என்னை ஊனமுற்றவனாக்கி விட்டாயே...! என் கால்கள் வளருமுன் அவசரப்பட்டு விட்டாயே!
நீ கத்ருவிடம் பொறாமைப் பட்டதால் அவளுக்கு அடிமை யாவாய்... என் தம்பி நன்கு வளரும் வரை யாவது பொறுத்திரு!
விநதையின் மகன் கோபத்தில் செந்நிறமாக ஜொலித்தபடி ஆகாயத்தில் கிளம்பினான்...
சூரியன் உதயமாகி...
எனக்கு நிகரான காந்தியுடைய நீ, எனது தேர்ப்பாகனாக இரு! அருணன் என்ற பெயரோடு நீ புகழ் பெறுவாய்!


ஒரு நாள் கத்ருவும் விநதையும் சந்தித்தபோது...
விநதா! தேவேந்திரனின் குதிரையான உச்சை சிரவம் என்ன நிறம்?
சந்தேகமென்ன, சுத்த வெண்மை தான்!
அதன் வால் மட்டும் கறுப்பு என்று நான் சொல்கிறேன்... குதிரை முழு வெண்மையானால் நான் உனக்கு அடிமை!
கத்ருவின் சவாலை விநதை ஏற்றாள்...
அதன் வால் கருமையாக இருந்தால் நான் உனக்கு அடிமையாகி பணிவிடை செய்கிறேன்!
கத்ரு தன் பிள்ளைகளாகிய நாகர்களை அழைத்து...
தக்ஷகா! கார்க்கோடகா! காளியா! வாஸுகி! நாளை உச்சை சிரவம் வரும்போது அதன் வாலில் ஒட்டிக்கொண்டு கறுப்பு நிறமாகத் தெரியும்படி செய்ய வேண்டும்!
மறுநாள்...
விநதா! அதோ பார்! உச்சை சிரவஸின் வால் வெள்ளையாகவா இருக்கிறது?
இது என்ன மாயம்!


விநதை அடிமைப் பட்டுப் போனாள்...
நீயும் இனி தோன்றப்போகும் உன் மகனும், என்றும் என் பிள்ளைகளுக்கும் ஏவல் செய்யவேண்டும்!
பிறந்த கணமே மளமளவென்று வளர்ந்து...
அடேயப்பா! சூரியனை மறைக்கும் மேகம் போல் என்ன வளர்ச்சி!
பல நூறு ஆண்டுகள் சென்றன... விநதையின் வீட்டில் மற்றொரு முட்டை உடைந்து, கருடன் தோன்றினான்...
ஆற்றலும் பலமும் பெற்று நீடு வாழ்வாய்!
கருடன் பிறந்த விவரம் அறிந்து கத்ரு வந்தாள்...
நினைவிருக்கிறதா? நீங்கள் இருவரும் என் அடிமைகள்!
என்ன செய்ய வேண்டும்?
ஏழுகடல்களுக்கு மத்தியில் என் பிள்ளைகள் விளையாட ஏற்ற பெரிய தீவு இருக்கிறது. அங்கே எங்களைத் தூக்கிச் செல்லுங்கள்!




கருடன் தன் ஆயிரம் சகோதரர்களைத் தூக்கிக் கொண்டு பறந்தான்.
கத்ருவைத் தோளில் சுமந்த விநதை தன் கற்பின் சக்தியால் பறந்தாள்.
ரமணியகம் என்ற தீவை அடைந்தனர்.
தீவின் ஒரு தனிமையான இடத்தில் கருடன்...
அம்மா! நாம் இவர்களுக்குப் பணிந்து, இட்ட கட்டளைகளையெல்லாம் நிறைவேற்றுவது ஏன்?
விநதை நடந்ததையெல்லாம் கூறி...
பறவைகளின் அரசனாக நீ விளங்கியும், பிறக்கும்போதே அடிமையானாய்! என்னால் நான் உனக்கு இந்த கதி.



மாத்ரு பக்தி மிக்க கருடன், நாகர்களிடம் சென்று...
அடிமைத் தனத்திலிருந்து என் அன்னையை விடுவிக்க நான் என்ன செய்ய வேண்டும்?
நாகர்கள் கேலியாக...
ஏன், உன்னால் முடியுமானால் அமிர்த கலசத்தை தேவருலகிலிருந்து கொண்டு வாயேன்! உங்களுக்கு விடுதலை அளிக்கிறோம்!
கருடன் விடை பெற்றான்...
அம்மா தைரியமாக இரு! அமிர்த கலசம் கொண்டு வரப்போகிறேன்!
உனக்கு வெற்றி உண்டாகட்டும்.
கருடன் தன் தந்தை கசியப முனிவரை அணுகி...
கசிய முனிவரின் உபதேசங்களை ஏற்றுக் கொண்டு பறந்தான் கருடன்....
என் அண்ணன்மார்களின் விருப்பத்தை நிறைவேற்றச் செல்கிறேன்... எனக்குச் சக்தி உண்டாக ஆசி கூறுங்கள்.
அதோ, தந்தை குறிப்பிட்ட ஏரிக்கரை!



அடேயம்மா! இந்த யானையும் ஆமையும் எவ்வளவு பெரிசு! இவைதாம் தந்தை சொன்ன ஸுப்ரதீகன், விபாவஸுவாக இருக்க வேண்டும்!
இரண்டையும் இரு கால்களில் தூக்கிக் கொண்டு பறந்தான் கருடன்...
கருடன் தேவலோகத்தை நெருங்க, கற்பக விருட்சங்கள் இலைகளை உதிர்த்தன...
கடைசியாக ஓர் ஆலமரத்தைக் கருடன் அடைய...
உங்களுக்குச் சாபம் நீங்கும் சமயம் நெருங்கி விட்டது...
கருடன் பறக்கும் வேகத்தில் காற்றும் புயல் போல் வீசுகிறது!
என் நீண்ட கிளையில் அமர்ந்து உணவைச் சாப்பிடு!...
கருடன் அவ்வாறே கிளையில் இறங்க...
அடடா! இதில் பிரும்மரிஷிகள் தவம் செய்வதைக் கவனியாமல் போனேனே...



ரிஷிகளின் தவம் கலையாமல் பறந்து விடக் கருடன் எண்ணினான். .. அதற்குள்...
ஆ! என் பளு தாங்காமல் கிளை முறிகிறது....!
முறிந்த கிளை கீழே விழுமுன்னர், அதனை அலகில் கொத்திக் கொண்டு பறந்தான் கருடன்...
இந்த ரிஷிகளுக்குத் துன்பம் நேரக்கூடாது; கிளையோடு என் தகப்பனாரிடம் கொண்டு செல்கிறேன்...
கசியப முனிவர்...
கருடா! என்ன காரியம் செய்தாய்...! சூரிய கிரணங்களையே உண்டு தவம் செய்யும் வாலகில்ய மகரிஷிகளின் கோபம், உன்னைச் சாம்பலாக்கி விடுமே...!
வாலகில்யர்கள் கிளையிலிருந்து இறங்கிக் கொண்டனர். கருடன் மன்னிப்பு வேண்டினான்.
தவ முனிவர்களே! நான் அறியாமல் செய்த பிழையை மன்னியுங்கள்.
உன் பலம் மேலும் பெருகும்! எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவாய்! நாங்கள் இனி இமயமலைச் சாரலில் தவம் செய்யப் போகிறோம்.


கருடன் தந்தையை வணங்கி விடை பெற...
இந்தக் கிளையை மனித சஞ்சாரம் இல்லாத, பனியால் மூடப்பட்ட அந்த மலைப் பகுதியில் போட்டுவிடு!
கருடன் அவ்வாறே செய்ய மலைச் சிகரங்கள் வெடித்துப் பள்ளத் தாக்கில் சரிந்தன.
யானையையும் ஆமையையும் புசித்து கருடன், மேலும் பலம் பெற்று தேவலோகம் நோக்கிப் பறந்தான்.
தேவேந்திரன், குரு பிருகஸ்பதியிடம்....
தேவலோகத்தில் கூட பூகம்பம் உண்டாகுமா? இதென்ன அபசகுனம்?
கருடன் வரும் வேகத்தில் உருவாகும் நடுக்கம் தான் இது! உன்னால் முடியுமானால், அமிர்த கலசத்தை அவனிடமிருந்து காத்துக்கொள்!


தன்னைத் தடுக்க முயன்ற தேவர்களை அலகினால் கொத்தி, நகங்களால் கீறி, சிறகுகளால் அடித்தான் கருடன்...
ஐயோ! ஆ!
ஐகு! ஐகு!
அமிர்த கலசக் காவலர்களை நெருங்கிய கருடன்...
என் அன்னையை அடிமைத்தனத்திலிருந்து மீட்க வேண்டும். என்னைத் தடுக்காதீர்கள்!
காவலர் தலைவன் பௌமன் சம்மதிக்காமல் போகவே, சிறகினால் புழுதிப் புயலைக் கிளப்பினான் கருடன்..
ஆ! கண் தெரியவில்லையே? ஒரே இருட்டாகி விட்டதே!
கருடன் காவலர்களைக் கடந்து போக முயன்ற போது...
ஆ! இந்த எல்லையைக் கடந்ததும் அக்னி கொழுந்து விட்டு எரிகிறது... மேலே எப்படி செல்வது?
கருடன் தன் தாய் தந்தையரை மனதில் வணங்கி, எட்டாயிரம் வாய்களைப் பெற்றான்...
எட்டாயிரம் வாய்களில் நதி நீரைக் கொண்டு வருவேன்!


காற்றைவிட வேகமாகப் பறந்துத் திரும்பிய கருடன் நெருப்பை அணைக்க... புகை சூழ்ந்தது!....
அதோ அமிர்த கலச மண்டபம்... மலைப்பாம்புகள் காவலிருக்கின்றன...
கண்களில் விஷமுள்ள இந்தப் பாம்புகள் என்னைப் பார்த்துவிடக் கூடாது. சிறிய உருவம் எடுத்துக் கொள்கிறேன்..... புகையில் மறைந்து செல்வேன்....
பாம்புகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மண்டபத்தில் நுழைந்தான் கருடன்.
சுழலும் சக்கரத்தின் மத்தியில் அமிர்த கலசம்.
அமிர்தத்தை உண்ணும் ஆசையின்றி, தாயிடம் அன்பு மேலிட்டு, கலசத் துடன் பறந்து சென்றான்.
கருடன் களைப்பின்றி பறப்பதையும் அவன் ஆற்றலையும் கண்ட மகாவிஷ்ணு!...
உனக்கு நான் வரம் தர விரும்புகிறேன்!



சுவாமி! உமக்கு மேலே நான் இருக்க வேண்டும்!
அப்படியானால் என் கொடியில் நீ இடம் பெறுவாய்! அமிர்தம் உண்ணாமலேயே சாகா வரம் பெறுவாய்!
சுவாமி, தாங்களும் பதிலுக்கு என்னிடமிருந்து ஏதாவது பெற்றுக் கொள்ளுங்கள்!
அப்படியே ஆகட்டும்; நீ என் வாகனமாக இருக்க வேண்டும்.
என் பாக்கியம்!
அமிர்த கலசத்துடன் பறக்கும் கருடனைத் தடுக்க எண்ணிய இந்திரன்...
வஜ்ராயுதத்தை வீசுகிறேன்!
கருடன் சிரித்தபடி...
வஜ்ராயுதம், ததீசி முனிவர் அளித்தது. அவருக்கு மரியாதை செலுத்த ஒரே ஒரு இறகை உதிர்க்கிறேன்...
வஜ்ராயுதத்தாலும் கருடனை வீழ்த்த முடியாதது கண்ட இந்திரன்...
என்றும் என் நண்பனாய் இரு...
அப்படியே ஆகட்டும். தேவர்களுக்கு நன்மையே செய்கிறேன்.



இந்திரன் கவலை...
அமுதத்தை நாகர்கள் உண்டால் சர்வமும் அடைந்து தேவர்களைக் கஷ்டப்படுத்துவார்கள்!
அதைத் தவிர்க்க ஒரு யோசனை! நான் இதை ஓரிடத்தில் வைப்பேன். உடனே நீங்கள் அதை எடுத்துப் போய் விடலாம்!
கருடன் தாயாரிடம் வந்து...
இதோ அமுதம்! இனி உனக்கு விடுதலை!
உன்னை மகனாக அடைந்த நான் பாக்கியசாலி.
கருடன் அமுதகலசத்தைத் தர்ப்பை பரப்பி, அதன் மீது வைத்தான்... நாகர்கள் மகிழ்ந்து...
தம்பி நீ வாழ்க!
ஸ்நானம் செய்து அந்தரங்க சுத்தியுடன் சாப்பிடுங்கள்...
...அதற்குமுன் என் அன்னையை அடிமைத் தளையிலிருந்து விடுவித்ததாய்க் கூறுங்கள்!
விடுவித்தோம்! விநதைக்கு விடுதலை!



நாகர்கள் குளித்துவரச் சென்றபோது இந்திரன் அமுத கலசத்தை எடுத்துக் கொண்டு தேவலோகம் சென்றான்...
கருடா, நன்றி!
திரும்பி வந்த நாகர்கள்...
ஐயோ! மோசம் போனோம்... கலசத்தைக் காணோமே!
தர்ப்பையின்மீது சிந்தியிருக்கலாம்.
அமிர்தம் சிந்தியிருக்கலாம் என்று எண்ணி, தர்ப்பையை நக்கியதால் நாகங்களின் நாக்கு இரண்டாகப் பிளந்தது...
நம் தாயாருக்காக நாம் மோசம் செய்தோம்!
குதிரை வாலில் தொங்கி அதைக் கறுப்பாகக் காட்டினோம்...
...இப்போது நாமும் மோசம் போனோம்!
நாகர்களில் ஒருவனான ஆதிசேஷன் மனம் வருந்தி...
நான் தீர்த்தயாத்திரை செய்து இந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்வேன்...


பல புனித நதிகளில் ஸ்நானம் செய்து, இமயத்தை அடைந்து கடும் தவம் செய்தான் ஆதிசேஷன்....
...பிரும்மா தோன்றி...
சேஷனே, என்ன வரம் வேண்டும்?
சுவாமி! என் தாயும் சகோதரர்களும் கருடனிடம் பகைமை கொண்டிருக்கிறார்கள்...
...அவர்கள் தொடர்பு எனக்கு இல்லாமல் இன்னொரு பிறவி வேண்டும்..
உன் மனம் தூய்மையானது. இந்த உடலை நீ விட வேண்டாம். இந்தப் பிறவியிலேயே நீ விரும்புவது கிடைக்கும்.
நீங்கள் என்ன சொன்னாலும் சரி.
சேஷனே! கடல் சூழ்ந்த இந்தப் பூமியை நீ உன் தலையில் தாங்கிக் கொண்டிரு!


அப்போது கருடன் வர...
கருடா! உன் சகோதரர்களில் ஆதிசேஷன் உன்னிடம் ரொம்பப் பிரியம் கொண்டிருக்கிறான். நீயும் அவனிடம் மட்டில்லா அன்பு வைக்க வேண்டும்...
பிரும்மா மறைய...
ஆதிசேஷா! நாம் இருவரும் நாராயணனைத் துதித்து நற்கதி பெறுவோம்...
அன்று முதல் ஆதிசேஷன் இந்த உலகத்தைத் தமது ஆயிரம் தலைகளால் தாங்குகிறார்.
கருடன் விஷ்ணுவின் வாகனமாக விளங்கி வருகிறார்.



சிரிச்சா என்ன
குறைஞ்சா போகும்!
எங்க ஸ்கூல்ல இன்னிக்கு நடந்த "வினாடி - வினா" நிகழ்ச்சியில் ஒரு கேள்விக்குக் கூட யாரும் பதில் சொல்லவே இல்லை!
அப்ப "வினாடி-வினா" ஆயிடுச்சின்னு சொல்லு!
உங்களுக்கு எடை குறையணும்னா குறைஞ்சது தினமும் ஒரு கிலோ மீட்டராவது ஓடணும்!
ஏதாவது "நடக்கக்கூடிய" காரியமா சொல்லுங்க டாக்டர்!
உனக்கு மட்டும் அறிவு அதிகமா இருக்கே எப்படி?
நான் முதல் ரேங்க் வாங்குகிற பையனோட புத்தகங்களை மட்டும்தான் சாப்பிடுவேன்!
என்னப்பா, திடீர்னு வயித்து வலிக்குதா, ஏன்?
பரீட்சை நெருங்கிடுச்சி; எல்லாரும் பாடங்களைக் கரைச்சிக் குடிச்சிடணும்னு எங்க டீச்சர் சொன்னாங்கன்னு பாதி புத்தகத்தைக் கரைச்சு குடிச்சிட்டேன்!
அந்த மாஜிக் நிபுணருக்குக் கடன் குடுத்தது ரொம்பத் தப்பாப் போச்சு!
ஏன்?
கடன் கேட்கப் போறப்பெல்லாம் மாயமா மறைஞ்சு போயிடறாரே...!
மூ. திருநாவுக்கரசு



ஒரு மரத்துப்

கணித ஆசிரியை கரும்பலகையில் 'அல்ஜிப்ரா' கணக்கு ஒன்றைச் செய்து காட்டி விளக்கிக் கொண்டிருந்தார். அவர் விளக்கம் அளித்துக் கொண்டிருந்தபோதே மாணவிகள் சிலர் கரும் பலகையைப் பார்த்து மடமடவென்று எழுதிக் கொண்டிருந்தார்கள். அதை ஆசிரியை கவனித்து விட்டார். அவருக்குக் கோபம் வந்து விட்டது.

''உங்களுக்கு எத்தனை தரம் சொல்வது? நான் இங்கே செய்முறையை விளக்கிக் கொண்டிருக்கும் போது, அதைக் கேட்காமே எழுதிக் கொண்டிருந்தால் என்ன விளங்கும்? சரியாகக் கேட்டுக் கொண்டு, அப்புறம் நான் சொல்கிற போது நீங்கள் எழுதிக் கொள்ளலாம். இந்த 'அவதானம்' எல்லாம் பாடம் கற்றுக் கொள்கிற விஷயத்திலே ஒத்து வராது,'' என்று சூடாகச் சொன்னார் ஆசிரியை.

''பீரியடு முடியப் போகுதே மேடம்! அடுத்த பீரியடு அறிவியல் பாடம். அவர்கள் வந்ததுமே போர்டைத் துடைக்கச் சொல்லிப் பாடத்தை ஆரம்பித்து விடுவாங்களே! அப்புறம்.... கணக்கை எழுதிக் கொள்ள முடியாமல் போகுமே என்றுதான் ...'' என்று ஆரம்பித்தாள் பவித்ரா.

''அது சரி. நீ எழுதவில்லையே! பாடத்தைக் கவனித்துக் கொண்டு தானே இருக்கே? நீ ஏன் பேசுகிறாய்?'' என்று அதட்டினார் ஆசிரியை.

''நான் அவர்களுக்காகத்தான் சொன்னேன் மேடம்!'' என்று மெதுவாகச் சொன்னாள் பவித்ரா.

''சரிதான்... கிளாஸ் லீடர் என்றால், இப்படித்தான் தவறு செய்கிறவர்களுக்குச் சப்போர்ட் செய்யறதா?''

''இல்லைங்க மேடம். சில சமயங்களில் கணக்கை எழுதிக் கொள்ள முடியாமலே போகுது. அந்தப் பாட டீச்சரைக் கேட்டுக் கொள்ளவும் பயமாயிருக்கு,'' என்றாள் பவித்ரா.

''ஆமாங்க டீச்சர்! 'நான் போர்ஷனை முடிக்கணும்.பரீட்சைநெருங்குதில்லே?' அப்படின்னு பறக்கறாங்க அந்த டீச்சர்,'' என்றாள் ஒரு மாணவி.

''யாரு, பல்லவியா? நீ வேறு பேச ஆரம்பித்தாயிற்றா? இனிமேல் ஒவ்வொருத்தியா எழுந்து ஏதாவது பேசிக்கிட்டேயிருப்பீங்க. அதுதான் லீடரே 'லீட்' பண்ணியாச்சுதில்லே?'' என்று சலித்துக் கொண்டார் அவர்.

பல்லவி அமைதியாக அமர்ந்து விட்டாள்.

''டீச்சர், ஏதோ அவதானம் என்று சொன்னீர்களே, அது என்ன டீச்சர்?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தாள் வித்யா.

''ஆமாம், அதைத் தெரிந்து கொள்ள வேண்டியது ரொம்ப அவசியம்!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வடிவழகி குறுக்கிட்டாள்.

''சந்தேகம் வந்தால் உங்களைத் தானே கேட்கணும்?''


''இது என் பாடத்திலே வந்த சந்தேகமா? போதும், கணக்கைக் கவனியுங்க,'' என்றார் ஆசிரியை.

''நீங்கள் சொன்ன அந்த வார்த்தை, விளங்கவில்லையென்றுதானே மேடம், வித்யா கேட்டாள்?'' என்றாள் பவித்ரா.

''பவித்ரா! பி ஹேவ் யுவர் செல்ஃப் நீ ரொம்பத்தான் பேசறே?'' — கூவினார் ஆசிரியை.

''ஏய்... டீச்சருக்கு பிரஷர் இருக்கு போலிருக்கடி. உட்கார்ந்துரு.''

பறவைகள்



என்று பவித்ராவைக் கிள்ளினாள் பக்கத்திலிருந்த திவ்யா.

அவள் முணுமுணுத்தது ஆசிரியைக்குக் கேட்டிருக்க முடியாது. என்றாலும் ஏதோ தன்னைப் பற்றித்தான் முணுமுணுக்கிறாள் என்பது புரிந்தது அவருக்கு. கோபம் கோபமாக வந்தது.. இருந்தாலும் சமாளித்துக் கொண்டார்.

'மாணவிகளுக்கு எதைப் பற்றிச் சந்தேகம் வந்தாலும் தனக்குத் தெரிந்தால், விளக்கம் சொல்லித் தீர்த்து வைப்பதில் தவறு என்ன?' என்று அவர் மனத்தின் ஒரு மூலையிலே ஒரு கேள்வி எழுந்து முள்ளாய்க் குத்தியிருக்க வேண்டும். அதனால்தான் கோபம் ஆறாமலேயே அவர் அவதானத்தை விளக்கினார்.

''ஒரே சமயத்திலே பல காரியங்களைச் செய்வதை அவதானம் என்பார்கள். அஷ்டாவதானம், தசாவதானம், சதாவதானம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்களே! டீ.வி.யிலே கூடச் சில நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கலாமே. மேலும் விளக்கம் வேண்டுமானால் உங்கள் தமிழ் ஆசிரியை வந்தால் கேளுங்க,'' என்று சட்டென்று முடித்து விட்டார் ஆசிரியை.

''டீச்சர், இந்தக் கணக்கை இப்பொழுது எழுதிக் கொள்ளட்டுமா?'' என்று எழுந்து கேட்டாள் வஹிதா.

அப்போது வகுப்பு முடியும் மணி ஒலித்தது. ஏதும் சொல்லாமலேயே அவசரமாக எழுந்து போய் விட்டார் கணித ஆசிரியை. வேக வேகமாக எழுதிக் கொண்டார்கள் மாணவிகள்.

''சரியாகப்புரியாதவர்கள்நாளைக்குக் கணக்குப் பீரியடிலே ஆசிரியை வந்ததுமே கேட்டுக் கொள்ளலாம்,'' என்றாள் பவித்ரா.

சில நிமிஷங்களில் அறிவியல் ஆசிரியை வந்து கொண்டிருந்தார். அவரோடு கணித ஆசிரியையும் பேசிக் கொண்டு வந்தார்.

பவித்ரா வகுப்புக்கு முன்னே வந்து, வகுப்பின் அமைதியைக் கவனித்துக் கொண்டிருந்தாள். மாணவிகள் சிலர் வகுப்புக்கு வெளியே, கணிதமும் விஞ்ஞானமும் கலகலவென்று சிரிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

''ஏய், ரம்யா! அதோ பாருடி. நம்ம கணக்கு சயின்ஸ்கிட்டே நம்மைப் பற்றி ஏதோ கோள் மூட்டுது. பாரு. ரெண்டும் எப்படி சிரிக்குது?'' என்று சற்று உரக்கவே சொன்னாள் திவ்யா. ரம்யா இரண்டு பெஞ்ச் தள்ளி அமர்ந்திருந்தாள்.

அவள் பேசியது பவித்ராவுக்கும் மற்றும் சிலருக்கும் கேட்டு விட்டது. ''ஏய்... வாயாடி திவ்யா...! சும்மாயிரு! நம்ம டீச்சர்ஸைப் போயி... அப்படியெல்லாம் அது இதுன்னு பேசக் கூடாது. நீயும் உன் ஜுகமும்! நீ உன்னை மாதிரியே எல்லாரையும் நினைக்கிறே. அது உன் தப்பில்லை,'' என்று கடிந்து கொண்டாள் பவித்ரா.

''ஆமாம், உன்னை மாதிரி என்னை ஜால்ராவா இருக்கச் சொல்றியா? நான் பட்டுப் பட்டுன்னு கேட்டிடுவேன்,'' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டாள் திவ்யா.

''நல்லா கேட்டே! எதுக்கும் இடம் பொருள் ஏவல் இருக்கு. யார் யாரைப் பற்றி யாரிடத்தில் பேசுவது என்பதையெல்லாம் கவனிக்கணும்,'' என்றாள் பல்லவி.

பூவை அமுதன்

"அது சரி. பவித்ரா ஒண்ணும் யாருக்கும் தாளம் போடுபவள் இல்லையே! சரி என்று தோன்றினால் பக்குவமாகக் கேட்க வேண்டியதைக் கேட்க அவள் என்றைக்குமே தயங்கியதில்லை," என்றாள் மீனா.

"ஆமாம்...! போன வெள்ளிக்கிழமை கல்வியதிகாரி முன்னிலையிலேயே அவ்வளவு தைரியமாகப் பேசினாளே! எனக்குப் பயமாப் போச்சு. எட்மிஸ்ட்ரஸ் அம்மா பவித்ராவை அப்படியே முறைச்சிப் பார்த்துக்கிட்டேயிருந்த மாதிரி எனக்குத் தோணுச்சு," என்று அப்போதும் பயந்தவள் போல் சொன்னாள் வஹிதா.

அப்போது அறிவியல் ஆசிரியை அந்த வகுப்புக்கு நெருங்கி வந்து கொண்டிருந்தார். கணித ஆசிரியை; வேறு வகுப்புக்குப் போய்க் கொண்டிருந்தார். வகுப்பு மாணவிகள் பேசிக் கொண்டேயிருந்தார்கள். அவர்களை அடக்குவதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள் பவித்ரா.

"எனக்கு அடங்காதவர்களுக்கு நான் தலைவியாக இருப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. வேறு யாராவது தலைவியாக இருக்கட்டும்," என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னாள் பவித்ரா.


"இந்த வகுப்பிலே உன் பேச்சுக்குக் கட்டுப்படுகிறவங்கதான் மெஜாரிடி. அதனாலே நீ ஒண்ணும் விலகிக்க வேண்டாம்," என்றாள் மீனா.


"அய்.... ஜால்ரா!" என்றாள் திவ்யா.

"சய்ங் சக்... சய்ங் சக்," என்று தாளம் போட்டாள் வித்யா.

அறிவியல் ஆசிரியை வகுப்புக்குள் நுழைந்து விட்டார். பவித்ரா தன் இடத்துக்குப்-போய் நின்றாள். மாணவிகள் எல்லோரும் எழுந்து நின்றார்கள். திவ்யா வழக்கம் போல் மெதுவாகத்தான் எழுந்து நின்றாள். அவளைத் தன் ஓரக் கண்களால் பார்த்துக் கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தார் ஆசிரியை. மேஜையை அருகே இழுத்துக் கொண்டார்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். சில ஜென்மங்களுக்கு என்ன செய்தாலும் கெட்ட







பழக்கம் விட்டுப் போகாது,'' என்றார் ஆசிரியை.

அவர் பொதுவாகத்தான் சொன்னது போல் தெரிந்தது. ஆனால் யாருக்காகச் சொன்னார் என்பது பவித்ராவுக்குப் புரிந்தது. வெறுப்பாக அவள் திவ்யாவைப் பார்த்தாள். 'சுருக்'கென்று அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்தைத் தைத்திருக்க வேண்டும். ஆனால் அப்படி ஒன்றும் தோன்றவில்லை. அதை விடவும் ஒரு முக்கியமான விஷயத்தில் வித்யாவின் கவனம் பதிந்திருந்தது அந்த நேரத்தில். அவள் முணுமுணுத்தாள், "என்னமா டிரெஸ் பண்ணிட்டிருக்காங்க! நம்மையெல்லாம் ஒரே யூனிபாரத்திலே வரச் சொல்லிட்டு... நீயே பாரேன்... சோளி... புது மாதிரி டிசைனாயில்லே? எங்கே தைக்கிறாங்களோ!''

திவ்யாவின் கண்கள் ஆசிரியை முதுகு மீதே மொய்த்திருந்தன. அதைப் பற்றி ஏதோ இரகசியமாகப் பக்கத்துப் பெண்களிடம் 'கமெண்ட்' அடிப்பதும் இலேசாகச் சிரிப்பதுமாக இருந்தாள். பவித்ரா அடிக்கடி அவளைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

ஆசிரியை மும்முரமாகப் படம் போடுவதில் ஈடுபட்டிருந்த போது, பவித்ரா மெதுவாக எழுந்து திவ்யாவை நெருங்கினாள்.

"திவ்யா! நாளுக்கு நாள் உன் அட்டகாசம் அதிகமாயிட்டிருக்கு. நான் உன் வீட்டுக்கு வந்து உன் அம்மாவிடம் சொல்லப் போறேன். வேண்டாம், வேண்டாம்... உன் அப்பாவிடம் சொல்றேன். அப்பத்தான் நீ அடங்குவே! உன் அப்பா எவ்வளவு கோபக்காரர் என்பது எனக்குத் தெரியும்,'' என்று முறைத்துவிட்டு வேகமாகத் தன் இடத்துக்குத் திரும்பினாள் பவித்ரா.

அறிவியல் வகுப்பு முடிந்து ஐந்து நிமிடமாகி விட்டது. அப்போது ஆங்கிலப் பாடம் நடக்க வேண்டும். ஆசிரியையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் வகுப்புத் தலைவி பவித்ரா. அப்போது ஆங்கில ஆசிரியை அங்கே வரவில்லை. தலைமை ஆசிரியை வந்து கொண்டிருந்தார்.

தலைமை ஆசிரியை வகுப்புக்குள் நுழைந்தார். எல்லோரும் சற்று அச்சத்துடனேயே எழுந்து நின்றார்கள். அவர் எந்த வகுப்புக்குள்ளும் அநாவசியமாக நுழைய மாட்டார். அதிலும் பாடம் நடந்து கொண்டிருக்கும் போது எட்டியும் பார்க்க மாட்டார். உள்ளே நுழைகிறார் என்றால் ஏதாவது முக்கிய பிரச்சினையிருக்கும். அதுதான் மாணவிகளைக் குழப்பியது. அந்தக் குழப்பம் நீடிக்கவில்லை.

"டியர் ஸ்டூடன்ட்ஸ்! இன்னைக்கு உங்கள் இங்கிலீஷ் மிஸ் லீவு. அதனாலே இன்னைக்கு நீங்கள் இங்கிலீஷ்பாடத்தை மிஸ் பண்ணியாகணும். அப்படியே எல்லோரும் வரிசையா லைப்ரரிக்குப் போங்க. இனிமேல் உங்களுக்கு அங்கே படிக்கப் புத்தகங்கள் கிடைக்கும்,'' என்று கூறிவிட்டு, அவர் பவித்ராவின் பக்கம் திரும்பி ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

பவித்ராவுக்கு ஒரு குழப்பம் நீங்கியிருந்த அதே நேரத்தில் வேறு ஒரு குழப்பம் நுழைந்து விட்டது.

அன்று கல்வியதிகாரி முன்னிலையில் தான் பேசிய விஷயங்கள் தலைமை ஆசிரியைக்குத் தன் மேல் கோபத்தை ஏற்படுத்தியிருக்குமோ? நூலகத்துக்கு மாணவிகளை அனுப்புவது வெறுப்பினாலா, விருப்பினாலா?

"ஒருவர் பின் ஒருவராக ஒழுங்காகச் சென்று, அமைதியாக இருந்து, வேண்டிய நூல்களை வேண்டிப் பெற்று, சப்தமில்லாமல் படித்து, குறிப்பெடுத்துக் கொண்டு, மணி அடித்ததும் அடுத்த பாடத்துக்கு உங்கள் வகுப்புக்கு வந்து சேர வேண்டும். இவர்களை அனுப்பி விட்டு நீ மட்டும் என் அறைக்கு வா,'' என்று

''ஏண்டா, உங்க அண்ணன் வேலை வெட்டி, பார்க்காமே ஈ ஓட்டிண்டிருக்கானா?''

''இல்லேடா! வேலை பார்த்துக்கிட்டே தான் ஈ ஓட்டிக்கிட்டிருக்கான்டா!''

''புரியலையே!''

''ஆமாம். பல்லவன்லே அவன் இப்போ கண்டக்டர்டா! 5ஈ, 17ஈ, 51ஈ ரூட்லே ஓட்டறாண்டா!''

— எஸ். ரஞ்ஜனி.

பவித்ராவிடம் கூறி விட்டுப் போனார் தலைமை ஆசிரியை.

அவர் அவ்வாறு சொன்னதும், பவித்ராவை விட அதிகமாகக் குழம்பினார்கள் மாணவிகள். எல்லோரும் வரிசையாகப் புறப்பட்டார்கள். புறப்படுமுன் மீனா பவித்ரா அருகே விரைந்து வந்தாள்.

''எனக்குப் பயமாயிருக்கு பவித்ரா! நீ மீட்டிங்கிலே அப்படிப் பேசினது, இன்னைக்கு வகுப்பிலே கணக்கு, விஞ்ஞான வகுப்புகளிலே நடந்தது... இந்த அடங்காப்பிடாரி திவ்யா அடிக்கிற லூட்டி... என்னவோ பண்ணப் போறாங்க எச்.எம்.,'' என்று நடுங்கினாள் மீனா.

''எனக்கும் புரியல்லே... பார்க்கலாம்,'' என்று கூறி விட்டுத் தலைமை ஆசிரியை அறையை நோக்கி நடந்தாள் பவித்ரா.

அறைக்குள் வந்த பவித்ராவை ஏறிட்டு நோக்கினார் தலைமை ஆசிரியை. அவர் முகத்தைப் பார்த்து அப்போது அவர் இருந்த மூடைப் புரிந்து கொள்ள முடியவில்லை பவித்ராவுக்கு.

''வாம்மா பவித்ரா! ரியலி யு ஆர் வெரி ஸ்மார்ட் அண்ட் பிரேவ். கீப் இட் அப்.''

தலைமை ஆசிரியை அவ்வாறு கூறியதும், பவித்ராவின் மனத்தில் குடைந்து கொண்டிருந்த பயமும் குழப்பமும் அகன்று விட்டன. அவர் தம் இருக்கையை விட்டு எழுந்து வந்து, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார். பவித்ராவின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

''நானும் மற்ற டீச்சர்களும் வெளியே சொல்ல முடியாத குறைகளை நீ சுருக்கமாகக் கல்வியதிகாரி முன்னிலையிலே தைரியமாகச் சொல்லி விட்டாய். அதுக்கு நான் உனக்கு ஸோ மெனி தேங்ஸ் சொல்லணும். இன்னும் நிறைய இருக்கும்மா. நாங்கள் எல்லாம் கண்டும் காணாதவர்களாய் இருக்க வேண்டிய நிலைமை. இது மேனேஜ்மெண்ட் ஸ்கூல். அவர்களை மீறியோ, அவர்களுக்கு மாறாகவோ நாங்கள் நடந்து கொள்ள முடியாது,'' என்று சொல்லி விட்டுச் சற்று நிறுத்தினார்.

''ஏன் மேடம், நீங்கள் எல்லாம் நிறையப் படித்தவர்கள். நியாயத்தைக் கேட்க ஏன் தயங்கணும்? 'பாதகம் செய்பவரைக் கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா' என்று பாரதியார் பாடியிருக்கிறாரே!'' பவித்ரா நிதானமாக, எழுத்துக்களைக் கூட்டிச் சொல்வதைப் போல் கூறினாள்.

''ஆமாம்மா. பாரதியார் பாப்பாவுக்குத்தானே பாடியிருக்கிறார்? என்னைப் போல வேலை போய் விடுமே என்று வயிற்றை எண்ணிப் பயப்படுகிற பெரியவர்களுக்காகப் பாடவில்லையே?'' என்று அவர் சிரித்தார்.

அந்தச் சிரிப்பிலே சோகமும் இணைந்திருந்தது என்பதை இயல்புக்கு மீறின அறிவு கொண்டு துறுதுறுவென்று விளங்கிய பவித்ராவால் புரிந்து கொள்ள முடியாமல் போகவில்லை.

''இங்கே தீர்க்கப்பட வேண்டிய குறைகள் இன்னும் நிறைய இருக்கு. நீ நிறையப் படிக்கணும். பெரிய உத்தியோகத்துக்குப் போகணும். நீ கல்வித் துறையிலே பதவிக்கு வந்து இது போல பள்ளிகளிலே உள்ள குறைகளைத் தீர்த்து வைப்பாயானால், அது எனக்கு ரொம்பப் பெருமையாயிருக்கும். என்னமோ... உன்னிடம் சொல்லத் தோணுது,'' என்று தலைமை ஆசிரியை ஒரு பட்டியலையே கூறினார்.

அதைக் கேட்கக் கேட்கப் பவித்ராவுக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது; ஆச்சரியமாகவும் இருந்தது. பிள்ளைகளின் நெஞ்சங்களிலே இருக்கிற குறைகளைக் களைகிற உன்னதமான உயர்ந்த பணியைச் செய்பவர்கள் சூழலிலும் இவ்வளவு குறைகளா?

(தொடரும்)



* Colour Photo. J. D. Jaani





சிக்கி முக்கி கற்களில் நெருப்பு இருப்பது யாருக்கும் தெரியாது. தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சியால் கண்டறியப்பட்டதே நெருப்பு. அதே போல்தான் அறிவும். நம்மிடம் உள்ள அறிவை வெளிப்படுத்த நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்.

கே. எஸ். சரவணன், கம்புகாலப்பட்டி.



நம் தோட்டங்களில் தாவித் திரியும் வண்ணத்துப் பூச்சிகளுக்கென்று ஒரு தனிப் பண்ணை அமைக்கப்பட்டிருப்பது ஆச்சரியமான விஷயம் அல்லவா? இங்கிலாந்தில் இலண்டன் மாநகருக்கு அருகில் உள்ள சிற்றூர் ஒன்றில் இந்தப் பண்ணை அமைக்கப்பட்டிருக்கிறது. உலகில் 20,000 வகை வண்ணத்துப் பூச்சிகள் உள்ளன. எல்லா வகையான வண்ணத்துப் பூச்சிகளும் உலக நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டு இங்கே வளர்க்கப்படுகின்றன. அவை வாழ்வதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையும் உருவாக்கித் தரப்படுகிறது. குளிர்ப் பிரதேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வண்ணத்துப் பூச்சிகள் வாழும் இடத்தில் தண்ணீர் தெளிக்கப்பட்டு, அவற்றின் தாய் நாட்டுக்குரிய குளிர்ச்சி கொண்டு வரப்படுகிறது. அதே போல வெப்ப நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட வண்ணத்துப் பூச்சிகள் வாழ்வதற்கு வசதியாக மின்சார சாதனங்கள் மூலம் வெப்பநிலை ஏற்படுத்தப்படுகிறது. வண்ணத்துப் பூச்சிகள் தானாக வளரும் காட்டுச் செடிகளையே அதிகம் விரும்பி அவற்றில் வசிக்கின்றன. எனவே, அவ்வகைச் செடிகள் இங்கும் வளர்க்கப்படுகின்றன. வண்ணத்துப் பூச்சிகளின் சராசரி ஆயுள் எவ்வளவு தெரியுமா? நான்கு வாரங்கள்தான்.

— நித்யா வெங்கடேசுவரன், சிதம்பரம்.

கனடாவைச் சேர்ந்த ஜிம் வெல்ஸ் என்பவர் பசுக்களுக்காக ஷூக்கள் தயாரிக்கும் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். இதற்கு ஜப்பான், மெக்ஸிகோ, ஸ்பெயின்



மாட்டுக்கும் ஷூக்கள் மாட்டுகிறார்கள்!

முதலிய நாடுகளில் அமோக வரவேற்பு. இந்த ஷூக்களுக்கு ரப்பரால் ஆன சோல் வைக்கப்படுகிறது. பசுக்களின் கால்களில் இதை அணிவிப்பதால் அவை மேயும் போது

கல் மற்றும் அசுத்தங்கள் ஒட்டிக் கொள் வதில்லை. மாடுகளுக்கு மட்டுமல்லாமல் ஜிம்வெல்ஸ் நிறுவனம் குதிரைகளுக்கும் கூட ஷூக்கள் தயாரிக்கத் திட்டமிட்டிருக் கிறது.

— இந்திரா கோபாலன், திருச்சி – 14.

பென்சில் தகவல்கள்

இந்தியாவில் மட்டும் நாளொன்றுக் குச் சுமார் 2 கோடி பென்சில்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகின்றன.

இன்று தயாரிக்கப்படும் 18 செ. மீ. நீளமுள்ள பென்சில் 55 கிலோ மீட்டர் நீளம் கோடு கிழிக்கும் திறன் பெற்றுள்ளது. 45,000 சொற்களை எழுதக் கூடியது. 17 தடவை கூர்மையாக்கிக் கொண்டே போக லாம்.

— இலக்மன், கல்லிடைக்குறிச்சி.

கேட்காமலேயே சாத்திய கேட்

மதிய உணவிற்காக நண்பர்களுடன் நானும் சில ஆசிரியர்களும் ரோட்டில் வந்து கொண்டிருந்தோம். எப்பொழுதும் ரயில்வே கேட்டைத் தாண்டியே செல்ல வேண்டும். அன்றும் அதுபோலவே ரயில்வே கேட்டை நெருங்கும்போது கேட் சாத்தியிருந்தது. ஓர் ஆசிரியர், "கேட்டு சாத்தியிருக்கிறது," என்றார். அதற்கு மற்றோர் ஆசிரியர், "இல்லை கேட்காமலே சாத்தியிருக்கிறது," என்றாரே பார்க்க வேண்டும்!

— ச. உமர்கான், மொரப்பூர்.

சர்க்கரையைவிட இனிப்பானது!

சர்க்கரையை விட இனிப்பான பொரு ளொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது கடம்பி என்ற தாவரத்தின் விதை. மேற்கு ஆப்பிரிக்கக் காடுகளில் மழை பெய்யும் இடங்களில் இந்தத் தாவரம் இருக்கிறது. இதிலிருந்து கிடைக்கும் விதை சர்க்கரையை விட இலட்சம் மடங்கு அதிக இனிப்பாக உள்ளது. உலகிலேயே அதிக இனிப்புத் தன்மை கொண்ட பொருள் இதுதானாம்.



"ஓ" நல்ல பந்து வீச்சுக்காரர்!

இங்கிலாந்து நாட்டின் பிரதமராக வில்சன் இருந்த போது ஒருமுறை தேர்தல் கூட்டம் ஒன்றில் உரையாற்றிக் கொண்டிருந் தார். அதில் பலர் பலவிதமான வினாக் களை எழுப்பி அவரைத் திணறடித்துக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் எதிர் பாராத விதமாக சிறுவன் ஒருவன் அழுகிய முட்டையைப் பிரதமர் மீது வீசியடித்தான்; போலீசாரால் கைது செய்யப்பட்டான். சிறுவனை விடுவிக்குமாறு ஆணையிட்டார் வில்சன். "இவ்வளவு அழகாக முட்டை யைக் குறிபார்த்து வீசும் இவனைக் கிரிக் கெட் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்," என்றார். சூழலை மறந்து அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

— சா. இரா. மணி, வந்தவாசி.



மாயத் தோற்றம்

AB, CD — எது பெரியது?
உயரமா? அகலமா?

விடை: இரண்டும் சமமே.

ஆதாரம்: பொழுதுபோக்கு பௌதிகம்.

—இல. மணிமூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

பொன் மொழிகள்

உண்மையை நேசி. ஆனால் பிழையை மன்னித்து விடு.
– வால்டேர்.

அதிகமாகக் கேள். குறைவாகப் பேசு. அதற்காகவே கடவுள் இரண்டு காதுகளையும் ஒரு நாவையும் படைத்திருக்கிறார்.
– காந்திஜி.

சார், தபால்!

கண்ணு படப்போகுது!



* வர வர கோகுலம் ரொம்பத்தான் மெருகேறிக்கிட்டே வருது! பாருங்க, புதிய போட்டிகள், பாடலாலேயே தலையங்கம், பொருளடக்கம், கார்ட்டூன் கதைகள் இத்தனையும் கூடுதலா வருதே! முதல்ல கோகுலத்துக்குத் திருஷ்டி சுத்திப் போடுங்க, என் கண்ணே பட்டுடப் போகுது.

வந்தவாசி, சா. இரா. மணி.

* 2½ வயதில் கையில் 'பிரஷ்' பிடிக்கத் துவங்கிய 'விஜய் ஆனந்த்' பற்றியும், அதே வயதில் கையில் 'மட்டை' பிடிக்கத் துவங்கிய 'டெண்டுல்கர்' பற்றியும் சுவையான செய்திகள் தந்த கோகுலத்திற்கு நன்றி.

குத்தாலம், பி. பிரசாத்.

* குட்டி காவஸ்கர் ஸசின் தண்டுல்கர் இந்தச் சிறிய வயதில் இவ்வளவு சாதனைகள் செய்து இருப்பார் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இதுபோன்ற பல சாதனைகள் புரிய என்னுடைய வாழ்த்துக்கள். கார்களின் பல வகைகளைக் கண்டு பிரமித்துப் போனேன்.

செஞ்சி, வி. செல்வி.

* சுமாராகப் படித்துக் கொண்டிருக்கும் நான், அதிக மதிப்பெண் பெற்றவர்களின் பேட்டியைப் படித்தவுடன், நானும் எப்போதும் நல்லாப் படிச்சு முதல் மாணவனாகனும் என்ற எண்ணம் எனக்குள் வேரூன்றி வளரத் தொடங்கி விட்டது.

புத்தனாம்பட்டி, எம். செந்தில்குமார்.

* நான் ஏப்ரல் மாத கோகுலம் இதழ் பார்த்தேன். அதிக மதிப்பெண் பெற்ற அனுபவங்கள் தேர்விற்கு எப்படித் தயாரிப்பது என்று சுட்டிக்காட்டியது, எங்களுக்கு மிகச் சிறந்த மருந்தாய் விளங்கியது.

பூந்தோட்டம், து. பாண்டியன்.

* அருமையான சிறுகதை மூலம் 'நல்லவர் பகையும் நலம் புரியும்' என்ற நட்பின் இலக்கணத்தை மிகத் தெளிவாகப் பசுமரத்தாணி போல் நெஞ்சில் பதிய வைத்து விட்டார் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள். பாராட்டுக்கள் பல!

சுவாமிமலை, ஏ. கே. அருள்சாமி.

* 'உயர்வினைத் தடுக்கும் தடைகளை வெல்'வதற்குப் பல அருமையான கருத்துக்களைக் கூறியுள்ளார். ஆனால் சாதாரண நிலையிலிருந்து பெரிய சாதனைகளைப் படைத்தவர்களின் பட்டியலில் ஓர் இந்தியர் பெயர் கூட இல்லையே? நம் நாட்டில் அப்படிச் சாதாரணக் குடியில் பிறந்து, மிக உயர்ந்த நிலைக்கு உயர்ந்த சாதனையாளர்களை, நாமே புறக்கணித்தால், வெளிநாட்டார் எப்படிப் போற்றுவார்கள்?

வெள்ளக்கால், இரா. கந்தையா.

* கரிகாலன் படக்கதை மூலம் எங்கள் ஊர் சீர்காழிக்கு அருகில் உள்ள நாங்கூரில் தான் கரிகாலன் பெண்ணெடுத்தான் என்பதை அறிந்து மிகவும் பெருமைப்பட்டேன்.

சீர்காழி, சண்பை. சிவ. சண்முகம்.

* 'இராட்சச வேட்டைக்காரன் ஜாக்' கதையைப் படிக்க படிக்க உள்ளம் பூரித்தது. நேரம் போனதே தெரியவில்லை. ஓர் ஆங்கிலப் படம் பார்த்த திருப்தியைத் தந்தது.

கும்பகோணம், கபிஸ்தலம் இளையபாரதி.

* டாக்டர். கு. கணேசன் அவர்களின் வாய்ப்பூட்டு நோய் பற்றிய செய்திகள் அனைத்தும் அருமை. பயனுள்ளவை.

களியக்காவிளை, கே. புஷ்பராஜ்.

* 'எங்க அப்பா பொல்லாதவர்' சிறு கதை மிகவும் நேர்த்தியான நடை அழகைக் கொண்டிருந்ததால் என் மனத்தை விட்டு அகலவேயில்லை.

மானாமதுரை, ஜெ. எம். முகமதுரஃப்.

* பூவை அமுதன் எழுதிய ஒரு மரத்துப் பறவைகள் மிகவும் அருமை. அரஸ்ஸின் படங்கள் சூப்பரோ சூப்பர்.

மதுரை, எஸ். வி. சேகர்.

* 'நீங்களும் வரையலாமே!' பகுதி என் போன்ற ஓவியம் கற்க விரும்புகிறவர்களுக்குப் பயனுள்ள பகுதி.

பரங்கிப்பேட்டை, சாரதா.

தெனாலி ராமன் தெனாலி ராமனே!

கதை: மணிமேகலா படம்: கோபலி




ஏழைக்குக் கூட உங்களிடம் பயமாகுமே! நீங்கதான் வைத்தியம் செய்யணும்!
எனக்கு நிறையப் பணம் தரும்படி இருக்குமே?
நான் ஏழை. என் சக்திக்கு ஏற்றபடி தருகிறேன். தயவு பண்ணணும்!
தெனாலி ராமனா ஏழை! நான் நம்ப மாட்டேன். உங்க கிட்ட உள்ள பெரிய யானையை வித்து அந்தப் பணத்தை அப்படியே தந்துடணும்!
ம்! சரி. இப்படி கண்டிப்பா இருக்கும்போது என்ன பண்றது? என் யானையை வித்து வர பணத்தை அப்படியே கொடுத்துடறேன் சரிதானா?
ராமா, உனக்கு மேல் நான் திறமைசாலி. சத்தியம் போடு!
சரி! என் யானையை வித்து வர பணத்தை அப்படியே தரேன். இது சத்தியம் சரிதானா?
வைத்தியர் சிகிச்சையளிக்கிறார். ராமனின் உடம்பு குணமாகிறது.
ராமா, உன் உடம்பு குணமாயிடுத்து பணத்தைக் கொடு.
சத்தியத்தை மீறாமல் இவனுக்குப் பாடம் கற்பிக்கலாம்!
ராமா! தந்திரம் ஏதும் பலிக்காது. சத்தியம் போட்டிருக்கே!


சரி, வாங்க சந்தைக்குப் போகலாம்!
ராமன் ஒரு பூனையையும் எடுத்துக் கொண்டான்!
இது எதுக்கு?
இதையும் யானையோடு விற்கப் போகிறேன் வாங்க!
யானை, பூனையோடு வைத்தியருடன் ராமன் சந்தைக்குப் போனான்.
யானை வேணுமா யானை! அருமையான யானை... விலை மலிவு. ஒரு காசுதான்.
யானை ஒரு காசா!
எனக்குக் கொடு!
இந்தா ஒரு காசு! எனக்குத் தா!
எனக்குக் கொடு யானையை!
எனக்குத்தா யானையை!
யானையை வாங்கப் போட்டா போட்டி!
ஒரு நிபந்தனை! யானையை வாங்கிக்கிறவங்க பூனையையும் வாங்கிக்கணும்!
பூனைக்கு விலை ஆயிரம் பொன்!


ஏற்கனவே செய்த ஏற்பாட்டின்படி, அரசர் கிருஷ்ணதேவராயர் தானே அங்கு வந்து—
ராமா! இந்தப் பூனையையும் யானையையும் நானே வாங்கிக் கொள்கிறேன்.
வைத்தியரிடம் திரும்பி...
இந்தாங்க யானை விலை பணம் ஒரு காசு!
இது அநியாயம் ஐஷ்க் காய்ச்சல் வைத்தியத்திற்கு ஒரு காசா!
நீங்கள் தானே யானையை விற்று அந்தத் தொகையைத் தரச் சொன்னீர்கள்? நான் தருவதாக சத்தியம் போட்டேனே?
மக்கள் மகிழ்ச்சிக் குரல் எழுப்புகிறார்கள்!...
பேராசைக்கார வைத்தியருக்குப் பாடம் புகட்டிய ராமன் வாழ்க!
வாழ்க! வாழ்க!
முற்றும்.



செருப்புக்கும் பொறுப்பு உண்டு!

ஜே.கார்த்திகேயன்

கிண்டி பார்க் பாதையில்தான் பாபு தன் செருப்புத் தைக்கும் கடையை வைத்திருந்தான். அன்று செவ்வாய்க்கிழமையானதால் பார்க் விடுமுறை. மணி 12. அதுவரை யாருமே செருப்புத் தைக்க வரவில்லை. காலையில் அம்மா கொடுத்த கஞ்சியைக் குடித்துவிட்டு வந்தவன்தான். பசித்தது. அருகில் இருந்த டீக் கடையில் தண்ணீர் கேட்டுக் குடித்துவிட்டு வந்து அமர்ந்தான். யாராவது செருப்புத் தைக்க வருவார்களா என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவர் வந்து அறுந்து போன செருப்பைத் தைத்துக் கொடுக்கச் சொன்னார்கள். பாபு அந்தச் செருப்பைக் கையில் எடுத்துத் தைக்க ஆரம்பித்தான்.

அப்போது ஒரு கார் 'சர்ர்ர்...' என்று அவனருகே வந்து நின்றது. பாபு நிமிர்ந்து பார்த்தான். காரின் ஜன்னல் வழியே இரண்டு செருப்புகள் அவனருகே வந்து விழுந்தன. பின்னாலேயே ஒரு நடுத்தர வயது மனிதர், தலையை மட்டும் வெளியே நீட்டி, "தம்பி, ரொம்ப ரொம்ப அவசரம். சீக்கிரம் தைச்சுக் கொடுப்பா. பிளேனுக்கு லேட்டாகுது," என்றார்.

"இப்படிக் காலில் கஞ்சியைக் கொட்டிக்கிட்ட மாதிரி பதறினா என்ன செய்றதுங்க? இவ்வளவு நேரமா ஈ ஓட்டிக்கிட்டிருந்தேன். இப்பத்தான் இவங்க வந்தாங்க. இவங்க செருப்பைத் தைக்க ஆரம்பிச்சதும் நீங்க வந்திருக்கீங்க. முதல்ல உங்களுடையதைத் தைக்கச் சொன்னா அது நியாயமாகுங்களா? இவங்களுடையதைத் தைச்சு முடிச்சிட்டு உங்களுடையதை எடுத்துக்கறேன்."

"தம்பி, ஐந்து ரூபாய் தர்றேன். முதல்ல என்னுடையதை முடித்துக் கொடு."

தனக்கு ஆசை காட்டிய மனிதரின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் பாபு. "நான் ஏழைதான். அதுக்காக முறை தவற மாட்டேன். தொழில் முறை நியாயம் என்று ஒன்று இருக்கிறது. இவர் முதலில் வந்தவர். இவரைக் கவனித்து முடித்துவிட்டுத்தான் உங்கள் செருப்பைக் கையால் தொடுவேன். நீங்கள் நூறு ரூபாய் தருவதானால் கூட மாற மாட்டேன்."

கார்க்காரர் இறங்கிவந்தார். "இப்ப என்னதான் வழி? எனக்குக் காத்திருக்க நேரமில்லை."

"உங்களுக்கு முன்னாடி வந்திருக்கும் இவங்களைக் கேட்டுப் பாருங்க. இவங்க இணங்கினால் உங்க செருப்பை முதலில் தைத்துத் தர எனக்கு மறுப்பு ஏதுமில்லை."

கார்க்காரர் காத்திருந்த இருவரையும் நோக்கினார். பார்வையில் பணிவு இருந்தது.

"பிளேனுக்கு நேரமாகி விட்டது. நான் முதலில் தைச்சுக்கட்டுமா?"

"தாராளமாத் தைச்சுக்குங்க," என்று கூறிய ஒருவர், பாபுவிடம் திரும்பி, "தம்பி, அவருடையதை முதலில் முடித்துக் கொடுத்துவிட்டு, அப்புறமா என்னுடையதை எடுத்துக்கப்பா," என்று சம்மதம் கொடுத்தார்.

பாபு மகிழ்ச்சியுடன் முதலில் கார்க்காரருடைய செருப்பைத் தைத்து, பாலீஷ் போட்டுக் கொடுத்தான். அவர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

''என்னிடம் சில்லறை இல்லீங்க. ஒரு ரூபாய் கொடுங்க,'' என்றான் பாபு.

''இருக்கட்டும் தம்பி, நான் ஐந்து ரூபாய் தருவதாகத்தான் கூறினேன்! வைத்துக் கொள்!''


''எனக்கு வேண்டாங்க. நியாயமான கூலி ஒரு ரூபாய்தான். அதற்கு மேல் அதிகமாய் ஒரு காசு கூட வாங்க மாட்டேன். உங்களிடம் சில்லறையாக இருந்தால் ஒரு ரூபாய் கொடுங்க. சில்லறை இல்லை என்றால் அப்புறமா இந்தப் பக்கம் வந்தால் கொடுங்க, போதும்! இதே இடத்தில் தான் இருப்பேன்.''


பர்சைத் துழாவி ஒரு ரூபாயைக் கொடுத்து விட்டுப் பாபுவை அதிசயமாகப் பார்த்தபடி சென்றார் கார்க்காரர்.

காத்திருந்த இருவரில் ஒருவர் அவனைப் பற்றி விசாரித்தார். ''எனக்கு அப்பா இல்லை. அம்மாதான் ஆதரவாக இருக்கிறாங்க. அவங்களுக்கும் அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போவதால் எந்த வேலைக்கும் போக முடிவதில்லை. நான் செருப்புத் தைச்சு கொண்டு போகும் சில்லறைகளைக் கொண்டு எங்கள் வாழ்க்கை நடக்கிறது,'' என்றான் பாபு.

''தம்பி. நான் அம்மன் கோவிலில் பக்தர்களுடைய செருப்பைப் பாதுகாத்துத் தரும் காண்ட்ராக்ட் எடுத்திருக்கிறேன். எனக்கு உதவியாக ஒரு பையன் தேவை. நீ வந்துவிடு. காலையிலும் மாலையிலும்தான் வேலை இருக்கும். நீ எவ்வளவு தூரம் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்கிறாய் என்பதை நானே பார்த்து விட்டேன். பகலில் பள்ளிக்குச் சென்று படிக்கலாம். என்ன கூறுகிறாய்?'' என்று கேட்டார் அவர்.

இப்பொழுது பாபு காலையிலும் மாலையிலும் அம்மன் கோவிலில் அவருக்கு உதவி செய்து கொண்டு சம்பாதித்து, பகலில் பள்ளி சென்று படிக்கிறான்.





உலகம் போற்ற வாழ்க!

நடக்கும் போது மேடு பள்ளம்
பார்த்துப் போகணும்;
நடிக்கும் போது உணர்ச்சிகளை
நாட்டி நடிக்கணும்.

ஆடும் போது நளினமெல்லாம்
அமையக் காட்டணும்;
யாரும் போற்ற ஆற்றல் தன்னைச்
செயலில் காட்டணும்.

பாடும் போது உணர்ச்சியெல்லாம்
படியக் காட்டணும்
பகரும் போது இனிய சொல்லே
பரவச் சேரணும்

எந்தச் செயலைச் செய்யும் போதும்
எண்ணிச் செய்யணும்;
எதன்னச் செய்தபோதும் அதைத்
திருந்தச் செய்யணும்!

படிக்கும் போது கருத்தையெல்லாம்
மனத்தில் வாங்கணும்;
படித்தபடி வாழ்க்கையிலே
நடந்து காட்டணும்.

வந்தவரைக்கும் இலாபமென்று
வாழ்ந்திட வேண்டாம்;
வாழ்த்துப்பாடி உலகம் போற்ற
வாழ்ந்திட வேண்டும்!

— சிறுவயல் செயமணி.

படித்து வாழக் வேண்டும் தம்பி வேண்டும்!

படித்து வாழ வேண்டும் — யார்க்கும்
பயந்து வாழ்ந்திடாதே — தம்பி
உணர்ந்து வாழ வேண்டும் — பிறர்
உணர்ந்த வாழ்ந்தி டாதே.

அன்புக் கடலாம் அன்னை யிடத்தில்
அன்பைப் பெற்றிட வேண்டும்—யார்க்கும்
அன்பைக் காட்ட வேண்டும் — உலகை
அணைந்து வாழ வேண்டும்.

அறிவுக் கடலாம் தந்தை போலவே
அறிவில் தெளிவு வேண்டும் — அறிவை
மதித்து வாழ வேண்டும் — உலகம்
மதிக்க வாழ வேண்டும்.

கல்விக் கண்ணைப் பெறவே — நாளும்
கருத்தாய்ப் படிக்க வேண்டும் — படித்து
ஒழுக்கம் காக்க வேண்டும் — உலகில்
உயர்ந்து வாழ வேண்டும்.

— கவிதைதாசன், சென்னை — 18.

மாலைகள்

வண்ண வண்ணத் தமிழ்ச் சொற்கள்
வந்து வந்து சேர்ந்தாலே
எண்ணங் கவரும் பாமாலை
இனிதாய்ச் செய்து மகிழ்ந்திடலாம்!

முத்து முதலாம் நவமணிகள்
முறையாய் ஒன்று சேர்ந்தாலே
புத்தம் புதிய மணிமாலை
போட்டு மகிழப் பெற்றிடலாம்!

வாசம் மிகுந்த சிறுமலர்கள்
வகையாய் நாரில் சேர்ந்தாலே
ஆசை யுடனே பூமாலை
அழகாய் அணியக் கொடுத்திடலாம்.

நாட்டு மக்கள் எல்லாரும்
நாளும் அன்பால் இணைந்தாலே
வாட்டம் இன்றிப் புகழ்மாலை
வையம் மெச்ச அணிந்திடலாம்.

— சீர்காழி வளையாபதி.





கவியரங்கம்



வெற்றி உனக்கே

தேர்வு நெருங்குது விரைவாக,
தேயுது நாட்கள் மறைவாக;
சோர்வு இன்றி இயல்பாக,
தினமும் கற்க முயல்வாயே!

பாடம் இருக்குது சுமையாக,
படித்தே ஆகணும் அமைவாக,
ஏடும், கையும் ஒன்றாக,
இருந்தே தீரணும் வென்றாக!

ஓய்வு நேரம் நினைவாக,
ஒவ்வோர் நாளும் துணிவாக;
ஆய்வை எண்ணித் தெளிவாக
அமர்ந்தே கற்க முனைவாயே!

ஆசா னிடத்தில் கனிவாக,
அன்பாய்ப் பேசிப் பணிவாக;
மாசைப் போக்கு கடிதாக,
வெற்றி உனக்கே முடிவாக!

— எஸ். கே. வசந்தலெட்சுமி,
தஞ்சை — 8.

ஆடிடுவோம், பாடிடுவோம்!



ஏழு கடல் தாண்டி ஓடிடுவோம் — பொருள்
எட்டுத் திக்கும் சென்று தேடிடுவோம்.
காவியங்கள் பல ஆக்கிடுவோம் — நல்ல
ஓவியங்கள் பல தீட்டிடுவோம்.
வேண்டாம் சாதி என்(று) ஆடிடுவோம் — நாளும்
வேண்டும் நீதி எனப் பாடிடுவோம்.
பெண்களைக் கண்களாய்ப் போற்றிடு
வோம் — வாழ்வில்
பெண்களின் பங்கினைக் கூட்டிடுவோம்.
சந்தி ரனுக்கு நாம் சென்றிடுவோம் — மனித
சாம்ராஜ்யத் தையங்கு தந்திடுவோம்.
வங்கக் கடலினுள் மூழ்கிடுவோம் — அதில்
தங்கப் பொருட்களைத் தேடிடுவோம்.
பாலை வனத்திலே வேலை செய்தே — அதைச்
சோலை வனமாக மாற்றிடுவோம்.

— மாத்தூர். பரமசிவம்.



புனிதமிக்க பொலிவோடு பொற் கொடியாய் நெஞ்சில் படரும் பூ மன அன்புச் செல்வமே, உன் புகழ் பூத்த மடல் கண்டு மனம் சிலிர்த்தேன்.

'மனதை அடித்தளமாக வைத்து எழுகின்ற தடைகளில் 'சோம்பல்' என்கிற முக்கியமான ஒன்றைக் குறிப்பிடவில்லையே!' என அறிவுக் கூர்மையோடு கேட்டிருந்தாய்.

சோம்பல் மிக முக்கியமான தடைக் கல்தான். ஆனால் அது மனத்தை அடித்தளமாக வைத்து எழுவதல்ல; உடலை — உடலின் உறுப்புக்களை — அடிப்படையாக வைத்து எழுகிறது. சோம்பலுக்கு அறிகுறியாகக் கையை வலிப்பது போலவும் காலை வலிப்பது போலவும் தலையை வலிப்பது போலவும் ஏதோ ஒன்றினைக் காரணம் காட்டியோ அல்லது உடம்பு ஒரே அசதியாக உள்ளது என்ற பொய்யான கற்பனையிலோ சோம்பல் நம்மை நெருங்குகிறது. அதற்கு மிக மிகச் சிறிய இடம் கொடுத்தாலே போதும், சோம்பல் விஸ்வரூபமெடுத்து முழுக்க முழுக்க நம்மை ஆக்கிரமித்து முடமாக்கிப் போட்டு விடுகிறது.

ஊர்ந்த சோம்பலை

ஒருவரிடம் சோம்பல் புகுந்தால் அது அவனுடைய குடும்பத்தையே பகைவரிடம் அடிமையாக்கி விடும் என்கிறார் வள்ளுவர். 'அவனது குடியாகிய மங்காத விளக்கு அவனுடைய சோம்பலாகிய மாசு படியப் படிய ஒளி மங்கிக் கெட்டு விடும்' என்று வேதனைப்படுகிறார். 'ஒருவனுடைய சோம்பலில் கரிய மூதேவி வாழ்கிறாள்' எனக் கடுமையாகச் சாடுகிறார்.

செஸ்டர் பீல்டு என்ற மேதை, 'வெற்றியின் முதல் எதிரி சோம்பேறித்தனமாகும்' என்கிறார்.

சோம்பேறித்தனமான வாழ்க்கை நடத்தவோ, 'அப்பாடா' என்று சிறிது ஓய்வாகப் படுக்கவோ ஆசைப்பட்டால் வாழ்க்கை பயங்கரமானதாகி விடும்,' என்று அச்சுறுத்துகிறார். நேரு. அவர் எந்த நேரத்திலும் சோம்பலுக்கு ஆட்பட்டதில்லை. அவருக்குப் பிடித்தமான ஆங்கிலப் பாடல் இதோ:

''காடுகளும் அருவிகளும்
கவினழகாய் இருக்கலாம்;
கண்ணயர என்னைச் சற்று
கையை நீட்டி அழைக்கலாம்!
எனினும்,
தேடுகின்ற என் இலக்கு
நீண்ட நெடுந்தூரமே!
தித்திக்கின்ற இயற்கையெழில்
ரசிக்க ஏது நேரமே!''

'நான் எதையும் திடுமென்று எதிர்பாராமல் செய்யவில்லை; என்னுடைய கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் மிகக் கடுமையான என் உழைப்பின் காரணமாக அடைந்தவை. சோம்பலுக்கு இடம் கொடுத்திருந்திருந்தால் ஊசியளவு சாதனை கூட என்னால் உருவாக்கியிருக்க முடியாது!' என்கிறார் தாமஸ் ஆல்வா எடிசன்.

பேகன் சொல்லுகிறார் — 'சோம்பல் எல்லாத் தீமைகளின் ஊற்று' பிளாடஸ் கூறுகிறார் — 'உங்களின் சோம்பலுடன் போராடுங்கள்; நாடு கடத்துங்கள் உங்களின் சோம்பேறித் தனத்தை!'

நமது கவிமணி, 'ஊக்கமுடையார்க்குத் துன்பம் உலகில் இல்லை அம்மா,' என்கிறார். நமது பாரதியோ, 'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா,' என அன்போடு குழந்தைகளிடம் கூறுகிறார்.

கிறிஸ்தவ பைபிளில் கூட, 'தட்டுங்கள், திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும்,' என்றுதான் கூறப்படுகிறது. தட்டவும் சோம்பல் கொண்டு, கேட்கவும் சோம்பி, தேடவும் சோம்பேறியாக உள்ளவர்க்கு எதுவுமே கிடைக்காது என்பதை நீ

உடன் நீ கொல்!

புரிந்து கொள்ள வேண்டும்.

'நன்கு படிக்க வேண்டும்; நிறைய மதிப்பெண்கள் எடுக்க வேண்டும்,' என்று ஜூன், ஜூலையில் தீர்மானம் எடுக்கின்ற நீ விரைவிலேயே சோம்பல் வயப்பட்டு, 'ஏதோ பாஸானால் போதும்,' என்று திருப்திப்பட்டுக் கொள்கிற நிலைக்குத் தள்ளப்படுகிறாய். இவ்வாறு உன்னைக் கேவலப்படுத்தும் சோம்பலை நீ உதறியெறிய வேண்டாமா? யாராவது உன்னை லேசாகத் திட்டினாலோ அல்லது கிண்டல் செய்தாலோ, பழித்தாலோ உனக்கு எத்தனை கோபம் வந்து விடுகிறது! அப்படிப்பட்ட உன்னைச் சோம்பல் இவ்வளவு கேவலப்படுத்தும் பொழுது உடனே கோபம் பொங்கி வந்து சோம்பலோடு இனி தொடர்பே கூடாது என உறுதி எடுத்துக் கொள்ள ஏன் தவறுகிறாய்?

கொலம்பஸ் சோம்பல்பட்டிருந்தால் அமெரிக்காவைக் கண்டிருக்க முடியுமா? அலெக்ஸாண்டர் சோம்பல் வயப்பட்டிருந்தால் 33 வயதிற்குள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத பெரிய நிலப்பரப்பை வென்றிருக்க முடியுமா? மேரி க்யூரி சோம்பலில் சிக்கியிருந்தால் ஒரு வீட்டின் பணிப்பெண்ணாகத்தான் விளங்கியிருக்க முடியும்; கல்லூரிப் படிப்புக் கூடக் கிட்டியிராது; ரேடியம் ஒரு கனவாகப் போயிருக்கும்.

எந்த ஒரு மாணவனும் தீக்குச்சி போலத் துடிப்போடுதான் விளங்குகிறான். ஆனால் 'சோம்பல்' என்ற ஈரம் பட்டால் அவ்வளவுதான். துளிக் கூடச் சுடர்விட முடியாதபடி பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகிறான். அந்தச் சோம்பல் என்ற ஈரத்தை எவ்வளவு சீக்கிரம் போக்குகிறாயோ அந்த வேகத்திற்கு நீ ஒளிமயமாக மாறுகிறாய்.

தர்மாஸ் குடுவையில் உள்ள சூடான திரவம் போன்று உன் சுறுசுறுப்பு உள்ளது; அதனைச் சோம்பல் என்ற புறக்குளிர்ச்சி தீண்டி விடாத வகையில் தர்மாஸ் குடுவையில்தான் எத்தனை வகை பாதுகாப்பு அரண்கள்! மெல்ல மெல்லச் சோம்பல் உள்ளே புக முயற்சி செய்யும். சோம்பல் உள்ளே புகுந்து விட்டால் சூடான சுவையான நம் வாழ்க்கை சில்லிட்டுப் போய் விடும்.

பீதோவன் என்ற உலகப் புகழ் பெற்ற இசை மேதை காதுகள் செவிடாகியும் கூட சோம்பலின் வளையத்துக்குள் சிக்கிச் சும்மாயிருந்து விட

பேராசிரியர் புகழ்மதி

வில்லை. தனக்குக் கேட்க இயலா விடினும் மற்றவர்கள் கேட்கட்டும் என இசை மழை பொழிந்த மேதை யல்லவா அவர்!

நுணுக்கமாக உனக்கு ஒன்று விளக்க விரும்புகிறேன். சோம்பல் என்பதும் ஓய்வு என்பதும் வெவ் வேறானவை. சோம்பல் என்பது எந்த வேலையும் செய்யாமல் உடலை உடலின் நாடி நரம்புகளை அசதியான நிலையிலேயே — உறக்க நிலையி லேயே வைத்திருப்பது. இப்படியே இரண்டு மூன்று ஆண்டுகள் அவன் இருக்கப் பழகி விட்டால் அவன் நரம் புகளும் எலும்புகளும் தசைகளும் வெறும் கல்லாகப் போய் விடும்; எந்த இயக்கமும் அவன் விரும்பி னால் கூட அவன் தசைகளில் ஏற் படாது; நோய்களின் கிடங்காக அவன் மாறி விடுவான். ஆனால் ஓய்வு என்பதோ உழைத்து உழைத்து அலுத்துப் போன உறுப்புக்களுக்குச் சற்று மாற்றம் கொடுப்பது ஆகும். எழுதிக் கொண்டே நெடுநேரம் இருந்தவன் கைகளின் வலியைப் போக்கிக் கொள்ளும் வகையில் சிறிது நேரம் படிக்கத் தொடங்கினால் அவனுக்கு ஓய்வு அதுதான். ஒரு துறையில் தீவிரமாக உழைப்பவன் சற்றே களைப்படைந்தால் மற்றொரு துறையில் தன் உழைப்பினைத் திருப் பிக் கொள்வதையே ஓய்வு என அறிஞர்கள் கூறுகிறார்கள். நீண்ட நேரம் படிப்பவன் சற்றேபுத்துணர்ச்சி பெற நல்ல இசையினைக் கேட்கத் தொடங்கினால் அது அவனுக்கு 'ஓய்வு' ஆகும்.

காலையில் நாம் எழுகின்ற நேரத் திலிருந்து இரவு படுக்கும் வரை இந்தச் சோம்பல் என்கிற அரக்கன் எத்தனையோ வகைகளில் நம்மைச் சிக்க வைக்க வலைகளை வீசுகிறான். கொஞ்சம் யோசித்துப் பார்.

அதோ, அந்த மாணவன் — பெயர் 'ரமேஷ்' என்று வைத்துக் கொள் வோம். அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து படிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு அலாரம் வைத்து விட்டுத் தூங்குகிறான். அதோ, அலா ரம் அடிக்கின்றதே! ரமேஷ் இப்படியும்



அப்படியும் புரள்கிறான். சோம்பல் அவனைச் சற்றே புரண்டு படுக்கும் படி அவனுக்குச் செல்லமாக யோசனை கூறுகிறது. அந்த அலா ரத்தை நிறுத்தி விட்டு ஒரு பத்து நிமிடம் படுத்திருக்கிறான்; எழவே மனமில்லை; தூங்கியும் போய் விடு கிறான்.

அண்ணன் வாளித் தண்ணீரைக் கொட்டும் பொழுது... அடடா மணி ஏழா இப்பொழுது! திட்டு வாங்கிக் கொண்டே 'ரமேஷ் பல் விளக்கப் போகிறான். பிரஷ் எடுக்கச் சில நிமிடங்கள்; பேஸ்ட் எடுக்கச் சில நிமிடங்கள்; அதை அழகு பார்த்தபடி பிரஷில் வைக்க ஐந்து நிமிடங்கள்.. 'என்ன இன்னுமா பல்லை விளக்கற?' இடிக் குரலில் அம்மாவின் குரல் கேட்டவுடன் பிரஷை வாயில் வைக் கிறான். பிரஷைச் சில நிமிடங்கள் தேய்ப்பதற்குள் அவன் சிந்தனை வேறு எங்கோ ஓடி விடுகிறது. சோம் பலோடு ரமேஷ் நின்றபடி நேரத்தைப் போக்குகிறான். இதைப் போலவே குளிக்கும்பொழுதும், உடை அணி யும் பொழுதும் சோம்பல், சோம்பல், சோம்பல்...

பள்ளிக்குச் செல்கிறான். ஆசிரி யர் பாடம் நடத்துகிறார். அட, இந்தப் பாடம்தானே? நம்மிடம் நோட்ஸ் உள்ளது; பின்னர் வீட்டில் படித்துக் கொள்ளலாம்; அல்லது டியூஷனில் கேட்டுக் கொள்ளலாம்! இவ்வாறு எண்ணியபடியே ரமேஷ் வேறு எங்கோ தன் கவனத்தை வைத்துக் கொண்டு சோம்பல் வயப்படுகிறான். இவ்வாறு அவனுக்கு ஆலோசனை கள் தந்ததே சோம்பல்தான்; 'கவலைப் படாதே, பின்னால் படித்துக் கொள்ள லாம்' என அவனுக்கு மாய வலை வீசி விடுகிறது.


வீட்டுப் பாடம் கொடுக்கிறார்; உழைத்து அதனை முடிக்க ரமேஷைச் சோம்பல் அனுமதிப்பதில்லை.

'ஆமாம்... ஏன் வீணாகக் கஷ்டப் பட்டு ஹோம் வொர்க்குகளைச் செய் கிறாய்; சுரேஷ் நாளைக்குப் போட் டுக் கொண்டு வருவான்; ஒரு பத்து நிமிடத்தில் அதைப் பார்த்தே போட்டு விடலாம்,' எனச் சோம்பல் அவனுக்கு மாயஜால சுவாரசியத்தை ஊட்டுகிறது.

மாலை வருகிறது. 'வீட்டிலேயே ஏன் அடைந்து கிடக்கிறாய்? இரவில் நன்கு படித்துக் கொள்ளலாம். இப் பொழுது எவ்வளவு களைப்பாக இருக்கிறாய்! சினிமாவுக்குப் போய் வரலாம். பக்கத்துத் தெரு மாமா வீட் டில் வீடியோ பார்க்கலாம்,' என சோம்பல் ஆசை காட்டுகிறது.

இரவு வருகிறது. இரவில் எப்படி யும் படித்து விட வேண்டும் என உறுதியோடு ரமேஷ் உட்காருகிறான். 'அப்பப்பா! தூக்கம் அருமையாக வரு கிறதே... இதை ஏன் கஷ்டப்பட்டு மீறு கிறாய்?'

விடியற்காலையில் நான்கு மணிக்கு அலாரம் வைத்து விட்டுப் படு. கருக்



கலில் கட்டாயம் எழுந்து படித்துக் கொள்ளலாம். அதிகாலையில் படித்தால்தான் மூளையிலும் ஏறும் என விஞ்ஞானிகளே கூறியிருக்கிறார்களே!' எனச் சோம்பல் நயவஞ்சகத்தோடு நல்ல தோழன் போல நம்மை அன்போடு அணைக்கிறது.

அவ்வளவுதான்... சில விநாடிகளில் படித்துக் கொண்டிருந்த புத்தகம் பொத்தென்று நம் கைகளிலிருந்து நழுவிக் கீழே விழுகிறது. அம்பை விட வேகமாக விளக்கை எழுந்து அணைத்து விட்டுப் போர்வையை நன்கு போர்த்திக் கொள்கிறான் ரமேஷ். மறுநாள் விடியற்காலை மணி நான்கு. அலாரம் அடிக்கிறது. வழக்கம் போலப் பழைய கதை மீண்டும் மீண்டும் தொடர்கிறது. இன்னும் பரீட்சைக்கு எட்டு மாதம் இருக்கிறதே... அடேயப்பா! அட்டகாசம் செய்து விடலாம். ஓர் இரண்டு மாதம் கொஞ்சம் ரெஸ்ட்டாக இருந்து விட்டுப் படிக்கலாம். இன்னும் ஆறு மாதம் இருக்கிறது. கடைசி மூன்று மாதங்களே இந்தப் பாடங்களுக்குப் போதும். கடைசி மூன்று மாதமா? அடடே இந்த ஜனவரிக் குளிரில் யார் எழுந்திருப்பது? எதிர் வீட்டு சேகர், அடுத்த தெரு மணி, மாமா பிள்ளை சுந்தரம், பெரியப்பா பையன் சுரேஷ் ஆகியோரெல்லாம் கடைசி மாதத்தில் தானே படித்து இத்தனை வருஷமாக நல்ல மார்க் வாங்கி வருகிறார்கள்! நாமும் மார்ச்சில் நன்கு படித்து விடலாம். இவ்வாறாகச் சோம்பல் அவனைச் சீர்குலைத்து விடும்.

இந்தச் சோம்பல் என்பதே ஒரு விஷமத்தனமான பிச்சைக்காரன் போல, நெடுந்தூரம் நடந்து போகின்ற ஒரு வழிப்போக்கன் போல நம்மிடம் வேடம் போடும். 'அம்மா, கொஞ்சம் கதவைத் திறங்க... ஐயா கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொடுங்க' என்று கெஞ்சுகிற அந்தச் சோம்பலின் குரல் கேட்டு, சற்றே கதவைத் திறந்து, 'பாவம்' எனத் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்போம். தண்ணீர் கொடுத்தவுடன் 'ஒரே களைப்பாக இருக்கிறது; கொஞ்சம் உட்கார்ந்து விட்டுப் போகிறேன்..' எனப் பரிதாபமாக நம்மிடம் கெஞ்சிக் கேட்கும். 'போனால் போகிறது' என்று அனுமதித்து விட்டு வீட்டுக்குள் சென்று நமது வேலைகளைக் கவனிக்க ஆரம்பிப்போம். திடீரென்று 'சோம்பல்' என்ற வழிப்போக்கன் உள்ளே நுழைந்து போர்வையால் நம்மை இறுகமூடி வீட்டுப் பொருள்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்து விடுவான். எனவே இத்தகைய சோம்பல் என்ற வழிப்போக்கனுக்கு அவன் சொல்லுகின்ற வார்த்தைகளை வைத்து அவன் மேல் இரக்கப்பட்டு உள்ளே விட்டு விடக் கூடாது. ரொம்பவும் சுவாரசியமாக அந்த வழிப்போக்கன் நம்மிடம் பேசி, நம்மை மயக்கி, நம் வீட்டில் உள்ள விலையுயர்ந்த நகைகளாகிய வெற்றிகளைக் கொள்ளையடித்துச் சென்று விடுவதை அடிக்கடி தினத்தாள்களில் பார்க்கிறோமல்லவா?

எனவே, இனிய இலக்கியமே, சோம்பல் என்ற சொல்லை அண்ட விடாதே உன் அகராதியிலே; சுடர் விட்டு உன் பள்ளி வாழ்க்கை பளபளக்கும் மிக விரைவில்!


(தொடரும்)

மிக நீளமான நகம்!

பம்பாயில் ஸ்ரீதர் சில்லால் என்பவர் 4.9 மீட்டர் நீளமுள்ள நகங்களை வளர்த்திருக்கிறார். இது ஓர் உலக சாதனையாகக் கருதப்படுகிறது! தனது இடக்கையில் அது மாதிரி வளர்த்திருக்கிறார். கை கட்டை விரலின் நகம் சுருண்டிருக்கிறது. மற்ற விரல்களின் நகங்கள் நீளமாக வளர்ந்திருக்கின்றன!



மீன் காட்டி!



கிழவரும் அவர் பேரன் வேல னும் அந்தக் குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

ஊருக்கு அருகே உள்ள குளங்களில் தண்ணீர் வற்றி விடவே, மீன் பிடிப் பதற்காகத் தூரமாக உள்ள இந்தக் குளத்திற்கு வந்திருந்தனர். சலனமற் றிருந்த தண்ணீரில் தூண்டில் விழும் போது மட்டும் 'சளக்'கென்ற சத்தத் துடன் நீரலைகள் வட்டமாக விரிந்து விரிந்து அகன்று சென்று கொண்டிருந் தன.

'கிரிக்....ச கிரிக்...ச..'

கரையில் இருந்த மரக் கிளையி லிருந்து ஒரு பறவை நீட்டிக் கத்தியது. பின் சடாரெனப் பாய்ந்து கிழவரின் அருகில் வந்து அமர்ந்து தத்தித் தத்திச் சென்று மேலே பறந்தது. அடுத்த கிளையில் அமர்ந்து அதே போலக் கத்தியது.

''வேலா, ஒரு கல்லை எடுத்துப் போட்டு அந்தக் குருவியை விரட்டு. சும்மா சும்மா வந்து இம்சை செய்யுது. ஏற்கெனவே மீனு கெடக்காமெ வருத்தமா இருக்கு. இது வேற கெடுத் துட்டு இருக்கு.''

குளத்தில் பாய்ந்து அல்லிப் பூக் களைப் பறித்து வந்து விளையாடிக் கொண்டும், அல்லித் தண்டை 'ஸ்ட்ரா' போல வைத்துக் குளத்து நீரை உறிஞ்சிக் குடித்துக் கொண்டு மிருந்த வேலன், தாத்தாவின் அருகில் வந்தான்.

''வேண்டாம் தாத்தா. குருவி பாவம், பாக்குறதுக்கு ரொம்ப நல்லா ருக்கு. அதைப் போய் அடிக்கச் சொல்லுறியே!'' என்றதும் கிழவர் தூண்டிலைக் கரை மீது வைத்து விட்டு, ''நீ நான் சொன்னதை என்னைக் கித்தான் கேட்டே...?'' என்று அலுத் துக் கொண்டார்.

தூரத்தில் குளத்தில் அல்லிக் கொடி களுக்கு இடையில் ஒரு சிறுவன் மூங்கி மூங்கிக் கிழங்கு எடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தார். மறுபடியும் அந்தப் பறவை அவர் அருகில் வந்து அமர்ந் தது.

அதன் தலை கோலிக் குண்டு அளவில் இருந்தது. மரங்கொத்தி போல அலகும், நீண்ட கால்களும், உடல் சாம்பல் நிறத்திலும், அடி வயிறு வெள்ளையாகவும், இறக்கை வால் உடலை விட நீண்டும் இருந்தது. கிழவர் எழுந்து ஒரு கல்லை எடுத் தார்.

கிழங்கு எடுத்துக் கொண்டிருந்த சிறுவன் அதைப் பார்த்ததும் வேக மாக நீந்திக் கரையேறி ஓடி வந்தான். ''சாமி சாமி குருவியக் கல்லாலே அடிக்காதீங்க. அது ஒங்களுக்கு நல்லதுதான் செய்ய வந்திருக்கு,'' என்று கூறினான்.

அவன் கோவணம் மட்டும் தரித் திருந்தான். தலை பரட்டையாக இருந் தது. தலைமுடிகளில் நீர்த்துளிகள் முத்துக்களாய் மின்னின.

கொ.மா.கோதண்டம்

"நீ யாருப்பா? இந்தக் குருவி என்ன நல்லது செய்யும்?"

"சாமி, நான் மலப்பளியன். எம் பேரு நீலன். இது மீன் காட்டிக் குருவி. மீனுக ரொம்ப உள்ள குளத்தையோ, ஆத்தையோ உங்களுக்குக் காட்டும். அதுக்காகத்தான் கிட்ட வந்து இப்படிக் கத்துது."

"இப்ப எந்தக் குளத்துல மீனு இருக்காம்?"

"நீங்க எந்திரிச்சி நடந்தீங்கன்னா ஒங்களுக்கு முன்னாலயே இந்தக் குருவி போகும். நீங்க பின்னாலேயே போங்க. மீனு இருக்கிற குளம் வந்ததும் சுத்திச் சுத்திக் கத்தும். நீங்க தெரிஞ்சிக்கலாம்."

நீலன் பேசியது கிழவருக்கு அதிசயமாய் இருந்தது.

மீன் காட்டிப் பறவை சிறிது தூரம் பறப்பதும், இவர்கள் வரும் வரை கிளையில் அமர்வதும் கிழவரும் வேலனும் அருகில் வந்ததும் மீண்டும் பறப்பதுமாக அவர்களை மலையடிவாரத்திற்கே அழைத்து வந்துவிட்டது!

அந்த இடத்தில் சிறிய ஏரி போல் நீர் தேங்கியிருந்தது. தண்ணீரில் கெண்டை மீன்கள் வெயிலுக்குப் பளபளத்தவாறு கூட்டங் கூட்டமாக ஆய்ந்து கொண்டிருந்தன. அதைக் கண்டதும் கிழவருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.


"வேலா! நாட்டுக் கெண்டை மீனுல்லே நெறய்யா இருக்கு! ஊர் குளங்கள்ல ஜிலேகா மீனு வந்து நாட்டு மீனுகளே அத்துப் பேச்சே! இங்க என்னடான்னா கெண்டை மீனு சொமக்கி அள்ளலாம் போலிருக்கே. தூண்டியெல்லாம் வேணாம்; என் வேட்டியால ரெண்டு பேரும் பிடிப்போம், வாப்பா," என்றார்.

அவரும் பேரனும் வேட்டியின் முனைகளைக் கைகளால் பிடித்துக் கொண்டு தண்ணீரில் இறங்கி, நீருக்கடியில் வேட்டியைப் பிடித்தவாறே மீன்கள் உள்ள பகுதிக்குச் சென்று, படக்கென்று மேலே தூக்க, சில மீன்கள் துள்ள நீரில் விழுந்தாலும் வேட்டியில் மீன்கள் நிறையவே அகப்பட்டன.

கூடை நிறைந்ததும் வேட்டியை அலசிக் காயப் போட்டு இருவரும் குளித்து விட்டு அலுமினிய வாளியில் கொண்டு வந்த கஞ்சியைக் குடித்து விட்டுப் புறப்பட்டனர். மீன் கூடையைத் துண்டால் மூடி கிழவர் தலையில் தூக்கிக் கொண்டார். வேலன் தூண்டிலைக் கையால் எடுத்துக் கொண்டதும் அவர்கள் நடந்தனர்.

மீன்காட்டிக் குருவி வேகமாகக் கத்திக் கொண்டு இவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தது.

"என்ன குருவி, இன்னும் போகலே..? ஏய், நாங்க மீனு புடிச்சிட்டமில்லே? நீ ஒன் வேலையைப்





பாத்துக்கிட்டுப் போவியா... இன்னும் இம்சைப்படுத்துறியே..'' குருவியோடு பேசுவது போல சொல்லிக் கொண்டே நடந்தார்.

பறந்து வந்த குருவி அவர் விலாப் புறத்தில் டக்கென்று கொத்தி விட்டுப் பறந்து சென்று, மீண்டும் வந்து பேரன் தலையிலும் டக்கென்று கொத்தி விட்டு மேலே பறந்தது.

''என்னடாது தொந்தரவாப் போச்சி இது கூட...'' என்றவாறு கூடையை இறக்கியவர், பறவை கொத்திய இடத்தில் துண்டால் துடைத்துக் கொண்டார்.

வேலன் வலித்ததால் தலையில் தேய்த்து விட்டுக் கொண்டான். மறுபடியும் அவர்கள் நடக்க ஆரம்பித்தனர்.

குருவியும் மீண்டும் அவர்களைச் சுற்றிப் பறந்து வந்து கொத்தியது.

''ச்சே... என்னடாது பெரிய சங்கடமாப் போச்சி!'' என்றவாறு ஒரு பாறையில் அமர்ந்தார்.

குருவியும் ஒரு மரக்கிளையில் அமர்ந்து கொண்டு 'கிரிக்ச... கிரிக்ச' என்று கத்திக் கொண்டிருந்தது. தூரத்தில் அல்லிக் கிழங்குகளை அதன் இலைகளாலேயே கட்டி அதனைத் தலையில் வைத்தவாறு நீலன் வந்து கொண்டிருந்தான். அவன் அருகில் வரும் வரை காத்திருந்த கிழவர்,

''ஏய், என்னப்பா மீங்காட்டி குருவின்னு சொன்னே? அது காட்டிச்சி. நாங்க மீனுகளப் புடிச்சுட்டுப் போறோம். பின்னாலே வந்து கொத்துது, சுத்துது. போக மாட்டேங்குதேப்பா...''

கிழவர் சொன்னதும் அவன் குருவியைப் பார்த்தான். அது இப்போது அவனைச் சுற்ற ஆரம்பித்தது.

''சாமி... அது உங்களுக்கு உதவி செஞ்சதில்லே?''

''ஆமா.''

''நீங்க அதுக்குப் பதிலா ஏதாச்சும் செய்ய வேண்டாமா?''

அவன் சொன்னதைக் கேட்ட கிழவர் அவனை வியப்புடன் பார்த்தார். நீலனே கூடையைத் திறந்து ஒரு மீனை கையில் எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டு நீட்டினான். மீன்காட்டி அவன் கையில் வந்து அமர்ந்தது. அவன் அதை மெல்லத் தடவி விட்டான். இறக்கைகளை விரித்து இறகுகளை எண்ணினான். அது மீனைக் கொத்திக் கொண்டதும் மேலே பறக்க விட்டான்.

''சாமி, கூடையில உள்ள மீன்களிலே சின்னதாப் பாத்து ஒரு அஞ்சாறு எடுத்துக் கீழே போட்டுருங்க. அது பாட்டுக்குக் கொத்திக் கிட்டுப் போயிடும். இந்த மீன்காட்டிக்குப் பாவம் இன்னும் ரெண்டு

வயசு கூட ஆகலே. இதுக நமக்கு மீனைக் காட்டிட்டு நாம ரெண்டு மீனு தருவோம்னு எதிர்பார்க்கும். தரலேன்னா கூடவே வரும். அப்படியும் தரலேன்னாதான் கொத்தும்.''

''அது சரிப்பா. இதன் வயசெல்லாம் எப்படித் துல்லியமாச் சொல்லிட்டே''

''அது சாமி... ரெக்கைகளை விரிச்சுப் பாத்தனா...எத்தனை விழுந்து மொளச்சிருக்குன்னு பாத்தா, வயசைச் செரியாச் சொல்லிடலாம். இந்த மாதிரி மலைக்கு மேற்கால உள்ள காட்டுல தேன்காட்டி குருவின்னு ஒரு வகை இருக்கு. அது எங்களுக்குத் தேனடை இருக்குற மரக் கிளையைக் காட்டும். நாங்க தேனு எடுத்துக்கிட்டு, கொஞ்சம் தேனுள்ள அடையைப் பிழியாமெ அதுக்குப் போடணும். இல்லேன்னா நம்மளக் கொத்தும். இன்னொரு வகைக் குருவி பெருங்காத்து வந்தால் மொத நாளே கத்திக் கத்திச் சொல்லிடும். ஒருவகைக் குருவி மறுநாள் மழை வரும்னா கத்திச் சொல்லிடும்.''

நீலன் சொல்லச் சொல்லக் கிழவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. நீலனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

''நீலா, என் எழுவது வயசு அனுபவத்துல இந்தக் காடுகள்லேயே திரிஞ்சவன் இந்த மீன் காட்டிக் குருவியவும் அது சுத்துறதையும் பல தடவை பாத்தவன்தான். நான் உண்டு, என் வேலை உண்டுன்னு போயிட்டேனேப்பா. எதையும் தெரிஞ்சுக்கணும்னு பேராசைப்படாமப் போயிட்டேனேப்பா. ஒன் வயசென்ன... இவ்வளவுக்கும் நீ பளியன். அடேயப்பா... உன் அனுபவத்தைப் பாத்தா எனக்குப் பொறாமையா இருக்குப்பா! பேரப்புள்ளே! வேலா! நீயாச்சும் நீலனை மாதிரி ஒவ்வொன்னையும் என்ன எதுக்குன்னு கவனி. அனுபவ அறிவு வளரணும்பா,'' என்று நா தழுதழுக்கக் கூறினார்.

''நா வாறேஞ்சாமி..'' நீலன் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

இருவரும் அவன் போன திசையையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

டாக்டர் பக்கம்



மலேரியா

டாக்டர் கு. கணேசன்

அருண் ஆறாம் வகுப்பு மாணவன். அவன் அண்ணன் சிவகுமார் ஏழாம் வகுப்பில் படிக்கிறான். எனக்குத் தெரிந்தவர்கள்.

சென்ற வாரம் ஒரு நாள் அவர்கள் என்னைச் சந்தித்தபோது —.

நான்: என்ன, அண்ணனும் தம்பியும் சேர்ந்து வருகிறீர்கள்? என்ன விஷயம்?

சிவகுமார்: டாக்டர், எங்கள் பாட்டிக்கு நான்கு நாட்களாகக் காய்ச்சல். அப்பாவும் அம்மாவும் வெளியூருக்குச் சென்றிருப்பதால் பாட்டியை மருத்துவமனைக்கு அழைத்து வர இயலவில்லை. இன்று எங்கள் வீட்டிற்கு வந்த ஒரு சுகாதாரப் பணியாளர், பாட்டிக்கு மலேரியாக் காய்ச்சல் வந்திருக்கலாமென்றும் உடனே வைத்தியம் பார்க்கா விட்டால் ஆபத்தென்றும் பயமுறுத்தினார். அதனால்தான் எங்களுக்குத் தெரியாத மலேரியாவைப் பற்றி உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் பாட்டிக்கு வைத்தியம் பார்க்க உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லவும் வந்திருக்கிறோம்.

நான்: அப்படியா, வாருங்கள். பேசிக் கொண்டே செல்வோம். மலேரியா (**Malaria**) என்பது கொசு கடிப்பதால் வரக் கூடிய ஒருவகைக் காய்ச்சல். சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லா ஜாதியினரையும் பாதிக்கக் கூடியது. தெருவில் ஒருவருக்கு மலேரியா வந்தால் அடுத்த பத்து நாட்களில் தெரு முழுவதுமே மலேரியா பரவி விடலாம்.

சிவகுமார்: மலேரியாக் காய்ச்சலுக்கு ஏதேனும் கிருமிகள் காரணமா டாக்டர்?

நான்: ஆமாம், சிவகுமார். பிளாஸ்மோடியம் விவாக்ஸ், பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரம், பி. மலேரியா, பி. ஓவேல் எனப்படும் நான்கு வகை மலேரியாக் கிருமிகள்தான் மலேரியாக் காய்ச்சல் வருவதற்குக் காரணமாக இருக்கின்றன. இவற்றில் முதல் இரு வகைக் கிருமிகள் நம்மிடையே மிகுந்து காணப்படுகின்றன.

அருண்: ஏன் டாக்டர், கொசு கடிப்பதால்மலேரியா வருகிறது என்று முதலில் சொன்னீர்கள். இப்போது மலேரியாக் கிருமிகளினால் மலேரியா வருகிறது என்று சொல்கிறீர்களே... எப்படி?

நான்: விளக்கமாகவே சொல்கிறேன், கேள். கொசு இல்லாவிட்டால் இந்த மலேரியாக் கிருமிகள் வளர இயலாது. காரணம், மலேரியாக் கிருமிகளின் வாழ்க்கைச்

சக்கரம் மனிதர்களிடத்திலும் பின்பு கொசுக்களிடத்திலும் சுழல்கிறது. ஆண், பெண் என இரு தனிப்பட்ட கிருமிகளாக மனிதனின் இரத்தத்தில் மலேரியாக் கிருமிகள் இருக்கும். பெண் அனாபிலைன் (Female Anapheline) கொசுக்கள் நம்மைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் போது இந்த மலேரியாக் கிருமிகளும் இரத்தத்துடன் கொசுக்களின் வயிற்றை அடைகிறது. அங்கு சுமார் பத்து நாட்கள் தங்கியிருந்து குஞ்சு பொரிக்கிறது. இவ்வாறு பிறந்த குஞ்சுகளை உடைய கொசுக்கள் மனிதனைக் கடிக்கும் போது, அந்தக் குஞ்சுகள் மனிதனின் இரத்தத்தில் கலந்து நேராகக் கல்லீரலை அடைகிறது. அங்கு குஞ்சுகள் பெரிதாக வளர்ந்து, மீண்டும் இரத்தத்தில் கலந்து, இரத்தச் சிவப்பணுக்களை அழிக்கின்றன. அப்போதுதான் நமக்குக் காய்ச்சல் வருகிறது. இதை 'மலேரியாக் காய்ச்சல்' என்று சொல்கிறோம்.

அருண்: மலேரியாக் காய்ச்சலுக்கும் மற்றக் காய்ச்சலுக்கும் என்ன வேறுபாடு, டாக்டர்?

நான்: மலேரியாக் காய்ச்சலுக்கென்றே சில விசேஷ அறிகுறிகள் உள்ளன. அவை மற்றக் காய்ச்சலில் காண்பதில்லை. மலேரியா வந்தவர்களுக்குத் திடீரென்று குளிருடன் கூடிய காய்ச்சல் ஆரம்பிக்கும். குளிர் தாங்க இயலாது. பல போர்வைகள் கொண்டு போர்த்தினாலும் குளிர் அடங்காது. ஆளைத் தூக்கித் தூக்கிப் போடும். பற்கள் தாளம் போடும். சுமார் அரை மணி முதல் ஒரு மணி நேரம் வரை இந்நிலை நீடிக்கும். பின்பு காய்ச்சல் அதிகமாகும். உடல் அனலாகக் கொதிக்கும். 104லிருந்து 106 டிகிரி பாரன்ஹீட் வெப்ப நிலையை உடல் அடையும். தலைவலி, உடம்பு வலி, இடுப்பு வலி, வாந்தி எல்லாமே சேர்ந்து கொள்ளும். இந்நிலை மூன்று மணி நேரத்திற்கு நீடிக்கும். பின்பு எந்தவித மருந்தும் கொடுக்கப்படாமலேயே காய்ச்சல் குறைந்து விடும். உடல் முழுவதும் தண்ணீரில் குளித்த மாதிரி வியர்வை சலசலவெனக் கொட்டும். தலைவலி, உடல்வலி குறையும். ஆனால் உடல் அசதி கொடுக்கும். மறுநாள் காய்ச்சல் வருவதில்லை. எப்போதும் போல் வேலைகளைச் செய்ய இயலும். ஆனால் மூன்றாம் நாள் மீண்டும் குளிருடன் கூடிய காய்ச்சல், தலைவலி, வாந்தி, வியர்த்தல் என்று பழைய கதை தொடர ஆரம்பிக்கும். இம்மாதிரி ஒரு நாள் விட்டு மறுநாள் என்று முறையாக வரக் கூடியது மலேரியாக் காய்ச்சல்! அதனால் இதை முறைக் காய்ச்சல் என்றும் சொல்லுவார்கள்.

சிவகுமார்: நீங்கள் சொன்ன அத்தனை அறிகுறிகளும் எங்கள் பாட்டிக்கு இருக்கிறது டாக்டர். ஏன் டாக்டர், மலேரியாவினால் உயிருக்கு ஆபத்து வருமா?

நான்: முறையாக மருத்துவம் பெறவில்லையென்றால் மலேரியாவினால் உயிருக்கு ஆபத்து வரலாம். காரணம் சொல்லட்டுமா? ஒவ்வொரு முறை



காய்ச்சல் வரும் போதும் மலேரியாக் கிருமிகள் இரத்தச் சிவப்பணுக்களை அழிப்பதால் சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைந்து, 'இரத்த சோகை' **(ANAEMIA)** என்ற நோய் வரக்கூடும். இது தவிர, மலேரியாக் கிருமிகள் மூளை, சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல் போன்ற முக்கியமான உடல் உறுப்புக்களையும் பாதிப்பதால், உயிருக்கு ஆபத்து வரக்கூடிய வாய்ப்பு அதிகமாகும்.

அருண்: ஒருவருக்கு வந்துள்ள காய்ச்சல் மலேரியாதான் என்று எப்படி நீங்கள் உறுதி செய்வீர்கள், டாக்டர்?

நான்: அருண், நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி குளிருடன் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரக்கூடிய காய்ச்சலை மலேரியாவாக இருக்கலாம் எனச் சந்தேகித்து, பாதிக்கப்பட்டவரின் விரல் நுனியில் ஒரு துளி இரத்தம் எடுத்துப் பரிசோதிப்போம். அதில் மலேரியாக் கிருமிகள் தெரிந்தால் அந் நபருக்கு மலேரியா வந்துள்ளது என்று உறுதி செய்வோம்.



சிவகுமார்: மலேரியாவுக்கு என்ன மருந்துவம் டாக்டர்?

நான்: குளோரோகுயின், காமாக்குயின், பிரிமாக் குயின் என்று பல வகை மாத்திரைகள் மலேரியாவைப் பூரணமாகக் குணமாக்கக் கூடியவை. இவற்றை மருத்துவரின் பரிந்துரையின் பேரில் உபயோகித்தால் நன்மை பயக்கும்.

அருண்: ஏன் டாக்டர் மலேரியாவைத் தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

நான்: சொல்கிறேன். கொசுக்கடி மூலமாகவே, மலேரியா பரவுகிறது என்று சொன்னேனல்லவா? அதனால் முதலில் கொசு நம்மைக் கடிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதற்குக் கொசு வலையையும், ஓடாமஸ், மின்சாரக் கொசு விரட்டிகளையும் பயன்படுத்தலாம்.


இது தவிர நாம் குடியிருக்கும் இடங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அசுத்தமான தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். வீட்டிலும் வீட்டைச் சுற்றியுள்ள சாக்கடைக் கால்வாய்களிலும் **'DDT'** என்ற கொசுக் கொல்லி மருந்தை அடிக்கடி தெளித்து வந்தால் கொசுத் தொல்லை குறையும். இதன் மூலமும் மலேரியாவைத் தடுக்கலாம்.

மலேரியா பரவும் காலங்களில் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மலேரியா மாத்திரைகளை முன்னேற்பாடாக உட்கொண்டு விட்டாலும் மலேரியா வருவதில்லை.

சிவகுமார்: மலேரியாவுக்குத் தடுப்பு ஊசி இல்லையா, டாக்டர்?

நான்: மலேரியாவுக்கு இன்னமும் தடுப்பு ஊசி கண்டுபிடிக்கப்படாதது நமது துரதிர்ஷ்டமே!


பின்குறிப்பு: அருண், சிவகுமார் இருவரின் பாட்டியும் இப்போது பூரண குணமடைந்து நல்ல உடல் நலத்துடன் இருக்கிறாள்.



* எஸ். சரவணன், மேல் மலையனூர்.

கே: கால்குலேட்டர் எந்த ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது? கண்டுபிடித்த அறிஞர் யார்?

ப: முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட கால்குலேட்டருக்குக் கூட்டல் கழித்தல் மட்டும்தான் செய்யத் தெரியும். அதை அடிப்படையாக வைத்துத்தான் இன்றைய கால்குலேட்டர் எல்லாம் — அடேங்கப்பா! இதிலே கணக்குப் பண்ண முடியாத எண் வித்தைகளே கிடையாது. இருந்தாலும் இவற்றுக்கெல்லாம் மூலத்தை — அந்த முதல் கால்குலேட்டரை உலகுக்கு அறிமுகப்படுத்



திய ஆண்டு 1642. அடுத்தாற்போல் ஒரு துணைக் கேள்வி தொங்குகிறதே. அதற்கு விடை சொல்வதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அதைத் தமிழில் எழுதினால் தப்பு என்பார்கள். தலைக்கு ஒரு உச்சரிப்பாய்ச் சொல்வார்கள். அத்தனையையும் தள்ளி விட்டு டி. வி. காரர்கள் புதுவிதமாய்க் குரல் கொடுப்பார்கள். எதற்கு வம்பு. ஆங்கிலத்தில் உள்ளபடியே தருகிறேன். கண்டுபிடித்தவர் ஒரு பிரெஞ்சுக்காரர். பெயர்: **Blaise Pascal**. வசதிப்படி உச்சரித்துக் கொள்ளுங்கள்.

* எஸ். சிவக்குமார், சிதம்பரம்.

கே: சோப்பு எவ்வாறு அழுக்கினை அகற்றுகிறது?

ப: அழுக்கு என்பது தனியாக நிற்கக் கூடிய சங்கதி இல்லை. அது தூய்மையான ஒன்றின் மேல், அல்லது ஊடுருவி அப்பிக் கொள்ளும் போது தன் சொரூபத்தைக் காட்டுகிறது. அப்படி அது துணியோடு பின்னிப் பிணைந்து அசிங்கம் பண்ணும் போது அதை எப்படியாவது அகற்றித் தூய்மைப் படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வெறும் தண்ணீருக்கு இழைகளுக்குள் ஊடுருவும் சக்தி குறைச்சல். தண்ணீருக்குப் பரப்பு விறைப்பு (**Surface tension**) உண்டு. அதிலும் உப்புத் தண்ணீரில் இந்த விறைப்பு அதிகம். உப்புத் தண்ணீரைக் காட்டிலும் நல்ல தண்ணீருக்கு ஊற வைக்கும் சக்தி கூடுதல். நல்ல தண்ணீரைக் காட்டிலும் அதையே சுட வைத்த தண்ணீர் மேலும் அதிகமாய்த் துணியை நனைக்கும். அதைக் காட்டிலும் அதே தண்ணீரில் கலந்த சோப்பு நீர் துணிகளை ஊடுருவி உள்ளே பிசுக்காய்ப் பிடித்திருக்கும் அழுக்கைக் குத்திக் கிளறி வெளிக் கொணர்ந்துவிடும். எச்சரிக்கை: சோப்பு அசல் சோப்பாய் இருக்க வேண்டும். அதைப் போட்டுப் பிளாஸ்டிக் பிரஷ் கொண்டு தேய்த்து அடித்துத் துவைத்தால் துணிகள் பளிச்! துவைத்துப் பார்க்கணும் போல் இருக்கா? செய். எங்க ஊர் லாண்ட



ரியில் ஒரு சாதாத் துணி சலவைக்கு ரூ. 2 சார்ஜ். நீயே சலவை செய்து கொண்டால் எத்தனை மிச்சம்!

* நந்திவர்மன், குருவை.

? கே: ஆன்மாவைத் தூய்மை செய்ய எவ்வகையான சோப்பை உபயோகிக்க வேண்டும்?

ப: இது ரொம்பப் பெரிய விசாரம் தம்பி. 'அன்ன விசாரம் அதுவே விசாரம்; சொர்ண விசாரம் தொலையா விசாரம்' என்று உன்னைப் பெற்றவர்களும் பெரியவர்களுமே இந்த உலகத்தில் உழன்று கொண்டிருக்கும் போது நீ ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவது எப்படி என்று

—சின்ன அண்ணன்

கவலைப்படுகிறாயே. பாராட்டுக்கள்! ஆன்மா அழுக்குப் பட்டால்தானே அதைத் தூய்மை செய்யச் சோப்புத் தேட வேண்டும்? அது என்றுமே தூய்மையானது. ஆன்மாவுக்கு அழிவில்லை. ஆன்மா ஒன்றே. அழுக்குப் படிந்திருப்பது அது உறையும் கூட்டில்தான் — அதாவது உன் உடலில் — உடலைத் தழுவிய உணர்வில் — உணர்வைத் தூண்டும் எண்ணத்தில் கறை படிந்த கண்ணாடி உறைக்குள்ளே இருக்கும் தூய்மையான பளிங்குச் சிலையில் கறை இருப்பது போல் தோன்றும்தானே? இந்த மேலுறையின் கறையைப் போக்கினால் உள்ளே இருக்கும் பளிங்குச் சிலையின் உண்மையான தூய்மை உனக்குப் புலப்படும். சரி, எந்தச் சோப்பு இந்தக் கறையைப் போக்கும்? ஆன்ம நேய ஒருமைப்பாடு என்பதற்குள் இது அடங்குவதாய் எனக்குத் தோன்றுகிறது. அத்தனை உயிரிலும் உறையும் ஆன்மா ஒன்றே என உணரும் பக்குவம். இதனைத்தான் எளிய வார்த்தைகளால் இராமலிங்க அடிகளார் இறைஞ்சுகிறார். 'அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிய வேண்டும். ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' ஆன்மா கறை பட்டுப் போனதாய் நினைத்துக் கொண்டு அதைத் தூய்மை செய்ய ஒரு சோப்புக் கேட்டாயே. அது அன்பு. ஆருயிர்கட்கெல்லாம் அன்பு. இந்தச் சோப்பு தயாரிக்கக் காசு பணம் தேவையில்லை; நினைத்தால் போதும், உன் நெஞ்சிலிருந்தே நுரைத்துக் கொண்டு வெளிவரும்!

• இல. மணிமூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

கே: இளமையில் பள்ளிகளில் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு, இடையில் பேச முடியாமல் திக்கித் திணறிய அனுபவம் உண்டா?

ப: சுயப் பிரதாபத்தை வெளியிட ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. விடப்போவதில்லை. நான் பள்ளி மாணவனாய் இருந்த போது நாலு, ஐந்து, ஆறு பாரங்களை — அதாவது ஒன்பது, பத்து, பதினோராம் வகுப்புக்கான மேநிலை வகுப்புக்கள் என்பார்கள். இந்த மாணவர் மன்றம் விவகாரமெல்லாம் இந்த மேநிலை வகுப்புக்களுக்கு மட்டும்தான். நான் வாலாஜாபாத் வள்ளலார் மாணவர் இல்லத்தில் தங்கிப் படித்துப் பல பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசும் பயிற்சியும் பெற்றிருந்தேன். அங்கு எட்டாம் வகுப்பு வரைதான் (E.S.L.C. என்று பேர்) இருந்தது. அப்



புறம் என் சொந்த ஊரில் 9 — ஆம் வகுப்பில் சேர்ந்தேன். வகுப்பளவில் என் எழுத்தும் பேச்சும் பிரபலமாகி, மேல் வகுப்பு மாணவர்களுக்கு எட்டி, மாணவர் மன்றத்துக்குத் தலைவராக்கி விட்டார்கள். பதினோராம் வகுப்பு மாணவர்கள் இருக்க, ஒன்பதாம் வகுப்புப் பையனைத் தலைவனாய்ப் போட்டது ஒரு பக்கம் இருக்கட்டும்;

இந்தத் தலைவன் பார்ப்பதற்கு வாட்டசாட்டமாய் இருந்தாலாவது மதிப்பாய் இருக்கும். நான் தோஞ்சான். தலை மட்டும் பெரிசாய் இருக்கும். கடப்பாரையில் பனங்காயைச் செருகி வைத்த மாதிரி என்று கேலி செய்வார்கள். என்னை இந்த மாதிரி இக்கட்டான தலைமைப் பதவியில் உட்கார வைத்ததற்கு முக்கிய காரணம் ராமநாமங்களில் ஒன்றைக் கொண்ட முன்னாள் அமைச்சர் ஒருவர் பள்ளியில் எனக்கு அவர் சீனியர். அவர்தான் என் பெயரை முன் மொழிந்து, தலைவர் தாற்காலிக்கு என்னை அழைத்தார். கூட்டத்தோடு கூட்டமாய் உட்கார்ந்திருந்த நான் எழுந்ததும், குபீரென்று ஒரு சிரிப்பலை பொங்கியது பாருங்கள், எனக்குக் குப்பென்று வியர்த்தது. இரண்டடி எடுத்து வைத்திருப்பேன். யாரோ ஒரு பாவி எனக்கு 'அட்டாக்' கொடுக்கக் கவிழ்ந்து விழப் பார்த்து, ஒரு வழியாய்ச் சமாளித்துக் கொண்டேன். மறுபடியும் பெரிய சிரிப்பலை. எங்கள் பள்ளி கோ எஜுகேஷன் பள்ளி வேறு. எனக்கு எப்படி இருந்திருக்கும்! இந்த லட்சணத்தில் என்னைப் பேசச் சொன்னால் என்னால் திக்கித் திணறாமல் பேச முடிந்திருக்குமா? முடிந்ததே! அதுதான் வேடிக்கை. என்னைக் கேலி பேசியவர்களிடம் என்னை யாரென்று காட்ட வேண்டும் என்ற ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. பிய்த்து உதறிப் பெரிய கைதட்டல் வாங்கினேன்.



கரடி மரம் ஏறுமா?



பொன்னனும் பழனியும் மலையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. இருக்காதா பின்னே? யாராலும் செய்ய முடியாது என்று மற்றவர்கள் சவால் விட்ட அருஞ்செயலை அல்லவா அவர்கள் செய்து முடித்துக் காட்டியிருக்கிறார்கள்!

கொல்லி மலையில் கழுத்துச் சுளுக்கிப் பாறை என்று பயங்கரமான ஒரு மலைப் பாறை. மலையின் செங்குத்தான சரிவின் உச்சியில், துருத்தியது போல் அது இருந்தது. இதுவரை அதில் யாரும் கால் வைத்தது கிடையாது. நீட்டிக் கொண்டிருந்த அந்தப் பாறையின் கீழ்ப்பாகத்தில் தேன் கூடு கட்டியிருந்தது. அது சாதாரணமான சின்னக் கூடு இல்லை. மிகப் பெரிய கூடு.

வனத்துறை அதிகாரிகள் காட்டு மக்களைக் கொண்டு தேன் கூட்டை எடுக்க எல்லா முயற்சிகளும் செய்தனர். வந்து பார்த்தவர்கள் அனைவரும் அது பிடிக்கு அடங்காத இடத்தில் இருப்பதால் தங்களால் முடியாது என்று கை விரித்தனர். அதிகாரிகள் ஒரு முடிவுக்கு வந்தனர். 'கூட்டை யார் வேண்டுமானாலும் வந்து அழித்துத் தேன் எடுத்துக் கொள்ளலாம். கிடைக்கும் தேனில் மூன்றில் ஒரு பங்கை வனத்துறைக்குக் கட்டணமாகக் கொடுத்து விட வேண்டும்,' என்று அறிவிப்புச் செய்தனர்.

பொன்னனும் பழனியும் தீவிரமான சாரணர்கள். அதோடு விந்திய சத்பூரா மலைகளில் மலையேறும் பயிற்சி பெற்று, தனித் திறமைக்காக வெள்ளிப் பதக்கம் பெற்றவர்கள். பொழுது போக்காகக் கொல்லி மலைக்கு வந்தவர்கள் வனத்துறையின் அறிவிப்பை அறிந்து, கழுத்துச் சுளுக்கிப் பாறைக்கு வந்து தேன் கூட்டைப் பார்த்தனர். வீரச் செயல்கள் புரிவதில் அடங்காத ஆர்வம் கொண்ட இருவரும் அந்தச் செயலைத் தாங்கள் செய்து சாதனை நிகழ்த்திக் காட்ட உடனே இறங்கினர். மலையேற்றத்தில் இருவருக்கும் இருந்த பயிற்சி பெரிதும் உதவியது.

உயிரைப் பணயம் வைத்து, யாரும் காலடி வைக்காத கழுத்துச் சுளுக்கி முகட்டில் ஏறி, தேனீக்களின் தாக்குதலைச் சமாளித்து, தேன் கூட்டை அழித்து அவர்கள் தேன் பிழிந்த காட்சியை வனத்துறை அதிகாரிகளும் காட்டு மக்களும் வியப்போடு பார்த்தனர். ஆறு கிலோ தேன் கிடைத்தது. இரண்டு கிலோவை வனத்துறை அதிகாரிகளிடம் கொடுத்தனர். சாதனை புரிந்த இருவரையும் பாராட்டிய அதிகாரி, பிஸ்கட்டும் தேனீரும் வழங்கினார். அது முடியும்போது இருட்டத் தொடங்கி விட்டது. இருவரும் மோட்டார் சைக்கிளில் கிளம்பினர்.

"நேரமாகி விட்டதே! மலையடிவாரம் போவதற்குள் நன்றாக இருட்டி விடுமே. பேசாமல் இரவு தங்கிவிட்டுக் காலையில் போகலாமே!" என்று கேட்டார் அதிகாரி.

"இல்லை சார். நாளை மாலை ஒரு கேம்ப் போகிறோம். அதற்கான ஏற்பாடுகளைக் காலையில் செய்தாக



வேண்டும். வீட்டிலும் சொல்லிக் கொண்டு வரவில்லை. நாங்கள் போகா விட்டால் அவர்கள் கவலைப் படுவார்கள்,'' என்றான் பொன்னன்.

''ஒன்றும் பயமில்லை. மோட்டார் சைக்கிள் இருக்கிறது. ஏறுவதானால் தான் கஷ்டம். இறங்குவதில் தொல் லையே இருக்காது. அதோடு நிலாக் காலம் வேறு. கவலையே வேண் டாம்,'' என்று ஒத்துப் பாடினான் பழனி.

அதற்குமேல் அதிகாரியால் அவர் களைப் பிடித்து நிறுத்த முடிய வில்லை. இருவரும் கிளம்பினர். எல்லாம் சரியாகத்தான் நடந்தது. ஆனால், பாதி வழி வந்ததும் மோட் டார் சைக்கிளின் முன் பக்கத்து டயர் எதிர்பாராத விதமாகப் பஞ்சராகி விடவே, மாற்று டயரைப் போட்டுச் சரி செய்து கொண்டு கிளம்பும் போது நன்றாக இருட்டிவிட்டது. நிலவொளி யின் மங்கிய வெளிச்சம்தான்.

காட்டுப் பாதையில் யாரோ கம்பளி போர்த்துக் கொண்டு நடந்து வருவது போல் இருந்தது. மோட்டார் சைக்கிளைக் கிளப்பிவிட்ட பொன்னன், பிரகாசமான அதன் முன் விளக்கைத் திருப்பினான். ஒளி வெள்ளத்தில் கரிய கரடி ஒன்று நின்று கொண்டிருந்தது! இருவரும் அதிர்ந்தனர். பொன்னனுக்கு ஏற் பட்ட பதற்றத்தில் மோட்டார் சைக்கிள் வளைந்து ஓடி அருகிலி ருந்த மரத்தில் முட்டி நின்றது!

பொன்னன்மோட்டார்சைக்கிளை மீண்டும் கிளப்ப வைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயனளிக்க வில்லை. ''பழனி, ஓடுவதைத் தவிர வேறு வழியே இல்லை,'' என்றான்

பொன்னன்.

இருவரும் ஓட ஆரம்பித்தனர். கரடியும் விடவில்லை. அதே வேகத்திற்கு அதுவும் துரத்தத் தொடங்கியது!

''பொன்னா, கரடிக்கு மரமேறத் தெரியாது. அதனால் நாம் எங்கேயாவது மரத்தில் ஏறிக் கொண்டால்தான் பிழைக்கலாம்.'' என்றான் பழனி ஓடிக் கொண்டே.

''கரடிக்கு மரமேறத் தெரியாதுன்னு யார் சொன்னது? எனக்குச் சந்தேகமா இருக்கு.''

''சந்தேகப்பட இதுவா நேரம்? நான் படித்த புத்தகத்தில் கரடிக்கு மரமேறத் தெரியாதுன்னுதான் எழுதியிருந்தது. அதைப் பற்றி ஒரு கதை கூட உண்டு. இரு நண்பர்கள் காட்டு வழியே கிளம்பினராம். கரடி எதிர்ப்படவே, ஒருவன் மரமேறித் தப்பித்துக் கொண்டானாம். மரமேறத் தெரியாத அப்பாவி ஆபத்தில் சிக்கினான். அந்த ஆபத்தான நேரத்தில் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. இறந்து போனவன் மாதிரி மூச்சை அடக்கிக் கொண்டு கீழே படுத்துக் கொண்டானாம். கரடி அவனருகே வந்ததும் முகர்ந்து புரட்டிப் பார்த்து விட்டு, இறந்து விட்டதாக எண்ணி அவன் காதுப் பக்கம் முகர்ந்து பார்த்து விட்டுச் சென்றதாம். கரடி சென்ற பிறகு மரத்தில் ஏறித் தப்பித்தவன், 'கரடி உன் காதில் என்ன சொன்னது?' என்று கேட்டானாம். 'ஆபத்தில் உதவாத நண்பனுடன் சேராதே.' என்று கரடி எச்சரித்ததாக அவன் கூறினானாம். இக்கதையை நான் சிறு வகுப்பில் படித்திருக்கிறேன்.'' என்றான் பழனி ஓடிக் கொண்டே.

''இக்கதையை நானும் வகுப்பில் படித்திருக்கிறேன்.'' என்று கூறினான் பொன்னன்.

இருவரும் அருகில் இருந்த பெரிய மரமொன்றில் ஏறிப் பத்திரமாக அமர்ந்து கொண்டனர்.

அவர்களுடைய நிம்மதி அதிக நேரம் நீடிக்கவில்லை. கரடி சொல்லி வைத்தது போல் அவர்களிருந்த மரத்தடியில் வந்து நின்று நிமிர்ந்து பார்த்து முகர்ந்தது. நண்பர்களிருவரும் மூச்சைக் கூடப் பலமாக விடாமல் நடுங்கியபடி இருந்தனர். கரடி அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அழகாக மரமேறத் தொடங்கியது!

''பொன்னா, இன்று நாம் பிழைப்

---

50 கோப்பைகளும் கேடயங்களும்!



சென்னையில் எங்கு ஓவியப் போட்டி நடந்தாலும் செய்தி தெரிந்தால் போதும். செல்வி அன்னபூரணா நிச்சயம் கலந்து கொண்டு கட்டாயம் பரிசோடு திரும்புவாள். படிப்பது ஐந்தாம் வகுப்பு. வசிப்பது அடையாறில் பரிசு பெற ஆரம்பித்தது மூன்றாம் வகுப்புப் படிக்கும் போது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் வாங்கிக் குவித்திருப்பது ஏறக்குறைய ஐம்பது கோப்பைகளும், கேடயங்களும்! அன்னபூரணாவுடன் ஒரு சின்ன பேட்டி:

''இந்தச் சின்ன வயதிலே இவ்வளவு அழகா வரைகிறாயே, உங்க வீட்டில் அப்பா அம்மா யாராவது பெரிய ஓவியரோ?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. என் உடன் பிறவா அண்ணன் திரு. ராஜ் அவர்கள் ஓவியக் கல்லூரியில் படித்தவர். அவர் வீட்டிலிருந்து வரையும் ஓவியங்களை என் குழந்தைப் பருவம் தொட்டுப் பார்த்து வந்ததால் என்னையும் அறியாமல் எனக்குள் ஓர் ஆர்வம் வளர்ந்தது. இப்பவும் ஒவ்வொரு முறையும் ஓவியப் போட்டிக்குச் செல்லு முன் நான் வரையும் படங்களைத் திருத்தம் செய்து சொல்லிக் கொடுப்பதோடு, தவறுகளை அவர் உரிமையோடு கண்டிக்கவும் செய்வார்.''

''முதன் முதலில் எப்போது ஓவியப் போட்டியில் கலந்து கொண்டாய்?''

''நான் மூன்றாம் வகுப்புப் படிக்கும் போது 'விஸ்வ ஹிந்து பரிஷத்' நடத்திய குழந்தைகள் ஓவியப் போட்டிதான் நான் கலந்து கொண்ட முதல் போட்டி. பெற்ற முதல் பரிசும் அதில்தான். அதற்குப் பிறகு

பது சந்தேகம்தான். கரடி அருமையாக, நம்மைவிடக் கவனமாக மரமேறி வருகிறது. சிறு வகுப்பில் நாம் படித்த கதை பொய்யாகிவிட்டது! அதைஎழுதிய ஆசிரியர் நம்மைஏமாற்றியதுடன், நம்மை ஆபத்திலும் சிக்க வைத்து விட்டார்,'' என்று நம்பிக்கையிழந்த குரலில் கூறினான் பழனி.

கரடி ஒவ்வொரு கிளையாகக் கடந்து ஏறிவர, நண்பர்கள் இருவரும் மேல் கிளைக்குச் சென்று கொண்டிருந்தனர்.

பொன்னனின் முதுகில் இருந்த 'கிட்டில்' அவர்கள் பங்குக்குக் கிடைத்த தேன், பாட்டிலில் இருந்தது. கரடிக்குப் பயந்து அவன் கிளைக்குக் கிளை நகர்ந்த போது பாட்டில் சுமையாகத் தோன்றவே, அதை எடுத்தான். முதலில் கீழே வீசி விடவே எண்ணினான். ஆனாலும் கடைசி முயற்சியாக அதையே ஏன் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திப் பார்க்கக் கூடாது என்ற எண்ணம் தோன்றவே, புட்டியை எடுத்துத் தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி ஆத்திரத்துடன் கரடியின் மேல் வீசியெறிந்தான்.

கரடி நகர்ந்து கொண்டது. பாட்டில் மரக்கிளையில் பட்டுக் கீழே விழுந்தது. விழுந்த வேகத்தில் பாட்டியின் மூடி கழன்று கொள்ளத் தேன் கீழே தரையில் வழிய ஆரம்பித்தது. கரடி அங்கிருந்தபடியே கீழே அவசரம் அவசரமாகக் குதித்தது. வழிந்த கிடந்த தேனைக் குனிந்து நக்கியது. பாட்டிலை எடுத்துக் கொண்டு காட்டுக்குள் நடந்தது. நண்பர்கள் இருவரும் தப்பினோம், பிழைத்தோம் என்று இறங்கி விரைந்தனர்.

அறிவியல் உண்மை:

கரடிக்கு மரமேறத் தெரியாது என்பது உண்மையல்ல. அது நன்றாக மரமேறும். கிளைக்குக் கிளை ஏறி, மரத்தில்கட்டியுள்ள தேன்கூட்டைக்கலைக்கும்.

கரடிக்கு மோப்ப சக்தி மிகமிக அதிகம். தேன் என்றால் அதற்கு உயிர். ஒரு துளி தேன் சிந்தினால் கூட, காற்றில் பரவும் அதன் வாசனையைக்கொண்டு, கரடி அங்குவந்துவிடும். நண்பர்களைக் கரடி துரத்தியதும், மரமேறியதும் தேனின் வாசனையால் கவரப்பட்டுத்தான்! அது கிடைத்ததும் அது ஓடிவிட்டது!

மாதம் இருமுறை வீதம் பல்வேறு கம்பெனிகளால் 'ஸ்பான்சர்' செய்யப்படும் பள்ளிகளுக்கிடையே நடைபெறும் ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறுவது என்னுடைய பொழுதுபோக்காகி விட்டது.

''நீ கலந்து கொண்ட போட்டிகளிலேயே மிகவும் பிடித்தது. அல்லது மறக்க முடியாதது எது?''

''எல்லாப் போட்டிகளும் எனக்கு மிகவும் பிடித்தவைதான். ஆனால் 'யூனிசெப்' ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற என் ஓவியம் அவர்கள் வெளியிட இருக்கும் வாழ்த்து அட்டைகளிலும் காலண்டர்களிலும் பயன்படுத்தப்படும் என்ற அறிவிப்பும், 'சியர்ஸ் எல்காட்' ஓவியப் போட்டியில் திரு. காவஸ்கர் அவர்களிடமிருந்து முதல் பரிசினைப் பெற்றதையும் என்னால் மறக்க முடியாது.''

''உன்னுடைய ஓவியங்களுக்குப் பெரும்பாலும் பயன்படுத்தும் பொருட்கள் எவை? சாதாரணமாக ஒரு படத்தை வரைய நீ எடுத்துக் கொள்ளும் நேரம் எவ்வளவு?''


''இப்பவெல்லாம் ஒன்றரை மணி நேரத்திற்குள் படத்தை முடித்து விடுகிறேன். என்னோட படங்கள் பெரும்பாலும் போஸ்டர் கலரினாலும், டிரான்ஸ்பாரெண்ட் போட்டோ கலரினாலும், வாட்டர் புரூப் டிராயிங்கினாலும் சில சமயம் கிரயான்களாலும் முடிக்கப்படும். இந்தக் கலர்களெல்லாம் இந்தியாவிலேயே கிடைக்கும்.''

''இந்த மாதிரி ஓவியப் போட்டிகளுக்கு ஆயத்தம் பண்ணவும் அவற்றில் கலந்து கொள்ளவுமே உனக்கு நேரம் சரியாய் இருக்கும் போலிருக்கே! படிப்பு?

''ஓவியப் போட்டிகளில் மட்டும் அல்ல; படிப்பிலும் எப்பவும் நான்தான் முதல் மாணவி. என்னைப் பொறுத்தவரை ஓவியப் போட்டிகளோ, மற்ற எந்தப் பொது அறிவுப் போட்டிகளோ என் படிப்புக்கு இடையூறாக இருப்பதில்லை. எவ்வளவு தான் சிறப்பாக ஓவியம் வரைந்தாலும் எனக்குப் பிடித்த கணிதத்தில் பெரிய மேதையாகி கணித மேதை இராமானுஜம் போல் பெயரெடுக்க வேண்டும் என்பது தான் எனது விருப்பம்.''

வண்ணப்படம், பேட்டி:

ராஜா பொன்சிங்



லேசர் ஒளி

அமெரிக்காவில் பிரபல மருத்துவமனை ஒன்றில் மிகவும் சிக்கலான ஓர் ஆபரேஷன். நோயாளியின் மண்டையோட்டுக்குள், மூளைப் பகுதியில் ஒரு கட்டி. நோயாளி பல ஆண்டுகளாக நரக வேதனை அனுபவித்து வருகிறார். மண்டையோட்டைப் பிரித்துக் கட்டியை அகற்ற வேண்டும். சிக்கலான ஆபத்தான ஆபரேஷன். குண்டூசியின் கொண்டையளவே உள்ள மிக நுண்ணிய ஒளிக்கற்றை ஒன்றைச் செலுத்தி, அந்தப் பொல்லாத கட்டியைச் சுட்டெரித்து வெட்டி அகற்றுகிறார்கள். மூளைக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை. அவர்கள் பயன்படுத்தியது லேசர் ஒளிக்கற்றையை!

இமயமலை மிக மிக மெதுவாக, மனிதனால் உணர முடியாத அளவில் அசைந்து கொண்டிருக்கிறது என்ற தகவலைப் புவியியல் நிபுணர்கள் கூறிய போது அதை அப்படியே ஏற்க எல்லோரும் தயங்கினர். தங்கள் கண்டுபிடிப்பைப் பரிசோதனை வாயிலாக அவர்கள் நிரூபித்துக் காட்டிய போது யாராலும் மறுக்க முடியவில்லை. இந்தப் பரிசோதனைக்கு உதவியது லேசர் ஒளிக்கற்றையே.

உலகப் புகழ்பெற்ற விலைமதிப்பே இல்லாத ஒரு வைரம் ஒருவருக்கும் தெரியாமல் மாற்றப்பட்டு, அந்த இடத்தில் ஒரு போலி வைரம் வைக்கப்பட்டு விட்டது என்று ஒரே வதந்தி. இதை எப்படிக் கண்டுபிடிப்பது? பல பரிசோதனைகளுக்கு அந்த வைரத்தை உட்படுத்த வேண்டும். அதன் காரணமாகவே கூட அந்த வைரம் தன் தன்மையை இழந்து விடலாம். இழப்பு எதுவுமே இல்லாமல் இந்தச் சிக்கலான பரிசோதனையை எளிதில் நிறைவேற்றப் பெரிதும் உதவியாய் இருந்தது அதே லேசர் ஒளிக்கற்றைதான்!

வல்லரசு நாடுகளிடையே அணு ஆயுதங்களைச் செய்வதில் போட்டி. தங்கள் பகை நாடுகளை எந்தக் கணமும் தாக்க இவை ஏவுகணைகளைத் தயாராக வைத்துள்ளன. ஏதாவது ஒரு நாடு ஏவுகணையை ஏவினால் உலகத்தின் கதி என்ன ஆவது? இந்த ஏவுகணையை வழியிலேயே தடுத்து, எதிர்த்து, பொசுக்கிச் செயலற்ற தாக்கி விடும் வல்லமை இந்த லேசர் ஒளிக்கற்றைக்கு உண்டு!

மருத்துவத் துறையில், புவியியல் துறையில், பௌதிகத் துறையில், அணுஇயல் துறையில் என்று பல துறைகளிலும் தனது தனித் தன்மையைக் காட்டித் தன்னிகரில்லாமல் விளங்கும் இந்த லேசர் ஒளிக்கற்றை எப்படி உருவாக்கப்படுகிறது? சாதாரண ஒளிக்கற்றைக்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

எல்லா அணுக்களிலும் நியூட்ரான்களும்புரோட்டான்களும் மறைந்துள்ளன. அணுக்களை மின்சாரத்தால் கிளர்ச்சியடைய வைத்தால் இவை ஒளி அணுக்களை (போட்டோன்ஸ்) வெளியிடுகின்றன. சூழ்நிலை மாற்றங்களை ஏற்று, இவை மற்ற அணுக்களுடன் மோதி, கண்ணாடியில் எதிரொலித்து, பெருகி, அழுத்தச் செறிவு பெற்று ஒளிக் கதிர்களாக (ஒளிக் கற்றைகளாக) ஊடுருவி வெளியே வரும். இந்த ஒளிக் கற்றையே லேசர்.

எதையும் சாதிக்கவல்ல இந்த லேசர் ஒளிக்கற்றையின் நீள அளவும், நிறமும், குணமும் இந்த லேசர் தயாரிக்கும் கலத்தில் பயன்படுத்தப்படும் (லேசர் மீடியா) பொருள்களைப் பொறுத்தது ஆகும். வாயு லேசருக்கு ஹிலியம், நியான், ஆர்க்கான், க்ருப்டான், கார்பன்—டை—ஆக்ஸைடும், திடப் பொருள் லேசருக்கு 'டை'யும்,


லேசுப்பட்ட ஒளியல்ல!

திரவ நிலை லேசருக்கு மாணிக்கமும் (ரூபியாக்கும்) பயன்படுத்தப்படுகின்றன.

சாதாரண ஒளிக்கற்றை ஒரே சீராக இருக்காது; நெடுந் தொலைவு எட்டாமலேயே விரிவடைந்து கலைந்து விடும். ஆனால், லேசர் ஒளிக்கற்றை எவ்வளவு தொலைவு சென்றாலும் எளிதில் கலைவதில்லை. எளிதில் கரைவதில்லை; எளிதில் விரிவடைவதில்லை.

சந்திரனில் உள்ள ஒரு பொருளை, லேசர் ஒளிக்கற்றையால் காண முடியும். இப்படி 1962 ஆம் ஆண்டு மே 9 ஆம் நாளன்று செலுத்தப்பட்ட லேசர் ஒளி, சந்திரனில் பிரதிபலித்துப் புதிய வரலாற்றைத் தோற்றுவித்துள்ளது.

இந்த லேசர் ஒளிக்கற்றைக்கு முன்னோடி என்ன? அணுக்களால் ஏற்கப்படும் ஒளியைத் தூண்டி சக்தி செறிந்த ஒளிக்கதிர்களாக மீண்டும் வெளியிட வைக்கலாம் என்ற சாத்தியக் கூறை 1917ல் ஐன்ஸ்டைன் வெளியிட்டார். 1928ல் கண்டுபிடிக்கப்பட்டு, 1930ல் நோபல் பரிசு பெற்ற 'ராமன் ஒளிச் சிதைவு'ம் ஒளிக்கதிர் விளைவில் ஆராய்ச்சியாளரை முடுக்கி விட ஒரு காரணமாக அமைந்தது.



சார்லஸ் எச். டவுன்ஸ் என்ற விஞ்ஞானி குறைந்த ஒளிச்செறிவுள்ள மைக்ரோ கதிர்களைப் பயன்படுத்த 1951ல் 'மேசர்' என்ற ஒரு கருவியை உருவாக்கினார். இதையே மேலும் மாற்றி, அபிவிருத்தி செய்து ஒளிக் கதிரைச் செறிவூட்டும் முறையைக் கண்டுபிடித்தார். இதுவே லேசர் ஒளிக்கற்றை.

தனது கண்டுபிடிப்புக்களை விளக்கி, எச். டவுன்ஸ், தனது நண்பர் ஆர்தர். எல். ஷ்கா லோவுடன் சேர்ந்து 1958ல் ஒரு கட்டுரையைப் பதிப்பித்தார். இதில் லேசர் ஒளிக்கற்றையை உருவாக்கும் சாதனத்தின் அடிப்படை வடிவம் செயல் விளக்கமாகத் தரப்பட்டிருந்தது. அதோடு லேசர் ஒளிக்கற்றையின் பயன்களும் தரப்பட்டிருந்தது.

இக்கட்டுரை தொழில்துறையாளர்கள் பலரைக் கவர்ந்தது. டாக்டர் தியோடர் மெய்மான் என்பவர் செயற்கை மாணிக்கத்தால் ஆன ஒரு தண்டை அமைத்து, லேசர் ஒளிக்கற்றையை உருவாக்கக்கூடிய ஒரு கருவியைச் செய்தார்.

இந்தக் கருவிகளை அமைக்கத் தேவைப்படும் மூலதனம், இடம் ஆகியவை பெரிய பிரச்சினையாக இருந்தன. அதோடு இப்படி ஒரு கருவியைத் தயாரித்துக் கொண்டால் அதை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான தொழில் (நுட்ப) அறிவும், அதை அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடிய வசதியும் அன்று யாருக்கும் இல்லை. அதனால் இது பிரபலமடையவில்லை.

சேரநம்பி

ஆனால் லேசர் ஒளிக்கற்றையின் விளக்க முடியாப் பயன்களை ஊகித்த நிபுணர்கள், இக் கருவியை எளிதில், செலவு அதிகமில்லாது கண்டுபிடிக்கக்கூடிய வழிகளை இடைவிடாது ஆராய்ந்தனர். அதில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

லேசர் ஒளியின் சக்தியானது (பவர்) மின்சாரத்தைப் போலவே 'வாட்ஸ்' அளவில் கணக்கிடப்படுகிறது.


கடினமான ஓர் உலோகத்தைத் துளையிட வேண்டுமா? நீருக்கடியில் அமிழ்ந்துள்ள இயந்திரத்தின் பழுதுபட்ட இணைப்பைப் பற்ற வைக்க வேண்டுமா? பாதுகாக்கப்பட்ட காப்பகங்களுக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் அணுவைச் செயலிழக்க வைக்க வேண்டுமா? லேசர் ஒளிக்கற்றையால் இயலும்!

மருத்துவத் துறையில் லேசர் ஒளிக்கற்றையின் பங்கு மகத்தானது. கத்தியை எடுக்க அவசியமின்றிக் கட்டிகளைச்சுட்டுப் பொசுக்கி நீக்குகிறது. தசைகளைத் தைத்து இணைக்கிறது; ரத்த நாளத்தில் உருவாகும் அடைப்பை நீக்குகிறது; சிறுநீரகக் கல்லைக் கரைக்கிறது!

இன்று ஊசியால் இசைக்கப்படும் கிராமபோன் தட்டுகள் நாளடைவில் தேய்ந்து பழுதடைவதைத் தடுக்க, லேசர் ஒளிக்கற்றை கொண்டு இயங்க வைக்கப்படுகின்றன.

லேசர் ஒளிப்பாதையால் இயங்க வல்ல லேசர் டெலிபோன் தொடர்புகள் வெற்றிகரமாகச் செயல்படுவதைக் கண்டறிந்துள்ளனர். ஒலி அலையை விட, ஒளி அலைதான் வேகம் மிக்கது. எனவே மின்னல் வேகத்தில் இவை துல்லியமாக இயங்கும். அதோடு இதில் 'கிராஸ்டாக்' என்ற குறுக்குப் பேச்சுக்கு வாய்ப்பே இருக்காது!

வருங்காலத்தில் லேசர் ஒளிக்கற்றை என்னவெல்லாம் செய்யப் போகிறது என்பதை யாராலும் ஊகிக்க முடியாது. காரணம், இது எல்லாத் துறைகளிலும் பயன்படக் கூடிய 'சகல கலா வல்லவனாக' இருப்பதுதான்!



பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—


In a class of its own
Exclusive pencils for one and all,
LION PREMIER® HB PENCILS
Sleek, Elegant, meant for executives and others, who like style A consistent dark tone for effortless writing - micronized lead for unbreakable points are what adds to its superiority.
L.P.P. LTD. ✳ PREMIER ✳ 261 ✳ HB ✳ BONDED LEAD
LION PINKY® PENCILS
Lion 'PINKY' Pencils Pretty Perfect, Ideal for children because of its pretty designs & colours. Strongly bonded lead for unbreakable points and super smooth writing add to its attraction.
PINKY
LION Geematic® DRAWING PENCILS
Lion Geematic Drawing Pencils- A unit for all Professionals like artists, architects, designers & engineers. Give expertise an edge. Available in 14 grades from H to 6H and B to 6B HB and F
L.P.P. LTD. Geematic DRAWING 555 6B
LION PENCILS LTD
95, Parijat, Marine Drive
BOMBAY 400 002


REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka
MAGGI CLUBBERS FUN LOVERS
MAGGI CLUB
லாஸ் ஆஃப் தி ஜங்கிள் கேம்
ஸ்நாப்
ஸஃபாரி கேம்
மேகிகிளப்: வாருங்கள்,
வனவிலங்குகளுடன்
விளையாட!
உங்கள் பரிசுகளைப் பெறுங்கள். இலவசம்!
டிஸ்னி டுடே காமிக்
ஃபாரஸ்டு ஃபேசஸ் கேப்
மற்றும் மாஸ்க் செட்
ஜங்கிள் ஸ்டேண்டீஸ் செட்
MAGGI
2-Minute noodles
FAST TO COOK! GOOD TO EAT!
எங்கள் விலாசம்: மேகி கிளப்
தபால் பெட்டி எண்: 5788
புது தில்லி-110055
மேலும்: இதுவரை "டிராவல் இந்தியா கேம்" ஐப் பெற்றுக்
கொள்ளவில்லை என்றால், இப்போது பெற்றுக் கொள்ளுங்கள்.